1397

# தமிழரசு

புரட்டாசி

OFFICE OF THE REGISTRAR
21 SEP 1938



## சந்தா நேயர்களுக்கு

1. சந்தாத் தொகையை முன்னதாக மணியார்டர் மூலம் அனுப்ப வேண்டும். வி. பி. யில் பெறுவதென்றால் ரிஜிஸ்டர் சார்ஜ் 3 அணா, மணியார்டர் கமிஷன் 2 அணா, வி. பிக்குத் தபால் சார்ஜ் ½ அணா, ஆக 5½ அணா சேர்த்து ரூபா 1-5-6 கட்டி வி. பி. யைப் பெற நேரிடும். மணியார்டர் அனுப்பினால் ரூ. 1-2-0 மட்டுமே யாகும். ஆதலால் முன்னதாக மணியார்டர் அனுப்பிப் பத்திரிகை பெற்றுக்கொள்வதே இரு சாராருக்கும் நலமாகும். இது முக்கியமாய்க் கவனிக்க வேண்டிய விஷயம்.

2. இடம் மாறும் சந்தாதாரர்கள் தங்கள் புதிய விலாசத்தோடு சந்தா எண்ணையும் குறிப்பிட்டு எழுத வேண்டும்.

3. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும் மணியார்டர் அனுப்பும் பொழுதும் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிட்டு எழுத வேண்டும். இன்றேல் பதில் செய்ய இயலாது. பதிலை விரும்புவோர் ரிப்ளை கார்டாவது தபாற் பில்லையாவது அனுப்ப வேண்டும்.

---

## சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட | இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாட்டிற்கு | ரூ 1—0—0 |
| | பினாங்கு, சிங்கப்பூர், தென் ஆப்ரிக்கா முதலிய வெளி நாடுகளுக்கு | 2—0—0 |
| | ஜீவிய சந்தா | 20—0—0 |
| | தனிப் பிரதி விலை | 0—1—0 |
| | மலாய் நாட்டுக்கு 10 காசு அல்லது | 0—2—0 |

**மாதிரி சஞ்சிகை இனாம்.**

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

**ஒவ்வோரு ஆங்கில மாதம் 15-ஆம் தேதியிலும் வெளிவரும்.**

---

## விளம்பர விகிதம்

| | | | |
|---|---|---|---|
| உட்பக்கம் | ஒன்றுக்கு | 1-மாதத்திற்கு | ரூ. 20—0—0 |
| ,, | அரைப் பக்கத்திற்கு | ,, | 12—0—0 |
| ,, | கால் பக்கத்திற்கு | ,, | 6—8—0 |
| கவர் | 3-வது பக்கத்திற்கு | ,, | 30—0—0 |
| ,, | 4 ,, | ,, | 50—0—0 |

**இதர விவரங்களுக்கு எழுதவும்.**

மானேஜர்,
'தமிழரசு' ஆபீஸ்,
31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

வெளி வந்துவிட்டது! வெளி வந்துவிட்டது!!

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள்

எழுதிய

JUN 1936
MADRAS

# ஜீவ ரகசியம்

என்ற அரிய ஆராய்ச்சி நூல் வெளிவந்து விட்டது

உயிரை வளர்ப்பதற்கும், உய்விப்பதற்கும் உரிய வழிகளைப்பற்றி இந்நூலில் பெரிதும் ஆராயப்பட் டிருப்பதால் இதற்கு 'ஜீவரகசியம்' என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இதில் டாக்டர். முதலியார் அவர்கள் நீண்ட காலமாக அனேக சாதுக்களிடத்திலும், யோகிகளிடத்திலும், அறிஞர் களிடத்திலும் பழகி அவர்களிடமிருந்து அறிந்து கொண்ட விஷயங்களில் தமது அறிவிற்கும் அனுபவத்திற்கும் உண்மை யெனப்பட்ட பல அரிய பொருள்களை ஆராய்ந்திருக்கிறார்கள்.

இந் நூலில் உயிர் வாழ்வதற்கு மிகவும் அவசியமான சுகத்தை—தேக சுகம், மனோ சுகம், ஆன்ம சுகம் என மூன்று பிரிவாக வகுத்து ஒவ்வொரு பிரிவைப் பற்றியும் விரிவுபடுத்தி எழுதப்பட் டிருக்கிறது. நீராடும் நெறி, மூச்சு விடும் வகை, சூரியனால் அடையும் பயன், காற்றின் உபயோகம் சரீர நிலை அறிதல், வழிபாடுகளின் உண்மைத் தத்துவங்கள் முதலான பல இன்றியமையாத பொருள் களைப் பற்றியும் இதில் ஆராயப்பட்டுள்ளது. மற்றும் இப் புத்தகத்தில் சகல மதங்களின் உற்பத்தியைப் பற்றியும், அவற்றின் கருத்துக்களைப் பற்றியும் அறியலாம்.

இந்நூலை ஒவ்வொருவரும் படித்தறிய வேண்டியது மிகமிக அவசியமாகும்.

இதன் விலை ரூபா 1.

தபால் சார்ஜ் வேறு.

'தமிழரசு' புத்தகாலயம்,
31, வைத்தியநாதமுதலி வீதி, சென்னை.

# சகல மேக சித்தாதி எண்ணெய்



இந்த எண்ணெயைக் காலையில் ஒரு தேக்கரண்டி அல்லது அரை அவுன்சு எடுத்துக்கொண்டு 1/8 படி பசும்பாலில் கலந்து சாப்பிட வேண்டும். இரண்டு மூன்று தரம் மலம் தள்ளும். மேக வாய்வு, கை கால் பிடிப்பு, உடம்புவலி நீங்கும். வயிற்றில் தங்கிய வாய்வையும் வெளிப்படுத்துவதுடன், பெண்களுக்குண்டாகும் சூதக வாய்வு, சூதக வலி, பித்த குன்மம், வெள்ளை வியாதி, மூலம், பவுத்திரம், குஷ்டம் இவைகளைப் போக்கும். வயிற்றிலுள்ள இரணங்களை ஆற்றும்.

இந்த எண்ணெய் சாப்பிடும்போது தயிர் சாதம் அல்லது மோர் சாதம் சாப்பிட வேண்டும். எண்ணெயை இரண்டு நாளைக்கு ஒரு

அன்பே ஆண்டவன்

# தமிழரசு

## ஒரு செந்தமிழ் மாத வெளியீடு

---

'எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்...'

ஆசிரியர்: டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்

| மலர் | | இதழ் |
|---|---|---|
| 6 | யுவ௵ ஆனி௴ 1௳<br>1935௵ ஜூன்௴ 15௳ | 6 |

## பொருள் அடக்கம்

ஆசிரியர் குறிப்புகள் ... 402
'ராமநாதன் காதலி—கமலா' ... 408
வெளி விகடம் ... 415
பழக்க வழக்கங்கள் ... 417
புஷ்பவல்லி ... 421
காதலா? நேசமா? ... 430
தனயன் காதலியை தந்தை மணத்தல் ... 434
கோகிலா ... 440
கனகவல்லி ... 450
'.........மையிலிற்பட்டார் தமக்கு ............மதியுண்டாமோ?' 458
இந்தியா கிராமத்தில் சாக்ரடீஸ் ... 466
பாரிஜாதம்—கைகாரி? ... 475

---

குறிப்பு:—'தமிழரசி'ல் வெளிவரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களாகும். அவை யாரையும் குறிப்பிடுவன வல்ல.

கட்டுரையாளர்களின் கருத்துக்களுக்கும், அபிப்பிராயங்களுக்கும் ஆசிரியர் ஒரு சிறிதும் பொறுப்பாளி யாகார்.

நம்பிப் பிரசுரிக்கும் கட்டுரைகள் முன்னரே உரிமை செய்யப்பட்டவை யாயின் அதற்குப் பத்திராதிபர் உத்தரவாதியாக மாட்டார்.




## பூகம்பப் பூதம்

இவ்வாழி சூழ் வையகத்தில் கொடுமைபெருகி பூபாரம் அதிகமாகும்போது இறைவன் அவதாரம் செய்து சம்மாரம் செய்வான் என்பது புராணக் கூற்று. இப்பொழுது வையகமோ ஆராய்ச்சி வையகமா யிருக்கிறது. ஆகவே இதில் மிகப் பலருக்கு நம்பிக்கை ஏற்படுவது முடியாத காரியம். இது எப்படியிருப்பினும் இருக்க. இதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால் இப்பொழுது வேறுவிதமாக அந்தச் சம்மாரம் நடந்து வருகிறது. அவைகளில் ஒன்று காற்றுடன் கூடிய மழையும் வெள்ளமும் செய்யும் சம்மாரம். மற்றொன்று பூகம்பப் பூதம் செய்யும் சம்மாரம். ‘மணிமேகலை’ ‘சிலப்பதிகாரம்’ முதலிய செந்தமிழ் நூல்களில் பூதங்களின் சேஷ்டைகளைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் அப்பூதங்களின் சேஷ்டை இந்தப் பூகம்பப் பூதத்தின் சேஷ்டைக்கு ஒரு சிறிதும் ஒப்பாகாது. இந்தப் பூதமோ ஊர்களையும் நாட்டையும் அப்படியே அழித்துவிடுகிறது. பல்லாயிரக்கணக்கான மக்களைக் கொன்று அப்படியே விழுங்குகின்றது. நம்நாட்டிலே இந்த பூதம் தலைவிரித்தாடுகின்றது. சென்ற வருஷத்திற்றான் பீஹாரில் பூகம்பம் ஏற்பட்டு பல்லாயிரக் கணக்கானபேர் மாண்டனர். நகரங்களும், கிராமங்களும் நாசமடைந்தன. சொத்துக்களும் சேதமடைந்தன. மற்றும் எண்ணிறந்தபேர்கள் உண்ண உணவும், உடுக்க உடையுமின்றித் தவித்தனர். பரோபகாரமே உருவாகவுடைய நம் நாட்டினர் உடனே முன்வந்து அவர்களுக்கு வேண்டுவன உதவி செய்ய பெருந்தொகைகள் நன்கொடை யளித்தனர். அந்தக் கோர சம்பவம் நம்மக்கள் மனதைவிட்டு அகலவில்லை. அதற்குள்ளே பூகம்பப் பூதம் மற்றொரு சம்மாரம் செய்ய ஆரம்பித்துவிட்டது. சென்றமாதம் (மே) 31ந்தேதியன்று குவெட்டாவிலும் அதைச் சுற்றிலுமுள்ள பிரதேசங்களிலும் பெரிய பூகம்பம் ஏற்பட்டது. இந்தப் பூகம்பம் பீஹாரில் ஏற்பட்ட பூகம்பத்தையும்விட கோரமானதா யிருக்கிறது. 70000 ஜனத்தொகையுள்ள குவெட்டா நகரில்மட்டும் 26000 பேர்களுக்கு மேல் மாண்டிருக்கின்றனர் என்றால் இதன் கோரத்தையும் கொடுமையையும் வேறே வருணிக்கவும் வேண்டுமோ? இதுவரை பூகம்பத்தால் 56000 பேர்களுக்கு மேல் இறந்திருப்பதாய் செய்தி கிடைத்திருக்கிறது. நகரங்களும் ஊர்களும் தரைமட்டமாகிவிட்டன.

அங்கு எஞ்சியிருப்பவர்கள் உணவுக்கு வழியில்லாது தவிக்கின்றனர். அரசாங்கத்தாரும் சில ஜீவகாருண்ணிய பொதுஸ்தாபனங்களும் அவர்களுக்கு வேண்டும் உதவிசெய்துவருவது போற்றத்தக்கதாகும். வைஸ்ராயும் காங்கிரஸ் தலைவர் திரு. பாபுராஜேந்திர பிரசாத்தும் பூகம்பப் பூதத்தால் துன்புற்றவர்கட்கு உதவிசெய்ய பணஉதவி செய்யுமாறு நாட்டினருக்கு வேண்டுகோள் வெளியிட்டுள்ளனர். ஜீவகாருண்ணியம் நிறைந்த, வேளாண்மை செய்வதில் புகழ்பெற்ற நம்மக்கள் தங்களாலானதைக் கொடுப்பார்கள் என்று நம்பிபுறோம். பணம் ஒன்றுதான் கொடுத்து உதவி செய்யலாம் என்பதில்லை. உணவுப் பொருள்கள் கொடுக்கக்கூடியவர்கள் அவைகளைக் கொடுத்துதவலாம். ஆடைகள் கொடுக்கக்கூடியவர்கள் அவைகளைக் கொடுத்துதவலாம். இங்கு நாம் ஒன்றுகூற விரும்புகிறோம். நாட்டிலோ பணக்கஷ்டமேற்பட் டிருக்கிறது. பணமில்லாது ஜீவனத்துக்குப் பலர் கஷ்டப்படுகின்றனர். மற்றும் இவ்விதமான நிலையிலும் இப்படிப்பட்ட பரோபகாரமான காரியங்களுக்கு பன்முறை உதவி செய்து அவர்கள் வெறுங்கையராய் நிற்கின்றனர். எனவே அரசாங்கத்தார் மன்னர்பிரானின் இருபத்தைந்தாண்டுகள் ஆட்சிப் (ஸில்வர் ஜூப்லி) பூர்த்தி விழா ஞாபகார்த்தத்திற்கு வசூலித்த தொகையை இந்த கஷ்டநிவர்த்தி வேலைக்குச் செலவிடலாம். அந்தந்த மாகாணங்களில் வசூலாகும் தொகைகளில் பெரும்பாகத்தை அந்தந்த மகாணங்களிலே செலவிடப்படும் என்று உறுதிகூறி யிருந்தபோதிலும் அத்தொகையை இப்படிப்பட்ட கோரமான சம்பவக் கஷ்ட நிவர்த்திக்கு செலவிடுவதை எந்த மாகாணமாவது ஆட்சேபிக்கும் என்று நாம் கருதவில்லை. இந்தப் பூகம்பப் பூதத்தை விரட்ட ரசாயன ஆராய்ச்சியாளர்கள் பாடுபடுகின்றனர். அவர்கள் பூகம்பம் ஏற்படுவதற்கு ஏதேதோ காரணங்கள் கூறுகிறார்களேயன்றி அதைத் தடுப்பதற்கு ஒருமுறையும் கண்டார்களில்லை. இதனால் எவ்வளவுதான் சயின்ஸ் முன்னேற்றமடைந்தாலும், அது இயற்கையை வெல்ல முடியாது என்று துணிந்து கூறலாம். ரசாயன ஆராய்ச்சியாளர்கள் ஆயிரக்கணக்காகவும் லக்ஷக்கணக்காகவும் உயிர்களை பழி வாங்கும் பூகம்பத்தை தடுக்க விரைவில் ஒரு வழி கண்டு பிடித்து உலகிற்கு பெரும் நன்மையைச் செய்யவேண்டுமாய் பெரிதும் விழைகின்றோம்.

## இளமையில் வறுமை

நாட்டில் வரவர வேலையில்லாத் திண்டாட்டத்தின் கொடுமை அதிகரித்து வருகிறது. அதிலும் படித்தவர்களிடையே அக்கொடுமை இன்னும் அதிகமாகி வருகிறது. தேசத்தலைவர்களும், பத்திரிகைகளும் இக்கொடுமையைப்போக்க அரசாங்கத்தார் ஏதாவது செய்யவேண்டும் என்று எடுத்துரைத்தும் அரசாங்கத்தார் இது

காரும் ஒன்றும் செய்யவில்லை. அவர்கள் வாளா இருக்கின்றனர். படித்தவர்களோ பிழைப்புக்கு வழியேதும் கிடையாது தங்கள் படிப்புக்குள்ள மேன்மையையும் கைவிட்டு சாதாரணமான தொழிலை மேற்கொள்ளுகின்றர். காசியில் நன்கு படித்த ஒரு பாரசிகர் பூட்ஸ்தொடைக்கும் தொழிலை மேற்கொண்டுள்ளார். சிகார்பூரிலும் ஒரு படித்த வாலிபர் அதே தொழிலை கைக்கொண்டுள்ளார். சுக்கூரில் பல படித்த வாலிபர்கள் வெற்றிலை பாக்குக்கடைகள் வைத்துள்ளார்களாம், கல்கத்தாவில் படித்த பட்டதாரிகள் ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத்துக்குக் கொண்டுபோகும் சர்வகலாசாலை புத்தகசாலைக்குப் புத்தகமூட்டைகள் சுமந்துசெல்லும் 12 அணு தினக்கூலிவேலையில் அமர்ந்துள்ளார்கள். ஒருச்சாண் வயிற்றின் பொருட்டுத்தானே இவர்கள் எல்லாம் தங்கள் படிப்பின் மேன்மையையும் கைவிட்டு இன்னோன்ன தொழிலை மேற்கொண்டுள்ளனர். வயிற்றுப் பிழைப்புக்குக்காக எந்தத் தொழிலையும் ஒருவர் மேற்கொள்ளலாம். அது மதிப்பற்ற செய்கையாகாதுதான். ஆனல் பூட்ஸ்தொடைக்கும் தொழிலுக்கும் வெற்றிலை பாக்குக்கடை வைப்பதற்கும், தினக் கூலிக்கு மூட்டை சுமக்கும் தொழிலுக்கும் பி. ஏ., எப். ஏ., எஸ். எஸ். எல். சி. படிப்பு அவசியமா என்பதுதான் கேள்வி? இவர்கள் எல்லாம் தங்கள் கல்விக்கேற்ற வேலையோ அல்லது தொழிலோ கிடைக்கப் பெருததிஞலேயே இத்தகைய தொழிலை மேற்கொண்டுள்ளார்கள்? படித்தவர்கள் இப்படிப்பட்ட தொழிலில் இறங்குவது நாட்டின் சீர் கேடான நிலைமையை காட்டுவதாகும். அச்சீர்கேடு ஆட்சிமுறையையின்பேரிலே பிரதிபலிக்கும். இப்படிப்பட்ட நிலைமை அரசாங்கத்தாருக்கு நற்பெயரைத்தாராது. எனவே அரசாங்கத்தார் இனியாவது இந்தக் கொடுமையைப் போக்க ஏதாவதுசெய்ய முன்வரவேண்டும். வேலையில்லாது திண்டாடும் படித்தவர்கள் எல்லாம் வாலிபர்களே. கொடுமைகளில் எல்லாம் மிகக் கொடியது இளமையில் வறுமையேயாகும். இப்பொழுது இந்நாட்டில் அப்படித்த வாலிபர்கள் எல்லாம் இந்த மிகக் கொடிய வறுமைப் பிணிக்கு ஆளாகியுள்ளார்கள். இந்த வறுமையால் எதைப் பற்றியும் ஆழ்ந்து சிந்திக்கவோ, ஆராய்ச்சிசெய்யவோ அவர்கள் மனம் செல்லாது சோர்ந்துவிடும். அதனல் அவர்கள் அறிவு வளர்ச்சியும் குன்றும். அவர்களில் சிலர் யாதாவதொரு துறையில் கைதேர்ந்தவர்களாகக்கூடிய தன்மையுடையவர்களாயும் இருக்கலாம். அவர்களும் அப்படிப்பட்ட நிலையை அடையமுடியாது போய்விடுகிறது. இதுமட்டு மன்று; இந்த இளமை வறுமை அவர்களுடைய குடிப் பிறப்பின் பெருமையையும் கெடுத்துவிடும். வயிறு காயும்போது எக்குடிப் பிறந்தோராயினும் சும்மா இருப்பரோ? 'பசிவந்திடப் பத்தும் பறந்துபோ மல்லவா?' அவர்கள் எத்தகைய காரியத்தையேனும் செய்து தங்கள் வயிற்றையும், தங்களை அடுத்து நிற்பவர்களின் வயிற்

றையும் நிறைத்துக் கொள்ளவே விரும்புவர். இப்படிப்பட்ட நிலைமை ஏற்படுவது அரசாங்கத்தாருக்கு பெருமை யாகாது. ஆகவே சர்க்கார் இன்னினியே இந்தக் கொடுமையைப் போக்க முயலவேண்டும். சர்க்கார் மட்டுமன்றி ஸ்தலஸ்தாபனங்களும் இக்கொடிய பிணியை நீக்க ஏதாவது செய்யலாம். காஞ்சி முனிசிபாலிட்டி இதில் தனது கவனத்தை செலுத்த முற்பட்டிருப்பது போற்றத்தக்கது. அது இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க என்னசெய்வது என்று ஆராய்ந்து அறிக்கை செய்ய ஐந்துபோடங்கியதோர் கமிட்டி நியமித்துள்ளது. மற்றைய ஸ்தலஸ்தாபனங்களும் காஞ்சி முனிசிபாலிட்டிகாட்டிய வழியைப் பின்பற்றி நடந்து இந்தக்கொடிய பிணியைத்தீர்க்க முன்வரும் என்று நம்புகின்றோம்.

## காகிதக் கிறலா?

நம் நாட்டில் பாலிய விவாகங்களினால் விளையும் கேடுகள் கணக்கற்றன என்றும், அதனால் அவைகளை நீக்கவேண்டும் என்றும் அறிஞர்கள் பலர் பன்னெடுநாட்களாக முயன்று வந்தனர். வைதீகப் பீடைகள் அவர்கட்கு இழைத்துவந்த இடைஞ்சல்களோ எண்ணிறந்தன. கடைசியில் அந்த அறிஞர்கள் முயற்சி பலன் தந்தது. பாலிய விவாகத்தைத் தடுக்கச் சாரதாச்சட்டம் இயற்றப்பட்டது. அதைச் சட்டமாக்கிய பெருமை முன்னிருந்த சுயராஜ்ஜியக் கட்சியைச் சேர்ந்ததாகும். அச்சட்ட மியற்றப்பட்டு அது அமுலுக்கு வந்தும் பாலிய விவாகங்களை நடத்த வைதீகர்கள் பல தந்திரங்களைக் கையாண்டனர். பலர் சுதேச சமஸ்தானங்களுக்குச் சென்று பாலிய விவாகங்களை நடத்தலாயினர், நடத்துகின்றனர். சமஸ்தானங்களில் பலவற்றில் இவ்விதமானதோர் சட்டமில்லாதிருப்பது அவர்களின் இத்திய செயலுக்கு பேருதவியாக இருக்கிறது. அதைத் தடுக்க பிரிட்டிஷ் சர்க்கார் நேரடியாக எதுவும் செய்ய இயலாதிருக்கின்றனர். தனது சமஸ்தானத்தில் இவ்விதம் பாலிய விவாகங்கள் பெருகுவதைப் பார்த்த கபூர்தலா சமஸ்தானாதிபதி அவைகளை தடுக்கும் நோக்கத்துடன் பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து வந்து தனது சமஸ்தானத்தில் பாலியவிவாகம் செய்யும் பெண்வீட்டார் ரூ. 100ம் மாப்பிள்ளை வீட்டார் ரூ. 100ம் வரிகட்டவேண்டும் என்றும் விதித்துள்ளார். இந்த வரியினால் பாலிய விவாகங்கள் நடைபெறுவதே நின்றுவிடும் என்று கூறுவதற்கில்லை. ஆனால் இதில் சமஸ்தானாதிபதி காட்டும் நோக்கம் அறிவுபடைத்தோர்களால் போற்றத்தக்கதாகும். கடந்த ஒருவருஷத்தில் மட்டும் அச்சமஸ்தானத்தில் 1500 பாலிய விவாகங்கள் நடந்திருக்கின்றனவாம். எனவே, 1500 பாலியப் பெண்களில் எத்தனைபேர் தாங்கள் கன்னிப்பருவ மடையுமுன் கணவனை இழந்து கதறிநிற்கப் போகிறார்களோ நாம் அறியோம்.

சமஸ்தானங்களிற் சென்று திருட்டுத்தனமாய் பாலியவிவாகம் செய்வது ஒருபுறமிருக்க, இப்பொழுது பிரிட்டிஷ் இந்தியாவிலேயும் பாலியவிவாகங்கள் நடத்தப்படுகின்றன. சாரதாசட்டத்தைப் பற்றிய பயம் வைதீகர்கட்கு இப்பொழுது இருப்பதாக நினைப்பதற்கில்லை. அச்சட்டத்தை அவர்கள் வெறும் துண்டுக்காகிதக் கிறல் என்று கருதுவதாகவே நினைக்கவேண்டி இருக்கிறது. பாலியவிவாகங்கள் நடைபெறுவதை தடுக்கப் பல சங்கங்கள் ஏற்பட்டும் பலனில்லாதிருக்கிறது. இப்படிப்பட்ட நிலை ஏற்படுவதற்குச் சட்டத்திலிருக்கும் குறையே காரணம் என்று ஊகிக்கவேண்டியிருக்கிறது. சட்டத்தில் பாலிய விவாகத்தை தடுக்கும்படியோ அல்லது பாலிய விவாகம் நடத்தினூர்கள் என்றோ அதிகாரிகளுக்கு மனுச் செய்துகொள்ளுகிறவர்கள் ரூபா 50 முன்னதாக கோர்ட்டில் கட்டவேண்டும். அவர்கள் தொடுத்த வழக்கு வெற்றியடைந்தால் அந்தப்பணம் அவர்கட்கு திரும்பிக் கொடுக்கப்படும். இல்லையேல் அதை பறிமுதல் செய்யப்பட்டுவிடும். இக்காரணத்தினாலேதான் பலர் பாலியவிவாகம் நடப்பதை யறிந்தும் அதைத் தடுக்க முன்வராது இருந்துவிடுகின்றனர். எனவே சாரதாச்சட்டம் சரியானபடி அமுலில் இருக்கவேண்டுமானால் இந்த விதியை திருத்தி பாலியவிவாகங்களைத் தடுக்க முன்வருபவர்கள் ஆதரிக்கக்கூடியமாதிரி விதிசெய்யவேண்டும். மற்றும் சாரதாச்சட்டம் ஏற்பட்ட காலமுதல் இதுவரை அது வேலை செய்திருப்பதைப் பற்றி விசாரணை நடத்துவதும் அந்தச் சட்டத்தை இனிமேல் தீவிரமாக அமுல் நடத்த உதவியாக விருக்கும். அரசாங்கத்தாரோ அல்லது இந்தியச் சட்டசபை மெம்பர்களோ இதில் சிறிது கவனம் செலுத்தி வேண்டுவன செய்வது தேசத்திற்கு நன்மை பயக்கும்.

'விடுதலை'

ஜஸ்டிஸ் கட்சியின் தாய் மொழிப் பத்திரிகையான 'விடுதலை' யின் இதழ்கள் வரப்பெற்றோம். ஜஸ்டிஸ் கட்சியார் இப்பத்திரிகையை ஆரம்பித்திருப்பது இதுகாறும் தாங்கள் புறக்கணித்து வந்த ஒரு தொண்டை உணர்ந்திருப்பதற்கு அறிகுறியாகும். ஒரு கட்சிக்கு பெரும் பலம் பத்திரிகையே. அதுவே அதற்கு ஊன்று கோலாகும். இதை உணர்ந்து இப்பொழுது இப்பத்திரிகையை ஆரம்பித்திருப்பது போற்றத்தக்கதாகும். பார்ப்பனரல்லாப் பெருங்குடி மக்கள் இதைக் கண்டு மனங்களிப்பர் என்பது திண்ணம். இதற்கு முன்னிருந்ததைவிட இப்பொழுதுதான் ஜஸ்டிஸ் கட்சியார் பலம்பெற்று தீவிரமாக வேலைசெய்ய வேண்டிய காலம். எல்லாத் துறையிலும் பார்ப்பன ஆதிக்கத்தை யொழிக்க இக்கட்சியினர் இருபதாண்டுகளாய் வேலைசெய்தும் இன்னும் அதைச்சாதிக்க முடியவில்லை. சர்க்கார் காரியாலயங்கள் இன்னும் அக்கிரகாரமாகவே இருக்கின்றன.

மற்றும் எந்தப் பொது ஸ்தாபனங்களிலும் பார்ப்பன ஆதிக்கமே அதிகமாய் இருக்கிறது. இக்கட்சியின் ஓயாத உழைப்பால் பார்ப்பன ஆதிக்கமும் ஒரு சிறிது ஒழியலாம் என்று ஏற்பட்டுவந்த நம்பிக்கையும், பின்னர் நாட்டில் ஏற்பட்ட காரியங்களால், வரவர அற்றுப் போகிறது. சுமார் பத்துப் பதினைந்து ஆண்டுகளாகத்தான் பார்ப்பனரல்லாதார் கல்வியின் அவசியத்தை உணர்ந்து அதை கற்று வருகின்றனர். அவர்கள் படித்துவிட்டு வேலையில்லாது திண்டாடுகின்றனர். அதனால் கல்விக்குப் பணத்தைச் செலவிடுவது பயனற்ற காரியம் என்று கருத ஆரம்பிக்கின்றனர். பார்ப்பனரல்லாத மக்களுக்கு கல்வியில் இவ்விதம் ஆர்வம் குன்றும்படி விடக்கூடாது. படித்தவர்கட்கு ஏதாவதொரு தொழில் கிடைக்குமாறு செய்ய ஜஸ்டிஸ் கட்சியினர் முன்வர வேண்டும். விவசாயிகள் துயரத்தையும்போக்க அவர்கள் முன்வர வேண்டும். இவைகளுக்காகப் பாடுபட 'விடுதலை'யை நாம் மனமுவந்து வரவேற்கின்றோம். 'விடுதலை'யும் தனது நோக்கமும் அதுவேதான் என்று தனது முதல் இதழில் கூறி இருக்கிறது. அதற்கு இதுவரை 'ஜஸ்டிஸ்' (ஆங்கிலப்) பத்திரிகையின் ஆசிரியராக இருந்த திரு. டி. ஏ. வி. நாதன் ஆசிரியராக இருப்பது பார்ப்பனரல்லாத மக்களின் அதிர்ஷ்டமும் 'விடுதலை'யின் அதிர்ஷ்டமுமேயாம். இவர் சர்வகலாசாலை பட்டம் பெற்றிருப்பது ஒருபுறமிருக்க, விஷயங்களை நன்கு உணர்ந்தவராவர். பொருளாதாரத் துறையிலும் விஷயங்களை நன்கு கற்றறிந்தவர். எழுதுவதில் சொல்வன்மையுள்ளவர். இவரை ஆசிரியராகக் கொண்ட 'விடுதலை' நாம் மேலே குறிப்பிட்டபடி பார்ப்பன ஆதிக்கத்தை இடித்துத் தகர்த்து பார்ப்பனரல்லாதாரின் நன்மைக்காகச் சலியாது உழைக்குமென்று நம்புகிறோம். மற்றும் 'விடுதலை' இப்பொழுது வாரம் இருமுறைப் பத்திரிகையாக வெளிவருகிறது. அது அவரையே ஆசிரியராகக் கொண்டு விரைவில் தினசரியாக வெளிவந்து பார்ப்பனரல்லாதார் மனதைக் களிப்புறச் செய்யும் என்றும் நம்புகிறோம்.

---

முத்துராம சாஸ்திரி:—(வந்தவனைப் பார்த்து) நான் உன் முகத்தை அடிக்கடி பார்த்திருப்பதாகத் தெரிகிறதே. எவ்விடத்தில் பார்த்திருப்பேன்?

வந்தவன்:—நான் கள்ளுக்கடையில் வேலை செய்பவன். என்னை அவ்விடத்தில் அடிக்கடி பார்த்திருக்கக் கூடும்.

—எல். கருப்பஞ் செட்டியார்

# 'ராமநாதன் காதலி—கமலா'

—:o:—

[பி. நீலகண்டன்]

'ஜெயபேரிகை' ஆசிரியர் நாகநாதனும் கருணா அண்டு கம்பெனி மானேஜர் ராமநாதனும் இணைபிரியா நண்பர்கள். இருவரும் 'வின்சண்ட்' கலாசாலையில் ஒன்றாகப் படித்தார்கள். அவர்களது படிப்பு முடிந்ததும் இருவரும் சென்னை வந்து சேர்ந்தனர். நாகநாதன் 'ஜெயபேரிகை' என்ற பத்திரிகையை ஆரம்பித்தான். ராமநாதன் வைரவியாபாரம் செய்கிறான். இருவருக்கும் படிக்கும்பொழுதே மணமாகியிருந்தது. நிற்க, ராமநாதனுடைய வீட்டிற்கு நாகநாதன் போய்விட்டால் ராமநாதனுடைய மனைவி ரமணி நாகநாதனிடம் தன் கணவனைப்பற்றி கோள் சொல்ல வாரம்பித்து விடுவாள்.

'அண்ணா! பாருங்கள். இவர் இரவில் கடையை மூடிக்கொண்டு நேரே வீட்டிற்கு வாராமல் எங்கெங்கேயோ செல்கிறாராம்' என்பாள். உடனே நாகநாதன் ரமணி எதிரிலேயே ராமநாதனைப் பார்த்து, 'ஏண்டா அப்படி யெல்லாம் செய்கிறாய்? நான்கூட கேள்விப் பட்டேன். வீட்டில் மனைவி யிருக்கும்பொழுது நீ என் பணத்தை வீண் விரயம் செய்கிறாய்?' என்பான். ராமநாதன் தன் மனைவியைப் பார்த்து, 'ஆமாண்டி! அவனிடம் சொல்லி விட்டாயோல்யோ?' என்று சிரித்த முகத்துடன் கேலியாக கேட்பான். இம்மாதிரி இரு குடும்பங்களுக்கும் அந்நியோநியம்.

நாகநாதனிடம் கார் இருக்கிறது. மோட்டார் சைக்கிளும் இருக்கிறது. நாகன் நன்றாக விடக்கூடியவன் ராமனுக்கும் கார் விடவேண்டுமென்கிற ஆசை. நாகனிடம் கற்றுக்கொள்ள வேண்டு மென்கிற ஆசை. கொஞ்சம் பயத்துடன் விடுவதற்கு கற்றுக்கொண் டான். ஒருநாள் நாகன் வீட்டிலில்லாதபொழுது அவனுடைய காரை எடுத்துக்கொண்டு பக்கத்திலுள்ள கிராமத்திற்கு சென்று வருவதாகக்கூறி புறப்பட்டான். மனதில்மட்டும் பயம். காரை மெதுவாக விட்டுக்கொண்டே ஊரைத்தாண்டினான். அப்பொழுது பின்னால் 'டப, டப டபவென்ற சப்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தான். ஒரு பெண் மோட்டார் சைக்கிளில் வருவது தெரிந்தது. அந்த

மோட்டார் சைக்கில் காருக்கருகில் வந்தது. அந்தப் பெண் 'ஏனையா உமக்கு கார் சரியாய் விடத்தெரியாதா? வழிவிட மாட்டேனென்கிறீரே' என்றாள்.

ராமன்:—ஓ! எனக்கா கார்விடத் தெரியாது. உங்களுக்கு வழி விடுகிறேன்' என்றான். மோட்டார் சைக்கில் முன்னால் புறப்பட்டது. என்னயிருந்தாலும் ராமன் ஆண்பிள்ளை யல்லவா? மோட்டார் சைக்கிலில் அவள் முன்னால்போக, அவன்மட்டும் இவ்வளவு மெதுவாக போவானா? கொஞ்சம் வேகமாக விடமுயற்சித்தான். ஆனால் மனதில் பயம். எனினும் மோட்டார் சைக்கில் முன்னால் ஓடி கண்ணுக்குத் தெரியாமல் மறைந்தது. ராமநாதனுடையகாரும் நெடுந்தூரம் ஓடிற்று. அங்கே மோட்டார் சைக்கிலில் சென்றமாது கீழே இறங்கி நின்றுகொண் டிருந்தாள். ராமநாதன் அவளுக்கருகில் காரைக் கொண்டுபோய் நிறுத்திவிட்டு, 'ஏன் சைக்கில் கெட்டுப் போய்விட்டதா? தங்களுக்கு என்னுடைய உதவி வேண்டுமா?' என்றான்.

அம்மாது:—தங்களுக்கு என்னிடம் பேசவேண்டு மென்கிற ஆசையா என்ன? நான் இளைப்பாறுவதற்காக நிற்கிறேன். தங்கள் உதவி தேவையில்லை 'வந்தனம்' என்றாள்.

இவ்வார்த்தையைக் கேட்டதும் ராமநாதன் காரை விட்டுக் கொண்டு புறப்பட்டான். ஒருமைல்தூரம் ஓடியிருக்கும். அவனுடைய துரதிர்ஷ்டம் 'கிர்...ர்...ர்...டபக்' அவ்வளவுதான், கார்நின்று விட்டது. 'ஏதடா வம்பாய் முடிந்தது' என்று இறங்கி சுற்று முற்றும் பார்த்தான். ஒருவரையும் காணோம்.

எந்த இடத்தில் ரிப்பேர் செய்வது என்று தெரியாது. தனக்குத் தெரிந்தவரையில் எதை எதையோ கழற்றிப் பூட்டினான். ஒன்றும் காரியம் சாயவில்லை. அதற்குள் டர்......டர்......, என்ற சப்தம். மோட்டார் சைக்கில் காருக்குப் பின்னால் வந்து நின்றது. அம்மாது இறங்கி வந்தாள். 'என்னய்யா! நீங்கள் இளைப்பாறுகிறீர்களா? அல்லது கார் ரிப்பேர் ஆய்விட்டதா? என்றாள். ராமநாதன் மெதுவாக 'கார் கெட்டுப் போனதாகத்தான் தெரிகிறது' என்றான். அவன் முகத்தில் வெட்கம் தாண்டவமாடிற்று, 'அப்படியானால் நான் உதவிசெய்கிறேன்' என்று அம்மாது ஏதோ சாமானை கழற்றினாள். ராமநாதன் 'தாங்கள் எங்கு செல்கிறீர்கள்?' என்று வினவினான். அதற்கு அம்மாது நான் அடுத்த சாத்தூர் எனும் கிராமத்திற்குச் செல்கிறேன்' என விடை பகர்ந்தாள்.

ஓஹோ! அப்படியா, நானுந்தான் அங்கு செல்கிறேன், நாளை காலையில் திரும்பவேண்டும். தாங்கள் எப்பொழுது திரும்புவீர்களோ?

'நானும் நாளைக் காலையில்தான் திரும்பவேண்டும். தங்களுடனேயே வருவேன்' என்றாள் அம்மாது. அதற்குள் மோட்டார் ரிப்பேர் செய்யப்பட்டது. அம்மாது தன் சைக்கிலில் புறப்பட்டாள். ராமநாதனும் காரை விட்டான். தனக்கு ஒரு பெண்பிள்ளை உதவி செய்ததை நினைத்தாலே ராமநாதனுக்கு அசட்டுச்சிரிப்பும் வெட்கமும் தோன்றிற்று.

சாத்தூரை அடைந்தார்கள். ராமநாதன் பரிமள விலாஸ் ஹோட்டலில் காரை நிறுத்தினான். அம்மாதும் அங்கேயே தன் சைக்கிலை நிறுத்தினாள். ராமநாதன் ஹோட்டல் மானேஜரிடம் தனக்கொரு ரூமும் அம்மாதுக்கு ஒரு ரூமும் வேண்டுமென்று கேட்டான். ரூம் சுத்தம் செய்து மேல்மாடியில் விடப்பட்டது. மேல் மாடியில் இருப்பது இரண்டறை. ராமநாதன் ஒன்றிலும் அம்மாது ஒன்றிலுமாக தங்கினர்.

அரைமணி நேரம் பொறுத்து ராமநாதன் தன் அறையை விட்டு வெளியில் வந்தான். அம்மாது இருக்கும் வாசற்கதவண்டைப் பக்கம் வந்ததும் அக்கன்னிகை தலையைத்தூக்கிப் பார்த்தாள்.

'நான் உள்ளே வருவதில் தங்களுக்கு ஆக்ஷேபனையிராதென்று நினைக்கிறேன்' என்று ஆங்கிலத்தில் கேட்டான். 'அம்மாது தாங்கள் வாலாம்' என்று ஆங்கிலத்திலேயே பதிலளித்தாள். ராமநாதனுக்கு ஏற்கனவே அக்கன்னிகையின் வாலாற்றையறிய வேண்டுமென்கிற ஆவல். அவள் ஆங்கிலத்தில் பேசவே அவ்வாசை பன்மடங்காயிற்று. உள்ளே சென்று நாற்காலியில் உட்கார்ந்தான்.

ராமநாதன்:—தங்கள் பெயரென்ன ?

'கமலா'

'சந்தோஷம்! தாங்கள் இங்கு யாரைப் பார்க்க வந்தீர்கள்?'

'இங்கொருவர் பணந்தர வேண்டும். அதை வாங்கிப் போக வந்தேன்.'

'அந்த மனிதரைப் பார்க்க எப்பொழுது செல்லப்போகிறீர்கள்?'

'நான் மாலையில்செல்வேன். இப்பொழுது சிறிதுநேரம் நித்திரை செய்யப் போகிறேன். தாங்களும் கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்.'

'சரி. தொந்திரவு கொடுத்ததுபற்றி மன்னியுங்கள். நான் வருகிறேன்' என்று தனதறைக்குச் சென்றான். அவன் மனது ஒரு நிலையிலில்லை. எப்படியாவது இந்த கன்னிகையை அடையவேண்டுமென்ற எண்ணம். அதைப்பற்றி யோசித்துக்கொண்டே பேசாமல் படுத்திருந்தான். தன் அறையின் கதவை யாரோ திறப்பதுபோன்ற சப்தம்கேட்டது. தலையைத் தூக்கிப் பாத்தான். ஒரு முகமூடி

யணிந்த மனிதன் கையில் துப்பாக்கியுடன் 'கையைத் தூக்கு; பேச முயற்சிக்காதே' என்ருன். ராமநாதன் பயத்துடன்மெதுவாக எழுந்து உட்கார்ந்தான். அந்த முகமூடி யணிந்த உருவம் நாற்காலியில் அமர்ந்து பேசவாரம்பித்தது. 'நான் கேட்கப் போகும் கேள்வி கட்கு ஒன்றிரண்டு வார்த்தைகளில்




சரியான பதிலைச் சொல்லவேண்டும். அனுவசியமாக வளர்த்த வேண்டாம். முதலில் பக்கத்தறையில் வந்திறங்கி யிருக்கும் பெண்மணி உனக்கு உறவினளா ?'

ராமநாதன்:—இல்லை.

'அல்லது உமக்கு நெருங்கிய சினேகிதையா ?'

'அதுவும் இல்லை.'

'அப்படியானல் சொல்கிறேன். நான் ஒரு கொள்ளைக்காரன். இரவு 11 மணிக்கு அந்தம்மாளிடம் இருக்கும் சாமான்களைத் திருடப் போகிறேன். நீ அவளுக்கு உதவியாக வரக்கூடாது. வரவும் முயற்சி செய்யக்கூடாது' என்ருன். ராமநாதனுடைய மனதில் பெருந் திகில் விழுந்தது. மௌனமாக இருந்தான்.

மறுபடியும் அந்த உருவம்:—நான் இதைவிட்டு வெளிச்சென்ற 15 நிமிடங்களுக்குப் பின்தான் நீ இந்த அறையைவிட்டு வெளியில் வரவேண்டும். அதற்கு மத்தியில் கூச்சல் போடவோ வெளிவரவோ முயற்சித்தாயானல் உன் உயிர் போய்விடும் பத்திரம்' என எச்சரித்து விட்டு வெளியில் சென்றது.

ராமநாதன் பேசாமலிருந்தான். அவன் மனம் குழம்பி விட்டது. சொல்ல முடியாத வேதனைப்பட்டது. 'தன்னல் காதலிக்கப்படும்

ஒரு கன்னிக்கு ஆபத்து வரப்போவதைத் தெரிந்துமா தான் சும்மா யிருக்கவேண்டும். எனினும் இரவு ஒரு கை பார்ப்பது' என்று தீர்மானித்தான். சிறிது நேரத்திற்கு பின் கமலாவின் அறை பக்கமாக வந்தான். அறை பூட்டப்பட்டிருந்தது. அவள் வெளியில் சென்றிருக்கக் கூடுமென்றெண்ணி தானும் வெளியில் புறப்பட்டான். காற்று வாங்கிக்கொண்டே நெடுந்தூரம் சென்றான். ஆனல் அவன் மனதுமட்டும் நிம்மதியாயில்லை. இரவு 7 மணிவரை சுற்றித் திரிந்துவிட்டு ஹோட்டலுக்கு வந்தான், கமலாவின் அறை திறந்திருந்தது. உள்ளே சென்று நாற்காலியில் உட்கார்ந்தான்.

ராம:—தாங்கள் பார்க்க வேண்டிய மனிதரை பார்த்து விட்டீர்களா ?

கமலா:—'ஆஹா! பார்த்துவிட்டேன்' என்றாள். அதன்பின் இருவரும் சிறிதுநேரம் சம்பாஷித்துக்கொண் டிருந்துவிட்டு மணி 8 அடித்ததும் சாப்பிடச் சென்றனர். சாப்பிட்டு முடிந்தபின் ராமநாதன் கமலாவிடம் தன் அறைக்குச் செல்வதாக கூறிச்சென்றான்.

'கமலாவிடம் பேசிக்கொண்டிருக்க வேண்டுமென்ற ஆசை. ஆனல் கொள்ளைக் கூட்டத்தான் வரும்வரையில் அங்கிருக்க வேண்டாமென்கிற எண்ணம்தான். தனதறையில் படுத்துக்கொண்டான். அவனுக்கு மன நிம்மதியில்லை; என்ன நடக்கப்போகிறதோ என்கிற பயம் மனதில் படபட வென்றடித்துக்கொண்டது. மணி எப்பொழுது 11 ஆகுமென்று எதிர்பார்த்திருந்தான். ½மணி 1மணி இப்படியாக கழிந்து $10\frac{3}{4}$ மணி ஆயிற்று. மணி அதிகமாக அதிகமாக அவன் மனதும் படபட வென்றடித்துக் கொண்டது. டிங், டிங், டிங் என்று மணி 11 அடித்தது. அவ்வளவுதான், பக்கத்தறையில் 'ஹா ஐயோ' என்ற சப்தம் கேட்டது. ராமநாதன் மடமட வென்றெழுந்து கதவைத் திறந்துகொண்டுபோய் கமலாவின் அறைக்குள் புகுந்தான். கமலா படுக்கையைவிட்டு எழுந்து நின்றிருந்தாள்.

ரா:—என்ன? என்ன? என்று கேட்டான்.

கமலா:—'நல்ல சமயத்தில் வந்து சேர்ந்தீர்கள். யாரோ ஒரு முகமூடியணிந்த மனிதன் ஓடிவந்தான், பயந்துவிட்டேன். தாங்கள் வந்த சப்தத்தை கேட்டு ஓடி விட்டான்' என்றாள். ராமநாதன் நாற்காலியில்உட்கார்ந்தான். கமலாபடுக்கையில் உட்கார்ந்தாள். இருவரும் சிறிது நேரம்வரையில் திருடன் வந்துபோன விஷயமாக பேசிக்கொண்டிருந்தார்கள். அதன்பின் ராமநாதன் நான் உன்னை ஒன்று கேட்கப்போகிறேன். அது தப்பிதமானல் மன்னித்துவிடு. அதாவது நான் உன்னை காதலிக்கிறேன். சிறிதுநேரம் மௌனம். பின்பு கமலா 'எனக்கு ஏற்கனவே மணமாயிருந்தாலும், நான் தங்களுடைய இச்சையை பூர்த்தி செய்வேன். நான் இப்படிச் செய்வது தப்பிதமென்று நினைக்கவில்லை. ஏனெனில் என் கணவர் என்னிடம் நியாயமான முறையில் நடந்துகொள்ளவில்லை' என்றாள்.

ரா:—தங்களுக்கு கலியாணமாய் விட்டதா? சரிதான். தங்கள் கணவர்பேரில் என்ன குறைகூறுகிறீர்கள் ?

கம:—அதைப்பற்றி சொல்ல ஆரம்பிக்கும்பொழுதே என் இருதயம் வெடித்து விடும் போல் இருக்கிறது. அது பெரிய கதை; தங்களுக்குப் பிரியமானல் சொல்கிறேன்.




ரா:-நான் கேட்கத் தயாரா யிருக்கிறேன். ஆனல் தங்களுக்கு மனவருத்தம் உண்டாக்கக்கூடிய விஷயமானல் சிரமப்பட்டு கூறவேண்டாம்.

'பரவாயில்லே, நான் சொல்கிறேன். என் கணவர் சென்னையில் தான் வேலைபார்க்கிருர். அவர் சென்னையில் யாரோ வைரவியாபாரியாம். அவருடைய மனைவியிடம் அடிக்கடி சென்றுவருகிருர். வீட்டுக் கவலேயேயில்லே. என்னைப்பற்றி ஞாபகமேயில்லே. அந்த வைரவியாபாரியின் மனைவியாகிய ரமணியிடமிருந்து அடிக்கடி கடிதம் வருகிறது.'

அதற்குள் ராமனுதன் படபடத்த குரலில், யாரது வைர வியாபாரியா ?

'ஆம்! யாரோ ராமநாதனும்.'

'ஹா! ராமநாதனு?' என்ற சப்தம் அவனது தொண்டையிலிருந்து தானுக வெளிப்பட்டது. 'ஆ! நமது மனைவி விபசாரியா?' என்ற கேள்வி அவன் மனதில் எழுந்தது. கண்கள் சிவந்தன; கடுகடுத்த முகத்துடன், பற்களை நறநற வென கடித்தான். அதிக கோபத்தால் நரம்பு தளர்ச்சியடைந்து அப்படியே கட்டிலில் சாய்ந்தான். உடனே கமலா தண்ணீர் கொண்டுவந்து அவன் முகத்தில் தெளித்து விசிறியால் விசிறினுள். சிறிது நேரத்திற்குபின் ராமநாதன் மெதுவாக எழுந்து உட்கார்ந்தான்.

ரா:—கமலா, நான் அவசரமாக செல்லவேண்டும் விடைகொடு.

கம:—ஏன்? நான் வரவேண்டாமா? ராமநாதன் என்ற பெயரை சொன்னதும் தங்களுக்கு கோபமும் மயக்கமும் வந்ததே, காரண மென்ன? அவரைத் தெரியுமா ?

ரா:—அந்த ராமநாதன் நான்தான். என் மனைவி விபசாரி யென்று எனக்குத் தெரியாது. என் கோபம் தணிவதற்குள் அவளை பழிக்குப் பழி வாங்கவேண்டும்.

கம:—என் நண்பனே. உன் ஆத்திரத்தை தயவுசெய்து அடக் கிக்கொள். உன் மனைவி விபசாரியென கேள்விப்பட உன் மனம் எவ்வளவு துடிக்கிறது ? அம்மாதிரியே நான் உன்னுடன் சினேகமா யிருப்பதை என் கணவர் அறிந்தால் அவர் மனம் எப்படியிருக்கும்.

ரா:—நான் இப்போது அதைப்பற்றி பேசத் தயாராயில்லை.

கம:—சற்றுப் பொறு. அப்படியானால் நீ என்னை விரும்புவது தப்பிதமென்று தோன்றவில்லையா? உன் மனைவி கற்பரசியா யிருக்க வேண்டுமென்று நீ எவ்வளவு தூரம் விரும்புகிறாயோ அம்மாதிரியே நீயும் ஏகபத்தினி விரதனாயிருக்க வேண்டுமென்று விரும்பவில்லையா? அப்படியானால் அவளுக்கு ஒரு நியாயமும் உனக்கு ஒரு சட்டமுமா?

ரா:—நான் வருகிறேன்' என்று எழுந்து நடந்தான். கமலா எழுந்து அவனது கரத்தைப்பற்றி இழுத்து உட்காரவைத்தாள்.

'என்னையேன் போகவிடமாட்டே னென்கிறாய்?'

'நான் யாரென்று உனக்குத் தெரியுமா?'

'நீ யாராயிருந்தாலும் அதைப்பற்றி யெனக்கு கவலையில்லை.'

'நீ கவலைப்படத்தான் வேண்டும். இதோபார்' என்று கமலா தன் தலைமயிரைப்பற்றி இழுத்தாள். ஆ! அது 'டோப்பா' மயிர். மறுநிமிடம் புடவையை களைந்தாள். ஆம்! ஆம்! ராமநாதனுடைய நண்பன் நாகநாதன்.

ரா:—நண்பா! நீயா இங்குவந்தாய்? ஏன்?

நா:—உனக்குத்துணையாகவும் உன்செய்கையை கண்டிக்கவுந்தான்.

ரா:—என் மனதை மிகவும் புண்படுத்திவிட்டாய்.

நா:—ஆம்! இனிமேலேனும் நீ கெட்டவழியில் பிரவேசிக்க மாட்டாய். கற்பரசியாகிய உன் மனைவியின்பேரில் வீண்பழி கூறி யதற்காக கடவுளிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்ளுகிறேன்.

ரா:—இந்த முகமூடி எதற்கு...................?

நா:—உன்னை பயமுறுத்தியது யார்? நான்தான். நாகநாதனா கிய இந்த கமலாவின் பேரில் உனக்கு அன்பு இருக்கிறதா இல்லையா என்பதை சோதிப்பதற்குத்தான்.

ரா:—இப்பொழுதே ஊருக்கு செல்வோம் வா என்றான். இரு வரும் புறப்பட்டனர். காரும், மோட்டார் சைக்கிளும் வேகமாக புறப்பட்டு இருட்டில் மறைந்தன.



# வெளி விகடம்

உபாத்தியாயர்:—இப்பொழுது நடக்கின்ற காலம் என்ன காலண்டா சீனு.

சீனு:—இப்பொழுது நடக்கின்றது வாடைக்காலம் சார்!

உபாத்தியாயர்:—யார் அடா சொன்னு உனக்கு?

சீனு:—என்ன சார் எங்கபாட்டி, வாடை விரைக்கு என்று கம்பளிப் போர்வை போட்டு மூடிக்கொண்டிருக்கிருள். அதனுல் தான் நான் சொன்னேன்.

—வீ. சேதுராமசாமி

வேலன்:—ஐயா டாக்டரே, எனக்கு கண்வலி வந்திருக்கிறது ஏதாகிலும் மருந்து போடும்.



டாக்டர்:—கண் வலி வந்தவர்க்குக் கருத்துடன் மருந்து கேளாய், உள்ளியும் உள்ளிப் பூண்டும், ஒரு பலம் மிளகும் திருவு கள்ளிப்பாலும் சேர்த்து கல்வத்தில் விட்டு அரைத்து கலந்துமே கண்ணில் விட்டால், கண் ஒரு விரல் ஆழம் பாய்ந்து, பல்லியின் முட்டையிட்டு பரலோகம் சேரலாமே, என்ருர்.

—A. M. R. A. லிங்கம்

ஹெட்மாஸ்டர்:—முடியாதையா, உங்கள் பையன் சுத்த மோசம். ஆகையினுல் அவன் இன்னெரு வருஷம் இதே வகுப்பில் இருக்க வேண்டியதுதான்.

பையனின் தகப்பனுர்:—இல்லிங்க, நான் ரொம்ப ஏழைங்க, இன்னெரு வருஷம் படிக்க வைப்பதற்கு எனக்கு சக்தி இல்லிங்க, எப்படியாவது பையனை............

ஹெட்மாஸ்டர்:—சரி. அப்போ போம். பையனைத் தூக்கிப் போட்டு விடலாம்.

பையனின் தகப்பனுர்:—ஏதாவது அதிக காயம் பட்டு விடுமோ ?

—எஸ். டி. சாம்பசிவம்

அண்ணன்:—என்னடி செய்கிறாய் அங்கே. கொஞ்சம் தூத்தம் கொடுக்கப்படாதா ?

தங்கை:—வண்ணானுக்குச் சட்டையைப் போடுகிறேன்.

அண்ணன்:—அவனுக்கு சட்டை போட்டுக்கத் தெரியாதா? நீ போடணுமா அவனுக்கு ? —எஸ். செல்லப்பா, மதுரை

மகன்:—அபபா! மானத்துக்கும் பூமிக்கும் எவ்வளவுதூரம்?

தந்தை:—மடையா! யாருடா அளந்து பார்த்தா ?

மகன்:—ஓஹோ! உங்களுக்குத் தெரியாதா? நம்மால் அளவிட்டு கூறமுடியாத தூரம் என்று சொல்ல.—திருவை. கே. வைத்தியநாதன்

போலீஸ் இன்ஸ்பெக்டர்:—அடியே! நடு இரவில் நான் நல்ல தூக்கத்திலிருக்கும் சமயம், ஒரு திருடன் இங்கு நுழைந்து, உனது கைகால்களை அவிழ்க்க முடியாமல் கட்டி, வாயிலும் துணிப்பந்தை அடைத்துவிட்டுத் திருட ஆரம்பிக்கிறானென்று வைத்துக்கொள்வோம். அப்போது நீ என்னடி செய்வாய் ?



அவரது மனைவி:—நானா? அப்படியே உங்களது பக்கமாக என் கால்களைத் திருப்பி உங்களுக்கு ஒரு உதைவிட்டு எழுப்புவேன்!

போலீஸ் இன்ஸ்பெக்டர்:—(ஆக்கிரத்துடன்) சீ! கழுதை! துப்பாக்கியை எடுத்துச் சுட்டு வீழ்த்துவேனென்று சொல்.

—என். திருநாவுக்கரசு

சிறுவன்:—தாத்தா! 'பல்லுப்போனவனுக்கு சொல்லு பலிக்கா" தென்கிறார்களே, அது நிசம்தானா ?

கிழவர்:—அப்படித்தான் சொல்லுகிறார்கள்.

சிறுவன்:—ஆனால் நம் காந்தி தாத்தாவுக்குப் பற்கள் போய் விட்டிருக்கின்றனவே, அவர் சொல்மட்டும் உலகமெல்லாம் பலிக்கிறதே. —ராஜன்

# பழக்க வழக்கங்கள்

[திருவையாறு - கே. வைத்தியநாதன்]

பழக்கம் என்ற பதத்துக்கும், வழக்கம் என்ற வார்த்தைக்கும் அதிக பேதமிருப்பதாகத் தெரியவில்லை. இரண்டும் மிக நெருங்கிய உறவு கொண்டனவாகவே காணப்படுகின்றன. ஒலிவடிவிலும், வரிவடிவிலுங் கூட அவை அதிக ஒற்றுமை யுள்ளனவாக விளங்குகின்றன. ஆனாலும் 'பழக்கம் முந்தியதா? வழக்கம் முந்தியதா? பழக்கத்தினின்று வழக்கம் வந்ததா? வழக்கத்தினின்று பழக்கம் தோன்றியதா? என்பனபோன்ற வினாக்கள் நம்முள்ளத்தில் எழுவதுண்டு. அவற்றிற்கு விடை காணாது மயங்குவாரு முண்டு.

* * *

காப்பி குடித்தல் முன்னாட்களில் இல்லாத ஒரு புதிய செயல். பின்னர் மக்கள் அந்தப் பானத்தில் சிறிது சிறிதாகப் பழகலாயினர். இதுவே பழக்கம் எனப்படுவது. பழக்கம் முற்றியபின் அது வழக்கம் என்ற நிலைக்கு வந்து விடுகிறது. இப்போது 'காலை 6-மணிக்கெல்லாம் நான் காப்பி சாப்பிடுவது வழக்கம். இல்லாவிட்டால் தலைவலி மண்டையை உடைத்துவிடும்' என்று பலர் கூற நாம் கேட்டதில்லையா? எனவே எந்தச் செய்கையும் ஆரம்பத்தில் நமக்குப் பழக்கமாகிப் பிறகு வழக்கமாகிறது.

* * *

'இது எங்கள் குடும்ப வழக்கம்; எங்கள் தாத்தா இப்படிச் சொல்லுவது வழக்கம்; எங்கள் பாட்டி இவ்வாறு செய்வது வழக்கம்' என்றெல்லாம் நம்மில் பலர் கூறுவதுண்டு. அந்தந்த வழக்கங்களெல்லாம் அவரவர்கள் கையாண்ட பழக்கங்களின் விளைவுகளே. அவற்றைத் தழுவியதால் அவர்கள் ஏதேனும் நலம் கண்டிருப்பார்களாயின், அவை பிற்காலத்தில் வழக்கமாகி விடுகின்றன. உதாரணமாக இரவில் பாலருந்துவது சிலருடைய வழக்கமாக விருக்கிறது. இது அவர்களுக்கு வழக்கமான வரலாறு என்ன

என்று ஆராய்ந்தோமானல் மேற்காட்டிய விவரமே கிடைக்கப் பெறுகிறோம்.

* * *

காலப்போக்கில் பழக்க வழக்கங்களிற் சில மாறுபடுதலுமுண்டு. பழங்காலத்திற்கேற்றதொரு பழக்கமோ, வழக்கமோ பிற்காலத்திற்குப் பொருந்தாததா யிருக்கலாம். ஆதலால் அத்தகைய பழக்க வழக்கங்களைத் தள்ளி விடுதலே நேரிதாகும். புதிதான, நூதனமான ஒரு பழக்கம் ஏற்புடைத்தாயின் அதை வழக்கத்தில் கொண்டுவந்து விடலாம். இப்படியே இயற்கை யமைப்பு, சீதோஷ்ணம் இவற்றிற் கேற்ப 'ஊருக்கு ஊர்' தேசத்துக்கு தேசம் மக்களது பழக்க வழக்கங்கள் வேறுபடுகின்றன. இவற்றைப்பற்றி நிலநூலில் (Geography) பரக்கக் காணலாம்.

* * *

முன்னெல்லாம் குடும்பங்கள் யாவும் பழய வழக்கங்களை யொட்டி நடந்து வந்தன. அதாவது மூதாதையர்கள் தம் நூல்களில் வகுத்துச் சென்ற முறை, அனுபவ வாயிலாகக் காட்டிச் சென்ற நெறி இவற்றை யனுசரித்து அவர்கட்குப் பின் தோன்றியவர்கள் நடந்து வந்தார்கள். ஆனால் இக்காலம் சுயஉணர்ச்சி ததும்பியதாய், சுதந்தர தாகம் மிகுந்ததாய், சுயமரியாதை வேட்கை மலிந்ததாய், ஆராய்ச்சி அறிவின் ஆட்சி ஓங்கியதாயுள்ள காலமாதலால், இவற்றிற்குப் பொருத்தமற்ற வழிகளில் பழக்க வழக்கங்களில் இறங்க மனிதன் தயங்குகிறான். எந்தப் பழக்க வழக்கமும் அறிவிற்குப் பொருத்தமில்லாததாகக் காணப்படில்—மூடப்பழக்க வழக்கமாகத் தோன்றிடில்—அதை விட்டொழிக்க மனிதன் முயலுகிறான். விட்டொழிக்கவுஞ் செய்கிறான்.

* * *

இன்னும் மக்கள் வாழ்க்கையில்—அதிலும் நம் இந்திய மக்கள் வாழ்க்கையில் அர்த்த மற்ற—பகுத்தறிவிற்குப் புறம்பான—அநீதிமான—சில மூடப் பழக்க வழக்கங்கள் ஒரு சிலரது நன்மைக்காக உலாவி வந்திருக்கின்றன. இவை சமய சாத்திரக் கொள்கைகளின் போரால் பாமர மக்களது உள்ளத்தை மயக்கி வந்துள்ளன. இயற்கையிலேயே உடல் வலியற்ற ஒரு சமூகத்தாருக்கு மற்ற யாரும் (உடல் வன்மையுள்ளவர்களும்) அடிமைகளென மதிக்குமாறு இவை கொடுங்கோலோச்சியும் வந்திருக்கின்றன. இத்தகைய கொடிய பழக்க வழக்கங்களெல்லாம் என்றுதான் நம் நாட்டினின்றும் அறவே ஒழியுமோ?

* * *

இளமை தொட்டே இயற்கையில் மூழ்கியெழுந்த வுடல் மிக வலுவுள்ளதாகின்றதென உடல்நூல் வல்லார் கூறுகிறார்கள். சூரிய ஒளியிலும், பனிச் சாரலிலும், பழைத் துளியிலும் உடையின்றி— செயற்கைப் போர்வையின்றிப் பழகும் குழந்தையின் உடல், அது பெரியவனான பின்பும் எத்தகைய கொடிய வெயிலுக்கும், மழைக்கும் பனிக்கும் அஞ்சுவதில்லையாம். இயற்கையோடு பழக வசதியுள்ள குடிசைகளில் வாழும் எத்தனை மக்கள் நோய் இன்னதென அறியாராய்ப் பன்னெடுநாள் வாழ்ந்தின்புறுகின்றனர்! மாலைக்கதிரவனுக்கும், இளஞ்சாரலுக்கும் அஞ்சி சாளரக் கதவுகளை அடைத்துக் கொண்டு மாட மாளிகைகளில் வதியும் எத்தனை சீமான்கள் மருத்துவர்களாலும் இன்னதென அறிய வொண்ணாத புதுப்புது நோய்களால் தாக்குண்டு அல்லலுறுகின்றனர்!

* * *

உடம்புக்கு இன்னல் விளைப்பதாகிய, நோய் தருவதாகிய சில பொருள்கள் தம்முடைய தோற்றங்களாலும், தம்மிடத்தேயுள்ள சுவை மிகுதியாலும், இன்னும் பிறவற்றாலும் மக்களை அடிமை கொண்டு விடுகின்றன. மனிதன் அவற்றிற் பழகிய பின் அவற்றை ஒழிக்க முடிவதில்லை. இம்மாதிரியான பொருள்களில் மனிதன் மோகங்கொள்வது அறிவின்மையாகும். அவற்றின் உண்மைத் தன்மையை அறியாது அவற்றோடு பழகிவிட்டாலும், மெல்ல மெல்ல அவற்றின் கூட்டுறவை ஒழிக்க எந்த மனிதனும் முயலுதல் அவசியம். இது தொடக்கத்தில் சிரமத்தைக் கொடுப்பதாயினும், முடிவில் நன்மை தேடிக் கொள்ளுவதாகும்.

* * *

குழவிப் பருவத்திலிருந்தே மனிதன் வீடு, வீதி, கிராமம் (அல்லது நகரம்) இவற்றிலுள்ள பொருள்களோடும், மக்களோடும் பழகி வருகிறான். அவனுடைய பழக்கம் பெருகப் பெருக அவனது அறிவு ஓங்குகிறது. அப்போதுதான் தனக்குச் சுபாவமான சில பிடிவாதக் குணங்களைக் கூட அவன் விட்டு விடுகிறான். மக்கள் இடையே வளர்ந்த மனிதனுக்கும், மனித சஞ்சாரமேயில்லாத தனியிடத்தில் வளர்ந்த மனிதனுக்கும், வேற்றுமை மிகவுண்டு என்பது பல அறிஞர்கள் கண்டறிந்த உண்மை. பல அறிவாளிகளுடன் கூடிப் பழகுவதால் மனிதனுடைய அறிவு பண்படுகிறது. வெறும்புத்தகப் படிப்புமட்டும் ஒருவனுடைய புத்தியை விசாலப்படுத்திவிட முடியாது. மக்களது கூட்டுறவும், இயற்கைப் பொருள்களின் நெருங்கிய பழக்கமுமே அவனுடைய அறிவை செம்மைப்படுத்த வல்லன. வித்துவான்களுடைய உள்ளம் விசாலிக்கவும். தாராளமானதாகவும் வேண்டுமானால் மற்ற புத்திமான்களுடைய மனத்

துடன் கூடிப் பழக வேண்டும். (The mind of scholar, if you would have it large and liberal, should come in contact with other minds - Long fellow)

* * *

எந்த அழகிய சித்திரமும் நெடுநாட் பழகிய கைவன்மையின் எழுச்சியே யாகும். அடுக்குப் பதங்களோடு இலக்கியச் சுவை சொட்டச் சொட்ட அவையில் நின்று பேசுபவர்களின் பேச்சு ஒரு நாளிலா வந்தது? அவர்களுள் சிலர் நினைத்த நினைத்த போதெல்லாம் கம்பன் கவிகளையும், காளிதாசன் சுலோகங்களையும், ஷேக்ஸ்பியர் அறிவுரைகளையும் தங்கு தடையின்றி வெளியிட்டுத் தங்களுடைய பேச்சுக்கும், செய்கைக்கும் மேற்கோள் காட்டுகிறார்களே, இத் திறமையை அவர்கள் எங்ஙனம் பெற்றார்கள்? இவைகள் நாப் பழக்கம், மனப்பழக்கத்தின் விளைவுகளன்றோ! தொடர்ச்சியாகப் பல மைல்கள் நடந்தும் கால்வலி ஒரு சிறிதும் அறியாத புண்ணிய சீலர்கள் உலகில் எத்தனை பேருண்டு? இது நடைப் பழக்கத்தால் வந்த நன்மையல்லவா?

சித்திரமுங் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்—நித்தம்
நடையும் நடைப் பழக்கம்...........

என நம் பாட்டியார் அருளியது பழக்கத்தின் பயன் அறியாமலா?



# புஷ்பவல்லி

[ஜி. தஸ்தகீர்]

நீர்வளம் நிலவளங்களால் செறிந்து நம் தென்னாட்டில் நன்னாடாய் விளங்குவது புஷ்பபுரியே. பெயருக்கேற்ப அதைச் சூழ்ந்து நறுமணங்கள் கமழும் நந்தவனங்களும் பாரைப்பிளந்து பாதாள லோகம் வரையும் வேர்களைச் செலுத்தி வலிவுடன் நிற்கும் புளி, மா, பலா, முதலிய வானமளாவிய விருக்ஷங்களின் தோப்புக்களும், அதன் ஒரு மருங்கில் நார்த்தை; கொய்யா, செவ்வாழை, மாதுளை முதலிய கனிவிருக்ஷங்களின் தோட்டங்களும், நெல்மணிகளைத் தாங்கி நிற்கும் பயிர்களையுடைய வயல்களும், அதனை அடுத்து வடபாரிசத்தில் என்றும் வற்றாத அமராவதி எனும் எழில்மிகு நதியும், ஊரின் நடுவில் ஒரு சிறு தாமரைத் தடாகமும், அதில் சூரியனைக்கண்டு புன்முறுவல் பூத்ததுபோல் அலரும் செந்தாமரைப் புஷ்பங்களும் காண்போர் கண்களைக் கவர்ந்து மனத்திற்கு ஓர்வித ஆனந்த உணர்ச்சியை உண்டாக்குமென்பதற் கையமில்லை.

அவ்வூரின் திருவீதிகளில் சிறந்து விளங்கும் சைவ வேளாளர் வீதியில் வன்மைமிக்க சிற்பிகளால் சித்திர வேலைப்பாடுகளுடன் அலங்கரிக்கப்பட்டதும் மற்ற மாடிவீடுகளைவிட உன்னதமாய் சிறந்து விளங்குவதும் புஷ்பநிலையம் என்னும் மாளிகையே. அவ்வூரிலுள்ளோர் பன்முறை அம்மாளிகையைப் பார்த்திருப்பினும் சமயம் நேர்ந்து அவ்வீதியின்கண் செல்வாராயின் அகத்தியம் அதனை உற்று நோக்குவார்கள் என்பது மிகையாகாது.

ஒரு நாள் மாலை சுந்தரவடிவனும் நடுத்தரமான வயதுடையவனுமான ஒரு இளைஞன் அத்தெருவின் வழியே செல்லுகையில் நாம் முன்சொன்ன மாளிகையை அண்ணாந்து நோக்கினான். நோக்கலும் சுமார் 18 வயதுள்ள ஒரு யௌவன மடந்தை தன்னைக் கூர்ந்து கவனிப்பதைக் கண்டான். அவள் பத்தரைமாற்றுப் பொன்னைப் பழிக்கும் சிவந்த நிறத்தினள். அவளது கரிய கூந்தல் இடுப்பு வரை தொங்கிக்கொண்டிருந்தது. சேலைப் பழித்த விழியையும், செந்தாமரை மலரை ஒத்தவதனத்தையும், முத்துக்கோர்த்தது போன்ற பல்வரிசையையும், எட்பூ நாசியையும், மூன்றாம்பிறைச் சந்திரனைத் தோற்றுவிக்கும் எழில்மிகு நெற்றியையும், திரண்ட தோள்

களையும், சிறுத்த இடையையும், அவள் அணிந்திருந்த மேகவர்ண மஸ்லின் சேலையையும், அதற்கு தகுந்த ரோஸ்நிற ஜாக்கெட்டுடையும் பார்த்தால் இல்லறம் துறந்த முனிவர்களும் தம் நெறி பிறழ்ந்து இவளுடன் குடும்பவாழ்க்கை நடாத்தத் துணிவார்களாயின் நம் இளைஞனின் மனம் எவ்வாறு இருந்திருக்கும் என்பதை மொழியவும் வேண்டுமோ!

இச்சுந்தரன் தன்னுணர் வற்றவனாகி அசைவற்ற மரம்போல் நின்றுவிட்டான். பின் தன் சுய அறிவுபெற்று அப்பூங்கோதையின் அழகை அகந்தனில் நினைந்தவாறே செல்கையில், பின்புறமாக 'அழகேசன், அழகேசன்' எனத் தன்னை அழைக்கும் சப்தம்கேட்க சட்டென்று திரும்பினான். உடன், ஒரு சிறுவன் கடிதமொன்றைக் கொடுத்துவிட்டுச் சென்றான்.

வாசகர்களே! அழகேசன் யார் என்பதை இங்கு கூறிவிடுவோம். அமராவதி என்னும் நதியின் கீழ்ப்பாரிசமுள்ள அழகாபுரி என்னும் சிற்றூரே இவனின் சொந்த ஊர். இவன் சத்தியநெறி தவாதவன். தற்கால நவீன நாகரீகத்தில் ஈடுபட்டுள்ள மைனர்களின் அட்டூழியச் செயல்களை அறவே வெறுத்தவன். இவன், காண்போர் யாவரும் பிரியப்படும்படியான நன்னடக்கையைப் பூண்டொழுகுபவன். இவன் தந்தை சம்பந்த முதலியாரும் அருமைத் தாயாரும் இவனின் இளவயதிலேயே காலமடைய, இவன் சிற்றன்னையால் பரிபாலிக்கப்பட்டு, புஷ்பபுரியிலுள்ள முனிசிபல் மிடில் ஸ்கூலில் 7 வது வகுப்புவரை வாசித்து வந்தான். 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பதற்கொப்ப பையனின் நல்லொழுக்கத்தையும் படிப்பின் தேர்ச்சியையும் கண்ட இவனின் சிறிய அன்னையின் கணவர் (சொற்ப ஜிவேஜ் உடையவர்) தனக்குக் குழந்தை இல்லாமையினால் இவன்மேல் பிரீதி அடைந்து மேற்படிப்புக்காகச் சென்னைக்கு அனுப்பிவிட்டார். அழகேசன் அங்கு B. A. வரை கற்று வருஷாந்திரப் பரீக்ஷையும் எழுதி (Summer vacation) கோடைகால விடுமுறையின்போது தன் சொந்த ஊராகிய அழகாபுரிக்கு வந்து ஒரு வாரம்தான் ஆயிற்று. தான் முன் கல்விகற்ற பள்ளிக்கூடத்தையும், ஆசிரியர்களையும் காணவே அப்புஷ்பபுரிக்கு வந்தவன். அவர்களைப் பார்த்துவிட்டுத் திரும்புகையில்தான் அந்நாரிமணியை அம்மாடிவீட்டில் கண்டான். சிறுவன் ஈந்த நிருபத்தை உடைத்துப் பார்க்க உள்ளுரை வருமாறிருந்தது:—

என் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட மணவாளரே,

தங்களைக் கண்டு பன்னாட்களாயினும் தங்கள் திருவுருவம் என் அகத்தைவிட்டு அகலவில்லை. இன்று கண்டேன், உளந்தனில் மகிழ்கொண்டேன். நாம் இளவயதில் இவ்வூரில் சேர்ந்து கல்விகற்றதை

சிறிது சிந்திப்பீர்களாக. எனது தந்தையார் சுந்தரம்பிள்ளையும் தங்களைக் காண ஆர்வமிகு கொண்டுள்ளார். நாளைக் கதிரவன் குடதிசையில் மூழ்குங்காலை, அமராவதி நதிக்கரையின் தென்சாரலில் உள்ள பூந்தோட்டத்தில் அடியாளைக் காணும்படி பணிவுடன் வேண்டுகிறேன்.

தங்கள் பிரியமுள்ள,

புஷ்பவல்லி.

அழகேசனின் முகம் பிரகாசித்தது. பன்முறை வாசிக்கலானான். ஏதோ ஒருவகை ஆனந்த எழுச்சி உள்ளத்தில் எழத் தலைப்பட்டது. புஷ்பவல்லியின் ஞாபகமும் சிறிது சிறிதாக அவன் மனதின்கண் தோன்றலாயிற்று. சிறுவயதில் கண்டதிற்கு மாறாக பூர்ணச்சந்திரோதய ஒளிவுடன் பிரகாசிக்கும் இப்புஷ்பவல்லியின்பால் ஆசை ஒருபக்கமும், இவளின் தந்தையார் இத்துணைச் செல்வம் படைத்தவானதின் வியப்பும் அகந்தனில்கொண்டு, இதையே சிந்தனை செய்தவண்ணம் மாலை 6½ க்கு அழகாபுரி வந்து சேர்ந்தான்.

அன்று தன் சிற்றன்னையுடன் இராப்போஜனம் செய்துகொண்டிருக்கும் பொழுது சுந்தரம்பிள்ளை செல்வவந்தானதின் காரணம் கேட்க, அதற்கு அவள் சுந்தரம் பிள்ளையின் சிறிய தகப்பனார் சிங்கப்பூரிலிருந்தவர் காலமடைய அவருக்குப்பின் வாரீஸ் இல்லாமையினால் அவருக்குச் சொந்தமான புஷ்பபுரியிலும் அதன் பக்கத்திலுள்ள கிராமங்களிலும் உள்ள சுமார் 2000 எக்கர் நிலங்களும் ரொக்கப் பணங்களும் அவர் வசமாயின என்றும், அவரின் அருந்தவ ஏகப் புதல்வியும், நற்குணமும், அழகும், ஒருங்கே அமையப் பெற்றவளுமான புஷபவல்லியே அவருக்குப் பின் அச்செல்வத்திற்கு உரிமையுள்ளவள் என்றும் தன் சிற்றன்னை சொல்ல உவகைமிகு கொண்டு அதை வெளிக்குக் காட்டாதவாறு போஜன முடித்துத் தன் படுக்கையறைக்குச் சென்றான். அவன் புஷ்பவல்லியின் ஓவியத்தை தன் கருத்தில் நினைத்தவாறே ஏங்கினவனாய் அன்று இரவை மன நிம்மதி இன்றிக் கழித்தான்.

## II

மறுநாள் மாலை 6¼ மணி இருக்கும். பகலவனும் தன் பணி முடித்து மேற்றிசையில் ஆழ்ந்தான். புள்ளினங்களும் தத்தம் கூடுகளை நோக்கிப் பறக்கலாயின. ஆவினங்கள் வயிறார மேய்ந்து தங்கள் கன்றுகளை நினைத்து கடுகி நடக்கலாயின. தென்றல் காற்று மெல்லென வீசியது. தென்னோலைகள் சலசலத்தன. இம்மாலை வேளையில் அழகும், அறிவும், திகழ்ந்து விளங்கும் ஒருவாலிபனும் அவன் பக்கலில் யௌவனகாந்தி சுடர்விட்டு பிரகாசிக்கும் ஒரு இளமங்கையும் அமராவதி நதிக்கரையின் ஒரு நந்தவனத்தின் பசும்புற்

றரையில் வீற்றிருந்து உரையாடிக்கொண்டிருந்தனர். ஆங்கு இவர்களன்றி வேறெவருமிலர். இவர்களின் முகத்தில் சந்தோஷம் தாண்டவ மாடிக்கொண்டிருந்தது. இவர்கள் யாரெனில், நம் அழகேசனும்



புஷ்பவல்லியுமே. இவர்கள் இளம் பிராயத்தில் மனம் ஒருமித்து பள்ளியில் வாசித்ததையும், அதுபோன்ற பற்பல விஷயங்களையும் பேசிவிட்டு பிரியும் சமயம் புஷ்பவல்லி அழகேசனைப் பார்த்து, 'காதலரே, அடியாளின் வேண்டுகோளின்படி ஈண்டுவந்ததற்கு வெகுமானமாக ஏதோ நான் தருவதைப் பெற்றுக்கொள்ளுங்கள்' என்று ஒரு முத்தம் தந்தாள். அதை ஏற்றுக்கொண்டு அழகேசனும் பதிலுக்குப் பதில் முத்தங்கள் சரமாரியாய்ப் பொழிந்தான். பின் புஷ்பவல்லி அழகேசனின் கரங்களைப் பற்றிக்கொண்டு தன்னுள்ளக் கருத்தை வெளியிட 'கண்ணாளா' என்றாள். நாவெழவில்லை; அழகேசனைக் கூர்ந்து நோக்கினாள். ஒரு விநாடிசென்றது. மீண்டும் 'நாதரே என்னைக் கைவிடவேண்டாம், கல்விச்சாலையில் வாசிக்கிற நாள்முதல் உங்கள்பால் ஒருவகைப் பிரீதி கொண்டேன். நேற்றுத் தங்களைப் பார்த்தவுடனே இழந்துபோன திரவியத்தை மீண்டும் பெற்றதுபோல் உவகையில் ஆழ்ந்தேன். காதல் என்னும் உணர்ச்சி உலகில் இல்லை என்றும், அது வேலையற்ற மனிதர்களின் வீண் அபவாதச் சொற்களென்றும் யான் எண்ணியது தவறு என்பதை நன்கு உணர்ந்தேன். தங்களை யான் என் உயிரினும் அதிகமாக மதிக்கிறேன்; நேசிக்கிறேன், இது சத்தியம். தாங்கள் எச்சமயத்தோராயினும் கவலையில்லை. ஜாதிகுலப் பிறப்பென்பதை வேறாக் களைந்தெறிந்து தங்களையே நான் மணப்பதன்றி வேறு ஆடவரைக் கண்ணெடுத்தும் பாரேன். இதற்கு மாறாக சூரிய சந்திரர் தத்தம் நெறி பிறழ்ந்து நடந்தாலும் சரி, என் தாய் தந்தையர் என்னைக் கைவிட்டாலும் சரி, நான் இக்கணம் கொண்டிருக்கும் உறுதியான எண்ணத்தை மாற்ற

முடியாது. இதோ என் வசனங்களைக் கேட்டுக்கொண்டிருக்கும் ஆண்டவன் முன்னிலையில் மீண்டும் சத்தியம் செய்கிறேன். தாங்கள் அடியாளை புறக்கணியாது அங்கீகரிப்பீர்களாக. இல்லையேல் இச் க்ஷணமே' என்றுத் தட்டுத்தடங்களோடு வாய்குழற, நாக்குலர, இருதயம் துடிக்கும்படி கூறினதை இதில் தொடர்ச்சியாய் நாம் எழுதினோமேயன்றி அவள் இவ்விதம் தெளிவாகக் கூறவில்லை. எனினும் எதிர்பாரா இவ்வார்த்தைகள் பசுமரத்தாணிபோல் நமது அழகேசனின் மனதில் தைத்தன. அவனுடைய உடம்பு வியர்த்தது. தனது இருகைகளையும் பற்றித் தன் மார்பின்மீது புஷ்பவல்லி வைத்துக் கொண்டதினால் அவளது ஸ்பர்சம் பட்டவுடனே அழகேசனின் உடல் புல்லரித்துச் சூடுகொண்டது. அவனது நெற்றியில் முத்து முத்தாக வியர்வை தோன்றிற்று. தேகம் படபடத்தது; அவன் மனத்தினுள்ளே சட்டென ஏதேதோன்றிற்று. என்ன செய்கிறான் என்பதை அறிந்துகொள்ளுமுன் அவன் புஷ்பவல்லியை அணைத்துக் கொண்டு அவளது உச்சி, நெற்றி, உதடு ஆகியவைகளில் முத்தங்களைப் பொழிந்தான். காதலர்கள் மனம் ஒன்றுபட்டதைக் கண்டு களிப்புற கீழ்த்திசையில் அடிவானத்தினின்றும் அப்பொழுது மெல்லென எழுந்தனன் பூரணச்சந்திரன். தலைக்குமேல் விண்மீன்கள் நின்று ஜ்வலித்தன. எங்கும் நிசப்தமாயிருந்தது; இளந்தென்றல் ஜில்லென்று மெதுவாய் வீசியது. பின் அழகேசன் அன்பு ததும்ப, 'புஷ்பா! நீ கொண்டது தெய்வ சம்மதமான காதலே. அக்கருணாகரர் நம் இருவர் உள்ளத்திலும் உள்ள மெய்யன்பை நீடிக்கச் செய்வார். எவ்விஷயத்திற்கும் கலங்கவேண்டாம். எனதாருயிர் உள்ளளவும் உன்னையே மணப்பதன்றி வேறு மங்கையை என் கனவிலும் நினையேன்' என்றான். அவனது பேச்சு உருக்கமாயிருந்தது. இதைக் கேள்வியுற்ற மாத்திரத்தில் புஷ்பவல்லியின் மனம் புளகாங்கிதமடைந்தது. அங்கிருந்த ஒரு ரோஜாப் புஷ்பத்தைக் கொய்தவாறு தன் புன்முறுவலை வெளிக்குக் காட்டினாள். பின்னர் அழகேசன் அவளின் கரங்களைப் பற்றியவாறே, 'காதலி! நாம் இங்குவந்து நேரமாகிவிட்டது. உன் தந்தையார் உன்னைத்தேடுவார். சீக்கிரம் வீடு நோக்கிச் செல்.' என அமுதமொழி புகல, புஷ்பவல்லி அவனைப் பிரியமனமில்லாதவாறு கன்றிழந்த மானைப்போல் ஏங்கி, தன் நயனங்களில் நீரைப் பெருக்கிய வண்ணம், அவனது கரங்களை தன் கண்களில் ஒற்றி, நாளை தன்னில்லத்திற்கு வரும்படி வேண்டினாள். அதற்கு அவன் இசைய இருவரும் திரும்பித் திரும்பிப் பார்த்த வண்ணமே பிரிந்தனர்.

## III

அழகேசன் முன்னமேயே புஷ்பவல்லியின் தந்தையார் சுந்தரம் பிள்ளையின் அன்பைப் பெற்றிருந்தமையால் அடிக்கடி அவருடைய இல்லத்திற்குச் சென்று அவருடன் உரையாடுவதுமா யிருந்தான்.

ஏற்கனவே இவனின் நற்குணத்தை அறிந்திருந்த பிள்ளைவாளும், இவனும் புஷ்பவல்லியும் தனித்திருப்பதில் சந்தேகம் கொள்ளாது இருந்தார்.

இதற்கிடையில் க்ஷயரோகத்தினால் பீடிக்கப்பட்ட அழகேசனின் சிறிய தந்தையார் (சிற்றன்னையின் கணவர்) காலமடைந்தார். தன்னை இதுகாறும் வளர்த்தவர் இறந்துவிட்டார் என்ற சொல் கேட்டவளவில் அப்படியே மூர்ச்சித்தான் அழகேசன். பின்னர் சிறிது நேரம் கழித்து தன் சுய உணர்வுபெற்று முதலியாரின் ஈமக்கடன்களை ஒருவாறு முடித்தான். சின்னாட்களில் அழகேசனும் பி. ஏ. பாஸாகிவிட்டதாக கெஜட்டில் தெரியவர, இவன் மேல்படிப்பதை நிறுத்தி வேலைக்குப் பிரயத்தனம் செய்தான். அதிஷ்டவசமாக நாகப்பட்டனத்தில் தாசில்தார் வேலை காலி இருக்கிறதென்றும், நேரில் வந்து யோக்கியதாம்சங்களைக் காட்டி வேலையை ஒப்புக்கொள்ளலாமென்றும் ஒரு உத்திரவுவர, மகிழ்ச்சியுடன் தன் சிற்றன்னையின் ஆஸ்திகளை விற்று அவளைக் கூட்டிக்கொண்டு, தன் உண்மைக் காதலி புஷ்பவல்லியின் பிரியாவிடைபெற்று நாகப்பட்டணம் போய்ச்சேர்ந்து வேலையில் அமர்ந்தான். தான் சுகமாகத் தன் சிற்றன்னையுடன் காலங் கழித்து வந்தாலும் தன் காதலியைக் கணமேனும் மறக்காது தன் கருத்தில் நினைத்தே வந்தேன்.

மாதங்கள் மூன்றுசென்றன. புஷ்பவல்லியின் திருமணப் பேச்சுக்கள் கிளம்பின. பலர் பெண்பார்க்க வந்தனர். சுந்தரம் பிள்ளைக்கும் அவரின் பத்தினிக்கும், தம் புதல்வி செல்வவதியாய் வாழவேண்டும் என்று எண்ணம். ஆனால் புஷ்பவல்லிக்கோ அழகேசனையே மணந்து கொள்ளவேண்டும் என்ற ஆனந்தப் பெருக்கு உளமதில் மல்கிக் கிடந்தது. அதற்கு மாறாகப் பிள்ளை ஜலத்தில் நீராடிய அக்கினி பகவானைத் தோற்கடிக்கும் நிறத்தை யுடையவரும் சிறந்த பூஸ்திதி உள்ளவரும் முதல் தாரமிழந்தவருமாகிய சுமார் 30 வயதுடைய ஷண்முகம் பிள்ளை என நாமம் பெற்றவருக்கே இரண்டாந்தாரமாகத் தன் பெண்ணைக் கொடுக்கச் சம்மதித்தார்.

தந்தையும் தாயும் இப்படித் தன் மணத்தை வேறு விதமாக முடிவு செய்ததை அறிந்த புஷ்பவல்லி பெரிதும் மனம் வருந்தினாள். பரிவுடன் தன் அன்னையின் பாதம் தொட்டுத் தன்னுள்ளக் கருத்தை வெளியிட்டாள். தாய்க்கு இவ்விவாகத்தில் பிரியமில்லை எனினும் பர்த்தாவின் சொல்லுக்கு எதிர்சொல்ல இயலாதவளாகையால் தன் புதல்வியின் எண்ணத்தை விட்டொழிக்குமாறு வேண்டினள். என்ன சொல்லியும் புஷ்பவல்லியின் உள்ளம் அழகேசனின்பாலே சென்று கொண்டிருந்தது.

## IV

ஒருநாள் அழகேசனுக்கு கடிதம் ஒன்று வந்தது. அதன் உறையின்மீது புஷ்பபுரி என்ற முத்திரை இட்டிருப்பதைக் கண்டு ஆவலோடு பிரித்துப் பார்க்கையில் அதில் கீழ்கண்டவாறு எழுதப் பட்டிருந்தது.

என் அன்பிற்குகந்த காதலரே,

தங்களுக்கு என்றும் நன்மை உண்டாகட்டும். 'நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று செய்யும்' என ஆன்றோர் சொல்வது நிஜமாய் விட்டது. தங்களுக்கு என்று பாதுகார்த்திருந்த என் உடலை வேறொருவருக்கு அர்ப்பணம் செய்ய, என் பெற்றோர் துணிந்து விட்டனர். எனது தந்தையிடம் என எண்ணத்தை வெளியிட அதற்கு அவர் தாங்கள் வேறு குலத்தவர் என்றும், என்னதான் நாகரீகம் வந்தாலும் ஜாதிக்கட்டுப்பாடுகளைத் தள்ள முடியாது என்றும் மறுத்து விட்டார். வெள்ளிக்கிழமை காலை 6-மணிக்கு முகூர்த்தம் என்று நிச்சயித்திருக்கிறது. இத்திருமணம் என் மனச் சம்மதமின்றி நடைபெறப் போகிறது என்பதை அறிவீர்களாக. தங்களின்பால் பூரண அன்பு வைத்து இக்கணம் நிராதியாய் நிற்கும் இவ்வடியாளை ஏற்றுக்கொள்ளச் சித்தமாயிருப்பின் இன்றே என்னைக்கொண்டு செல்வீர்களாக. தவறின் நாளை என் மணக்கோலத்தைக் காண்பார்கள். நீங்களும் என்னை, இனிக் காண முடியாது.

தங்களையே முழுதும் நம்பி இருக்கும்,
புஷ்பவல்லி.

அழகேசன் கடிதத்தை உற்று நோக்கினான். சிற்சில விடங்களில் கண்ணீர் விழுந்து எழுத்துக்கள் அழிந்திருப்பதையும் கண்டவளவில் தன்னை அறியாமலே நேத்திரங்களில் நீரைப் பெருக்கினான். 'என் உடல் பொருள் ஆவிகளைக் கொள்ளை கொண்ட காதலியை வேறொருவர் மணம்புரிய யான் எங்ஙனம் சகிப்பேன்? இனி அவளைப பிரிந்து நான் எவ்வாறு உயிர்வாழ்வேன்' என்றரற்றியவண்ணம் தன் அறையிலுள்ள சோபாவில் சாய்ந்து ஆழ்ந்த யோசனையில் இருந்தான்.

## V

பெண் வீட்டாரும் மாப்பிள்ளை வீட்டாரும் சிறந்த செல்வ வந்தர்களாகையால் புஷ்பபுரியின் ஒவ்வொரு வீதிகளும் நாலாவிதப் பூப்பந்தல்களாலும் கண்களைக் கவரக்கூடிய அதியற்புத வேலைப்பாடுகளமைந்த சிங்காரிப்புகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. கலியாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் வெகு துரிதமாய் நடந்து கொண்டிருந்தன. மங்கையர் பலர் அழகாய் உடுத்தி மணவீட்டுக்குள் பாபரப்பாய் செல்வதும் வருவதுமாயிருந்தனர். வேதங்களைக்

கரைகண்டதாக பெருமிதத்தோடு கூறும் சாஸ்திரிகள் பலர் பூரிதகக்ஷணக்காக முகூர்த்தநாளை கழுகு வட்டமிட்டது போல் காத்துக் கொண்டிருந்தனர். ஏழைமுதல் பணக்காரர்கள் வரைக்கும் திருமண ஓலைகள் வழங்கப்பட்டன. நாட்டியப் பெண்களுக்கும் நாதஸ்வரக் கச்சேரிக்கும் அச்சாரம் கொடுத்தாய் விட்டது. இத்தனை அலங்காரங்கள் நடப்பது புஷ்பபுரியின் வாசிகளுக்கு மனச் சந்தோஷமும், புஷ்பவல்லிக்கு பெருந்துயரமும் விளைவித்துக் கொண்டிருந்தன.

வெள்ளிக்கிழமை அதிகாலையில் ‘புஷ்ப நிலையம்’ எனும் மாளிகையில் ஜனங்கள் சூழ்ந்து இருந்தனர். மின்சாரத் தீபங்கள் பிரகாசித்தன. மணவறையில் மணமக்கள் இருவரும் வந்தமர்ந்தனர். நமது புஷ்பவல்லி ஆடைஆபரண அலங்காரப் பூஷிதியாய் வீற்றிருந்தது ஆங்கு வந்திருந்த பாலர்முதல் வயோதிகர்கள்வரை அனைவரையும் பிரமிக்கச் செய்தது. பாண்டு வாத்தியமும் அவற்றின் பின் நாதஸ்வரவாத்தியகோஷமும் கூடியிருந்தோரது ஆரவாரிப்பும் அலையென முழங்கிக்கொண்டிருந்தன. இதனிடையில் நமது புஷ்பவல்லி தன் தலையைத் தாழ்த்தியவாறே தனதுள்ளத்தை அழகேசனின்பாலே ஓடவிட்டுக் கொண்டிருந்தாள். புரோகிதர் ஒருவர் சிறிது ஜலத்தை மணமகனின் கையில் வார்த்து புஷ்பவல்லியின்மீது புரோக்ஷித்து மத்தியில் தங்கமிட்டதோர் மங்களத் திருநாணைக் கையிலேந்தி மந்திரத்தை உச்சரித்தவண்ண மிருக்கையில், அவரின் அருகிலிருந்த கூட்டத்தில் திடீரென்று பாம்பு, பாம்பு, என ஓரொலி கிளம்பிற்று. ‘பாம்பு என்றால் படையும் நடுங்கும்’ என்ற முதுமொழிக்கிணங்க, அங்கு உட்கார்ந்திருந்த ஜனங்களெல்லோரும் கும்பலாய் எழுந்தனர்.




புரோகிதர் தன்னுணர்வற்று கீழே சாய்ந்தார். அவரது பெருத்த தொந்தி, அவரை எழுந்திருக்க விடவில்லை. அதே சமயம் இருமோட்டார் வண்டிகளின் சப்தம் பூம், பூம், என ஒலித்தது. அதைத் தொடர்ந்தாற்போல் அவைகள் நிறுத்தபடும் ஓசை கேட்க, மறுக்ஷணமே திடுதிடென்று பராக்கிரமசாலிகளான சுமார் 25 பேர்கள் தடியும் கையுமாக இரைச்சலுடன் வீட்டிற்குள் நுழையலாயினர். அவர்களைக் கண்டவளவில் ஜனங்களில் அநேகர் வெளியே ஓடிவிட்டனர். அக்கூட்டத்தினிடையில் வேர்வை தாரை தாரையாய்

ஓட ஆவலுடன் மணவறையினுள்ளே பாய்ந்து வந்து நின்றான் நமது அழகேசன். அழகேசனைக் கண்டதும் புஷ்பவல்லியின் முகம் மலர்ந்தது. வந்தவர்கள் தடிகளை ஏந்தினவர்களாய் மணவறையைச் சூழ்ந்து நின்றுகொண்டனர். ஒருவன் புரோகிதரிடமிருந்து மாங்கலியத்தைப் பிடுங்கி அழகேசனிடம் கொடுக்க, அதை அவன் புஷ்பவல்லியின் கழுத்தில் பிணைத்தான். இருவரும் தங்கள் கரங்களைக் கோர்த்தவர்களாக மோட்டாரில் அமர்ந்தனர். இத்தனை வேலையும் அரைக்கணத்தில் முடிந்தது. வந்திருந்த மோட்டார்களும் விசையாய்ப் பறந்தன. கலியாணத்திற்கு வந்திருந்தவர்கள் திகைத்துப் போய் இன்னது நடக்கிறதென்று தெரியாதபடி முன் ஓடினவர்களை தொடர்ந்தே பல திசைகளிலும் விரைந்தோடினரே அன்றி பெண் போனதைக் கவனிப்பார் ஒருவருமிலர். (கூட்டத்தில் சிலர் ஓடினால் மற்றவர்களும் காரணங் கேட்காமலே ஓடுகிறவர்களைப் பின் தொடர்து ஓடுவது மனிதனுடைய இயற்கைச் சுபாவம் அன்றோ?) மாப்பிள்ளை வீட்டார்கள் வெட்கித் தலை குனிந்தனர். மணமகன் மணவறையிலேயே சாய்ந்தார். சுந்தரம்பிள்ளை வெளியில் வேகமாய் ஓடிவருகையில் வாசற்படி தட்டிக் கீழே விழுந்து பிரக்ஞையற்றுக் கிடந்தார். அவரின் மனைவியும் ஓவென அலறிக்கொண்டு ஒரு மூலையில் நின்று கதறினாள். மணவீட்டில் ஒரே சப்தமும் அழுகுரலுமே நிறைந்திருந்தது.

மாதங்கள் பல சென்றன. சுந்தரம் பிள்ளைக்கு தம் புத்திரி தான் கொண்டிருந்த மனவைராக்கியத்தின்படி அழகேசனையே அடைந்தாளே என்ற ஆவேசம் ஒருபக்கமும், தன் குலத்தையும் சமயத்தையும் கெடுக்கவன்றோ அவள் தனக்குப் புதல்வியாய் பிறந்தாள் என்ற ஆத்திரம் மறுபக்கமும் அவரைவாட்ட, அவள் எக்கேடு கெட்டுப்போனாலும் கவலையில்லை என்று புஷ்பவல்லியைத் தேடுவதை விட்டொழித்து, தன்னுடைய சகல சொத்துக்களையும் தர்மத்திற்கு எழுதி வைத்து விட்டார். சில நாட்களில் தம் இனத்தவர்கள் இழிவு சொல்வதை நினைந்துருகி அதே ஏக்கங் கொண்டவராய் உயிர்நீத்தார். பின்னர் அவரது பத்தினியும் தன் மகள் பிரிவாற்றாது விண்ணுலகேகினாள்.

நமது அழகேசனும் புஷ்பவல்லியும் நாகப்பட்டணத்தில் ஆனந்தமாக தங்கள் இல்லறவாழ்க்கையை இனிமைபெற நடத்தி வருகிறார்கள்.

வாசகர்களே! அன்பு என்னும் காதல் பெருக்கினாலேயே கடிமணம்புரியும் காதர்கள் இன்புடன் வாழ்வார்கள் என்பதை நன்குணர்ந்தே முன்னோர்கள் காந்தர்வ விவாகமும் சுயம்வரமும் ஏற்படுத்தினார்கள் போலும்!

# காதலா? நேசமா?

[எஸ் வாஸன் அமராவதி புதூர்]



'நீங்கள் உங்கள் மனைவியைக் கூட்டிக்கொண்டு வரப்போகிறீர்களா' என்றாள் சுதந்திரா. 'இல்லை. இன்னும் ஒரு வருஷம் இப்படியே சுதந்திரமாக வாழலாம் என்று நினைக்கிறேன்' என்றான் விஸ்வநாதன். 'ஏன்' என்று சுதந்திரா மறுபடி கேட்டதற்கு 'பழைய சுதந்திரத்தை யிழக்க மனம் இல்லை' என்றனன்.

விஸ்வநாதனுடைய கண்ணுக்கு சுதந்திரா அடிக்கடி வருத்தப்படுவதுபோல் தோன்றினாள். 'நான் சில சமயங்களில் நீ கண்ணீர் விடுவதைப் பார்க்கிறேன். என்ன காரணம்? சொன்னால் என்னால் முடிந்ததைச் செய்கிறேன்' என்றனன். 'ஒன்றுமில்லை' என்றனள் சுதந்திரா.

சுதந்திரா தன் பதினெட்டாவது வயதிலேயே தன் கணவனை மோட்டாருக்கு இரையாக்கினாள். அதனால் என்ன சேர்ந்தது? விதவையாயினாள். அவளுடைய சகோதரன் சங்கரன் காலேஜில் விஸ்வநாதனுடன் படிக்கிறான். இவர்கள் அறுபத்திமூன்று லிங்கச் செட்டித் தெருவில் இருந்தனர். விஸ்வநாதன் அவ்வீட்டில் ஒரு அறையை வாடகைக்கு எடுத்துக்கொண்டு இருந்தான். இவனுக்கு கலியாணமாய் ஒரு வருஷந்தான் ஆகிறது. தன் நண்பனாகிய சங்கரனுடன் பேசிக்கொண்டும் படித்துக்கொண்டும் காலத்தைக் கழித்து வந்தான்.

சுதந்திரா விதவையானாலும் அவளுடைய ஆர்வம் அடங்குமோ? அதுவும் இளம் விதவையல்லவா? உள்ளூர விஸ்வநாதனைக் காதலித்தனள். இவ்விஷயம் விஸ்வநாதனுக்குத் தெரியாமல் இருந்தது. ஆனால் அவள் விஸ்வநாதனுடன் புன்முறுவலோடு பேசுவாள். சில சமயங்களில் தனியாக அவள் கண்ணீர் வடிப்பதையும் பார்த்திருக்கிறான் விஸ்வநாதன். இறந்த புருஷனை நினைத்துக் கொண்டுதான் அழுகிறாள் என்று நினைப்பான்' விஸ்வநாதன்.

அவள் கணவன் மோட்டாரில் அடிபட்டு இறந்தால் அவள் என்ன செய்வாள்? பாவம் பாழும் பார்ப்பனச் சமூகம் விதவா

விவாகத்துக்கு இடம் கொடுக்காது. இதற்காக அவள் தன் இஷ்டத்தை பூர்த்தி செய்யாமல் மனம் நொந்துகொள்வது நியாயமா? ஒரு பாவமும் அறியாத ஒரு இளமங்கை புருஷன் இறந்ததற்காக தன் வாழ்நாள் முழுமையும் அழுதுகொண்டுதான் காலத்தைக் கழிக்க வேண்டுமோ? விதவையின் கண்ணீரை ஆற்ற சமூகம் என்று முன் வருமோ? எங்கேயோ போய்விட்டேனே. சுதந்திராவைக் கவனிப்போம்.




விஸ்வனாதனுக்கு நான்கைந்து நாட்களாய் உடம்பு சரியாயில்லாததினால் தன் அறையில் இருந்தான். சங்கரன் காலேஜுக்குச் சென்றிருந்தான், தன் அறையின் ஜன்னல் வழியாக ஒரு நிழல் போனதைக் கண்டான் விஸ்வனாதன். திடுக்கிட்டு ஜன்னல் பக்கம் சென்றான். அங்கு தன் விலாசத்துக்கு ஒரு கடிதம் இருப்பதைப் பார்த்தான். அதைப் பிரித்தனன். அதில்,

அன்புடைய விஸ்வனாதனுக்கு,

எவ்வளவுதான் பொருத்துப் பார்த்தாலும் என்னால் சகிக்க முடியவில்லை. நண்பருடன் சிநேகமாய் இருப்பதுதான் நியாயமாயிருந்தாலும் நான் உங்களைக் காதலிக்கிறேன். இது பெரும்பாவம் என்று சொன்னாலும், அதனால் ஏற்படும் கஷ்டங்களை அனுபவிக்க நான் தயாராய் இருக்கிறேன். இக்காதலினால் நான் இறப்பதை நீங்கள் விரும்புவீர்களா? இனி என்னால் காலந் தள்ளமுடியாது. என் மனதிலுள்ளதை வெளிப்படையாகச் சொல்லியாகிவிட்டது. உங்களை அடையாவிட்டால் நான் இறப்பது நிச்சயம். நீங்களும் மறுக்க மாட்டீர்களென்று எண்ணுகிறேன்.

இப்படிக்கு,

சுதந்திரா.

என்று எழுதப்பட்டிருந்தது.

இதைப் பார்த்ததும் விஸ்வனுக்கு தூக்கிவாரிப் போட்டது. கடிதத்தைச் சுக்குக் சுக்கலாகக் கிழித்துப் போட்டான். மனதில் ஏதோ ஒரு குழப்பம் உண்டாயிற்று. அன்றிரவு தூக்கம் வரவில்லை. படுக்கையில் அப்படியும் இப்படியும் புரண்டான். அவனுக்கே காரணம் புரியவில்லை. மணி 11 அடித்தது. ½ மணியுமடித்தது. தினம் 10 மணிக்குத் தூங்குபவனுக்கு அன்று தூக்கம் வரவில்லை. மணி

12 அடித்ததும் தன் அறைக் கதவைத்தட்டும் சத்தம் கேட்டது. விளக்கையேற்றி ஆச்சரியத்துடன் கதவைத் திறந்தனன். சுதந்திரா நிற்பதைக் கண்டு திடுக்கிட்டனன். சுதந்திரா ஒரு நாற்காலியில் அமர்ந்தனள். 'என் மனம் உங்கள்பால் சென்று விட்டது. நீங்கள் என்னை மணக்காவிட்டால் நான் தற்கொலை செய்து கொள்ளப் போகிறேன். இது சத்தியம். நான் தற்கொலை செய்து கொள்ளுவது உங்களுக்கு இஷ்டமா? என்றால் இனி உங்களை மணக்காமல் உயிருடன் வாழ முடியாது' என்று சொல்லி அவனை யணைத்து ஐந்தாறு முத்தம் கொடுத்தனள்.




இது எதிர்பாராத செய்கை யாதலால் விஸ்வன் திடுக்கிட்டனன். 'நீ செய்தது அடாத செய்கை. உன்னை மணந்துகொண்டால் என்னை மணந்து கொண்ட பெண்ணின் கதி என்னவாகும்? அவளை நான் துரோகித்தவன் என்றல்லவா ஆகும். இது யாராலும் ஒப்புக் கொள்ளக்கூடிய காரியமல்ல. இது உனக்கு அழகல்ல. நீ என்ன செய்கின்றாய் என்பதை நினைத்துப் பார். உன் நிலைமையைவிட என் மனைவியின் நிலை ரொம்பப் பரிதாபகரமா யிருக்கும்'

'அதெல்லாம் எனக்குத் தெரியாது. என்னை நீங்கள் மணக்கா விட்டால் நான் தற்கொலை செய்து கொள்வேன். இது நிச்சயம்; இது சத்தியம்' என்று அவனது இரண்டு கால்களையும் பிடித்துக் கொண்டாள். விஸ்வனுக்கு யாது செய்வதென்று புரியவில்லை. என்ன செய்வான் பாவம்! அவனுக்கும் கடிதத்தை பார்த்ததி லிருந்து மனம் சமாதானத்திலில்லை.

அவளை இறக்க விடுவதா? அதுவும் இளமங்கையை இறக்க விடுவதா? அத்துரோகத்தைத்தான் ஏற்றுக்கொள்வதா? அல்லது தான் மணந்துகொண்ட பெண்ணுக்குத் துரோகம் செய்வதா? என்ன செய்வதென்று தெரியாமல் பலவாறாக எண்ணினான்.

'சுதந்திரா! நான் திடீரென்று பதில்கூறவும், ஒப்புக்கொள்ள வும் முடியாது. இன்னும் ஒருவாரம் காலம் கொடு. அதாவது அடுத்த திங்கட்கிழமை பதில் கூறுகிறேன்' என்றான். சுதந்திரா அவனை வணங்கிவிட்டு தன் அறைக்குச் சென்றாள்.

குறித்த திங்கட்கிழமை வந்தது. ஒரு கவரை சுதந்திரா பெற்ருள். அதை உடைப்பதற்கு முன் பலதடவை முத்தமிட்டனள். கண்களில் ஒற்றிக்கொண்டனள். ஆனந்தக் கண்ணீர் விட்டனள்.

வெளியே போயிருந்த சங்கரன் மாலை 7 மணிக்கு தன் அறைக்கு வந்தனன். மேஜையின்மேல் தன் விலாசத்துக்கு ஒரு கடிதம் இருந்தது. அதைப் பிரித்துப் பார்த்தனன். அதில்,

அன்புடைய சங்கரா!

எனக்கு இல்வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டுவிட்டது. நான் தேச சஞ்சாரியாகப் போகிறேன். என்னைத் தயவுசெய்து தேட வேண்டாம். இதுதான் நான் உன்னைக் கடைசியாகக் கேட்டுக் கொள்வது.

இப்படிக்கு,

உன்னன்புள்ள சகோதரி, சுதந்திரா.

விஸ்வநாதன் இப்பொழுது ஒவ்வொரு கிணற்றையும் வெட்டிப் பார்க்கிருன். அவள் தற்கொலைதான் செய்து கொண்டிருக்க வேண்டும் என்ற நிச்சயம் அவனுக்கு இருக்கிறது. பத்திரிகையில் 'சுதந்திராவின்' பிரேத விசாரணைபற்றி ஏதாவது வருகின்றதா வென்று அடிக்கடி பார்க்கின்ருன். இப்பாவம் யாரைச் சேரும் என்பது அவனுக்குப் புரியவில்லை. இதற்குக் காரணம் காதலா! நேசமா!



# தனையன் காதலியை தந்தை மணத்தல்

[ம. ப. சாமி. கோவை]



மாலை சுமார் 5½ மணியிருக்கும். ஒரு பூங்காவின் ஓரத்தில் அழகிய மலர்ச் செடிகளின் பக்கத்திலுள்ள ஓர் ஆசனத்தில் இரு இளங் காதலர்கள் தனித்து உட்கார்ந்து புன்முறுவல் பூத்த முகத்துடன் சம்பாஷித்துக் கொண்டிருந்தனர். அவர்களில் பெண்ணுக்கு வயது 15 அல்லது 16 என்றும், அவள் பக்கத்தில் அமர்ந்து உல்லாசமாக அவளுடன் உரையாடிக் கொண்டிருந்த அவ்வாலிபனுக்கு வயது 20 அல்லது 22 என்றும் சுமாராக மதிக்கலாம். இப்படி அவர்கள் இருவரும் சந்தோஷமாக உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கும்போது,

அவ்வாலிபன்:—மாணிக்கம்! அதோ பார், அம்மரத்தில் இரு குருவிகள் உல்லாசமாக ஒன்றையொன்று அன்பு ததும்ப நெருங்கி விளையாடுகின்றதைப் பார்த்தனையா! அதைப்போல் நாமிருவரும் ஒருவரை ஒருவர் பிரியாது இருப்பது எக்காலமோ?

மாணிக்கம்:—சுந்தரரே! ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்? சதா உங்கள் உருவத்தையே மனதில்வைத்து இரவும் பகலும் தியானித்துக் கொண்டிருக்கும் எனக்குத் தாங்கள் கூறுவது ஒன்றும் விளங்கவில்லையே.

சுந்தரம்:—காதலி! நான் எதற்காக அப்படிச் சொன்னேன் எனில், நாளைக் காலையில் என் பி. ஏ. படிப்பை முடித்துவிட்டு வருவதற்கு சென்னைக்குப் புறப்பட ஏற்பாடாயிருக்கிறது. நான் அங்குச் சென்றுவர இரண்டுவாரங்கள் ஆகும். ஆதலால்தான் நான் அப்படிச் சொன்னேன்.

'காதல! நீங்கள் வருவதற்கு இரண்டு வருடம் பிடிக்கும். உங்கள் திருமுகத்தைப் பார்த்துப் பேச இரண்டு வருடமா செல்லவேண்டும்? ஐயோ! அவ்விரண்டு வருடத்தையும் நான் எவ்வாறு கழிப்பேன்? இப்போதே, தங்கள் இருக்கும்போதே உங்களை ஒருநாள் பார்க்காதிருந்தால் என் நெஞ்சும், என் கண்களும் படும்வேதனையே என்னால்

சகிக்க முடியாததாக இருக்கிறதே. இவ்விரண்டு வருடங்களேயும்....... ஹா! நினைக்கும்பொழுதே பகீர் என்கிறதே. மனம் கலங்குகின்றதே. வலது புருவம் துடிக்கின்றதே. இப்பிரிவை இப்பேதையாகிய நான் எவ்வாறு சகிப்பேன்? என்ருள்'

'என் மடமயிலே! கலங்காதே. மனதைப் பதறவிடாதே. இதற்கெல்லாம் நான் ஒரு வழி செய்துவிட்டுப் போகிறேன். அதற்காகவே நான் உன்னிடத்தில் சொல்லிப்போக வந்தேன். இந்தா ! இதை வைத்துக்கொள். இதைப் பார்த்தாவது கொஞ்சம் மனம் தேறுவாயல்லவா? இவ்விரண்டு வருடங்களேயும் இரண்டு நாட்களாக, என் உன்மேல் இருக்கும் பிரியத்திஞல் இரண்டு நிமிஷமாகப் பாவித்துக் கழித்து, நான் சீக்கிரம் வந்து விடுகிறேன்' என்று கூறி தன் கையிலிருந்த ஒரு காகிதச் சுருளேக் கொடுத்தான்.



மாணிக்கம் என்னும் அம்மாது அதைப் பிரித்துப் பார்த்து, மிக்க சந்தோஷத்துடன் மலர்ந்த உதடுகளால் அதிலிருந்த அவன் புகைப் படத்திற்கு ஓர் முத்தம் ஈந்தாள். அதைக் கண்ட அவ்வாலிபஞகிய சுந்தரம் சந்தோஷ மடைந்தானுயினும் பொருமைப் பட்ட மனத்தினனுய் 'மாணிக்கம்! நான் இருக்கும்போதே எனக்கு இவ்வஞ்சகம் புரியலாமா?' என்ருன்.

மாணிக்கம்:—காந்தா! என்ன நீங்கள் திடுக்கென இம்மாதிரி என்மீது சந்தேகப்படுகின்றீர்கள் ? இப்பேதை யறியாமல் செய்த குற்றம் எதுவாயினும் இச்சமயம் மன்னித்தருளுங்கள்.

'கண்ணுட்டி! எப்படி மன்னிக்க முடியும்? நான் உன் அருகில் இருக்கும்பொழுதே எனக்களிக்கும் முத்தத்தை நீ அப்படத்திற்கு அளித்தது நீ செய்த வஞ்சகமல்லவா ?

'கண்ணளா! ஆம், வஞ்சகம்தான். எனினும் நீங்கள் சென்றதும் எப்பொழுதும் என்னருகிலேயே இருந்து சதா இன்பம் தரப்போவது இப்படந்தானே! ஆதலால் இப்படத்திற்கு நான் முத்தமிட்டது தப்பிதமெனின், அம்முத்தத்தை உங்களிடத்திலிருந்தே நான் வாங்கிக்கொள்ளுகிறேன். என்ருள்.

பின் இருவரும் தங்கள் பிரிவாற்றாமையை வாயினல் சொல்லிக் கொள்வதை பிறர் அறிந்தால் கேவலப் படுத்துவார்கள் என்றே அல்லது வேறு எவ்விதம் நினைத்தோ தமது கண்களாலேயே தெரிவித்து ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிந்தனர்.

காதலர்கள் பிரிந்து இரண்டாவதாண்டும் முடிவடைந்துகொண்டிருந்தது.

கலாசாலையில் பல மாணவர்களுக்கு மத்தியில் ஓர் வாலிபன் உபாத்தியாயர் தமக்குச் சொல்லிக் கொடுக்கும் பாடங்களை மிக்க கவனத்துடன் கேட்டுக்கொண்டிருந்தானயினும், உண்மையில் அவன் மனம் அங்கு இல்லை என்பதை அவனது முகம் தெரிவித்தது. அவ்வாலிபன் யார்? அவனே நமது சுந்தரம். அவன் மனம் எங்குச் சென்றிருக்கும் என்பதை வாசகர்களே யூகித்துக் கொள்ளுங்கள். தன் காதலி மாணிக்கத்திடம் மனதைச் செலுத்திய சுந்தரம் பாடசாலையில் மணிஅடித்த சப்தத்தையும் கேட்காது தன் பக்கத்தில் உட்கார்ந்திருந்த மாணவர்கள் எழுந்து, தத்தம் இருப்பிடத்திற்குச் சென்றதையும் கவனிக்காது, உட்கார்ந்தவண்ணமாகவே இருந்தான். அச்சமயத்தில் அவன் ஒரு பதுமை போன்றிருந்தான் என்றே சொல்லலாம். பின் அப்பள்ளியின் வேலையாள் வந்து அவனைத் தட்டிப் பேசினபொழுதுதான் அவன் மனம் அவன் வசப்பட்டது. தான் தங்கியிருக்கும் ஹாஸ்டலுக்குச் சென்று தனது அறையில் அப்படியே சோர்ந்து ஒரு சாய்வு நாற்காலியில் உட்கார்ந்தான். இது இப்படியிருக்க,

ஓர் அறையில் கையில் பிடித்த புகைப்படத்துடன் படுக்கையில் படுத்தவண்ணமாக கண்ணில் நீர்ததும்ப, நாவது உலர மிக்க வேதனையுடன் தனது மனதில் உதித்த விசனத்தை யடக்க முடியாமல் அழுதவண்ணமாக ஓர் மங்கைநல்லாள் 'எனக்குக் கலியாணமாம்! (அசட்டுச் சிரிப்பு) அதுவும் இன்னும் மூன்று நான்கு நாட்களுக்குள்ளாம். ஒரு பெரிய பணக்காரனும்! வயதும் சுமாராகத்தானிருக்குமாம்! கேட்கும் பொருள், நகை யாவும் கொடுப்பானும்! எப்பொழுதும் சுகபோகியாக்காலம் கழிக்கலாமாம்! (விம்மல்) (அப்படத்தைப்பார்த்து) நாதா! நான் உங்களை மறப்பதா? முடியாது! முடியாது! ஒருக்காலும் மறவேன். வாழ்ந்தால் உங்களுடன் வாழ்வேன். இல்லையேல் சாவேன். அன்று உங்களைக் கண்டு மோகித்த கண்கள் இன்று மாறுபடுவதென்றால் முடியுமா? முடியாது, முடியாது. அன்று உங்களைத் தழுவிய இக்கரங்கள் இனி மற்றொருவரைத் தழுவ இசையுமா? இசையாது. இசையாது. (மௌனம்) பின்னும் ஹா! என்ன கஷ்டகாலம். என் தாயிருப்பின் என் கதி இவ்வாறாகுமா? என் ஆசைக்குகந்த, என் அன்பைக் கவர்ந்த (படத்தைப் பார்த்து) உங்களுக்கு

என்னை வாழ்க்கைப்படுத்தும்படி யல்லவோ நான் சொல்லுவேன். என்னைத் தன் கண்போன்று வளர்த்த அவளும் என் சொல்லைத் தட்டுவாளா? தாயே நீ என்னை ஏன் பிரிந்தாய்? இப்பேதைக்கு ஏற்படும் துயரை கண்டு சகிக்கமுடியாது என எண்ணி விட்டு அகன்ருயோ? அப்பா! நீங்கள் என்னை இப்படி அல்லாடச் செய்வது உங்கள் மனதிற்கு சம்மதமா? என் சிற்றன்னையின் துர்போதனையன்றோ இது. ஆ! ஆ!' என தன் மனதிற்குள் தோன்றியவாறு தன்னை யறியாமலேயே பிதற்றி, கடைசியில் சோர்ந்து நித்திராதேவியின் வாய்ப்பட்டாள்.

* * *

ஹாஸ்டலின் அறையில் சாய்வுநாற்காலியில் உட்கார்ந்தவண்ணமாகவே சுந்தரம் தன் மேஜையின்மேல் ஒரு கடிதம் இருப்பதைப் பார்த்து அதை எடுத்துப் படிக்கலானுன்.

கோவை, 29—12—1934.

என் அருமைப் புதல்வன் சுந்தரத்திற்கு,

உனக்கு மங்களம் உண்டாகக்கடவது. நீ உன்படிப்பில் மிக்க சிரத்தையுடன் கவனம் செலுத்தி வருகிருய் என்றும், வருடாந்திர பரீக்ஷையில் முதன்மையாகத் தேறிவிடுவாய் என்றும் நான் நினைக்கின்றேன். பரீக்ஷையும் பக்கத்தில் வந்துகொண் டிருக்கிறது. உன் புத்தியை சிதறவிடாது படிப்பில் கவனம் செலுத்து. எல்லாம் தெரிந்த உனக்கு நான் எழுதவேண்டியது ஒன்றுமில்லை. தவிர நமது வீட்டில் வேலைகளைக் கவனிக்க ஒரு பெண்பிள்ளையும் இல்லாதபடியினுலும், உன் தாய் இறந்து பல ஆண்டுகள் ஆவதாலும், வீட்டில் அசௌகரியமா யிருப்பதாலும் நமது சுற்றத்தார்களின் தூண்டுதலால் ஒரு பெண்ணை நான் விவாகம் செய்துகொள்ளுவதாகப் பேசி, நிச்சயித்து ஆய்விட்டது. கலியாணத்திற்கு இன்னும் சில நாட்களே இருக்கின்றன. நீ உன் படிப்பைவிட்டு பரீக்ஷை காலத்தில் வர முடியாது. ஆதலால் உனக்கு இதைத் தெரிவிக்கவே இதையெழுதினேன். இதை நீயும் சரியென ஆமோதிப்பாய் என நம்புகிறேன். என் செய்வது? உனக்கு மணம்செய்து பார்த்து மகிழவேணும் என்று இருந்த நானே இப்பொழுது கலியாணம் செய்துகொள்ளலாயிற்று. ஒன்றும் முழுகிவிடவில்லை. நீ பரீக்ஷை முடிந்து வந்ததும் உன் இஷ்டப்படி பெண்பார்த்து உனக்கும் மணம் முடித்துவிடலாம். எல்லாம் அவன் செயல். 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்பதை நீ அறிந்தவன்தானே! உன் க்ஷேமத்தை அடிக்கடி தெரிவிக்கவும்.

இப்படிக்கு,

உன் தந்தை,

கோபாலகிருஷ்ண செட்டியார்.

இக்கடிதத்தைப் படித்ததும், சுந்தரம் மிக்க மகிழ்ச்சியடைந்தா ராயினும் 'பெண் யார் என்பதைத் தெரிவிக்கவில்லையே, சரி. எப்படியும் நாம் பார்க்காமலா இருக்கப் போகிறோம். சந்தோஷமாக மணம் நடத்திக் கொள்ளட்டும். காலையே கடிதம் எழுதிவிடலாம்' என கருதி தன் படிப்பைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

அதிகாலையில் கோவை ஜலேந்திரபுரத்தில் உள்ள ஒரு பெரிய மாடிவீட்டில் மங்களகரமான வாத்தியத்தொனி நித்திரை செய்து கொண்டிருந்தவர்கள் செவிகளிளெல்லாம் புகுந்து அவர்களின் துயிலை அகற்றி அவர்களை அம்மாளிகைக்கு வரும்படி அழைத்தது. எதற்காக? அம்மாளிகையின் முன் வாசலில் பந்தல் போட்டு அதில் சிறந்த பூ வேலைக்காரர்களைக் கொண்டு பற்பலவிதமான புஷ்பங்களை நிரப்பி முன்புரத்தில் வாழையாங்களை கட்டியும், பாக்கு குலைகளால் தோரணங்கள் கட்டுவித்துமிருந்தது. சிறிது நேரம் நிசப்தம். பின்னர் வாத்தியம் முழக்கம். இதுதான் நமது சுந்தரத்தின் வீடு. அவரின் தகப்பனாரின் கலியாணதினம். தாம்பூலங்கள் யாவருக்கும் வழங்கப் பெற்றன. அங்கு வந்திருந்தவர்கள் எல்லாம் மணமக்களை ஆசீர்வதித்தனர். மணமும் மங்களகரமாகவே பூர்த்தியடைந்தது. அம்மாதமும் முடிவடைந்தது. சுந்தரத்தின் பரீக்ஷையும் முடிவடைந்தது.

அம்மாதத்தின் கடைசி நாள். சுந்தரத்தின் தகப்பனார் ஆகிய கோபாலகிருஷ்ண செட்டியார் தமது மோட்டாரில் காலை சுமார் 6 மணிக்கு வெகு விரைவுடன் ரயில்வேஸ்டேஷனுக்குப் போய்க்கொண்டிருந்தார். ரயிலும் வந்து நின்றது. அதில்இருந்து இறங்கிய சுந்தரம் நேராக தன் தகப்பனாால் சந்தோஷமாக வரவேற்கப்பட்டான். மோட்டார்காரில் ஏறி வீட்டிற்கு வந்துகொண் டிருந்தான். அச்சமயத்தில் சுந்தரம் தகப்பனாரை 'அப்பா! வீட்டில் எல்லோரும் க்ஷேமம்தானே ?' என்று கேட்டான்.

தகப்பனார்:—எல்லோரும் க்ஷேமந்தான்.

சுந்தரம்:—என் சிறிய தாயார் ?

உடனே கிழவரின் முகம் மாறுதல் அடைந்தது. எவ்விதமான மாறுதல்? அதிருப்தியுடன் அவளும் க்ஷேமமாகத்தான் இருக்கிறாள்' என்றார்.

இதற்குள் வண்டியும் வீட்டின் வாசலில்வந்து நின்றது. இருவரும் இறங்கி உட்சென்றனர்.

எட்டுமணி சுமாருக்கு சுந்தரம் காலைக் கடன்களை முடித்து தன்னை நன்றாக அலங்கரித்துக்கொண்டு பார்ப்பதற்கே புது மனிதனாகத் தோன்றினான். அவன் மனம் அவனுக்கு முந்தியே மற்றோர்

இடத்திற்குச் சென்றிருந்தது. எங்கு? தன் அருமைக் காதலி மாணிக்கத்தின் இடத்திற்கு.

ஹாலில் ஒரு மேஜையின் முன் இரு நாற்காலிகளில் தந்தையும் மகனும் அமர்ந்து சுந்தரத்தின் படிப்பின் விஷயமாக பேசிக்கொண்



டிருந்தார்கள். அச்சமயத்தில் சிற்றுண்டிகளும் காப்பியும் ஓர் மாது கையில் ஏந்தியவண்ணம் அங்கு வந்தாள். அவளே சுந்தரத்தின் சிற்றன்னை.

அம்மடவன்னம் சுந்தரத்தைக் கண்டாலோ இல்லையோ. தன் கையில் இருந்த சாமான்களை அப்படியே போட்டுவிட்டு தம்மை மணந்த கிழவரையும் மறந்து கண்களில் நீர்ததும்ப 'நாதா!' என ஓடி சுந்தரத்தை கட்டிக்கொண்டு அழலானாள். இம்மாது யார்?

(தொடரும்)






# கோகிலா

[வி. ஜி. ஜெயராம்]

## நாடக பாத்திரங்கள்

| | | |
|---|---|---|
| ஸ்ரீனிவாசன் | ... | ராமசாமி பிள்ளையின் மகன் |
| இரத்தினம் | ... | ஸ்ரீனிவாசன் நண்பன் |
| கோகிலா | ... | ,, காதலி |
| நடேச பிள்ளை | ... | கோகிலாவின் தந்தை |
| சரஸ்வதி அம்மாள் | ... | ,, தாய் |
| சாம்பன் } கிருஷ்ணன் } | ... | ஸ்ரீனிவாசனின் பள்ளிக்கூட நண்பர்கள்; குடியர்கள். |
| சண்முகம் | ... | துப்பறிபவன், ஸ்ரீனிவாசனின் சிற்றப்பன் |
| ரங்கநாயகி | ... | ஸ்ரீனிவாசனின் தாய் |
| சிவம் | ... | கிருஷ்ணனின் வேலையாள் |
| கந்தன் | ... | இடையன் |
| கருப்பாயி | ... | இடைச்சி |
| மதிவதனம் | ... | சாம்பன் மனைவி |
| முனியன் | ... | கொள்ளைக் கூட்டத்தை சேர்ந்தவன் |

குடு குடுப்பைக்காரன், கொத்தவால், போலீஸ் அதிகாரிகள், வேலையாட்கள், கொள்ளைக் கூட்டத்தார். மற்றும் பலர்.

[முன் வெளியான பாகங்களின் சுருக்கம்: நடேசபிள்ளை தனது பெண் கோகிலாவை குடியனான கிருஷ்ணன் என்பவருக்கு இரண்டாந்தாரமாக கொடுக்கவிரும்புகிறார். கோகிலா அதை விரும்பாது, தன்னுடன் படித்த ஸ்ரீனிவாசன் என்பவனை காதலிக்கிறாள். அவளும் ஸ்ரீனிவாசனும் மதுரைக்கு புறப்பட்டுச் சென்றுவிடத் தீர்மானித்து இருவரும் கடற்கரையில் இரவு 12 மணிக்கு சந்திப்பதாக முடிவு செய்துகொள்ளுகிறார்கள். இவைகளை கிருஷ்ணின்

கூட்டாளியான முனியன் என்பவன் ஒற்றுக்கேட்டு, அன்றிரவு ஸ்ரீனிவாசனை கொல்ல பெண்வீட்டார் முயற்சிப்பதாயும்,எங்காவது ஓடிவிடும்படியும் கோகிலா எழுதுவதுபோல் சீனிவாசனுக்கு கடிதம் எழுதுகிறான். சீனிவாசனும் அவ்விதமே ஓடிவிடுகிறான். கோகிலா கடற்கரைக்கு வருகிறாள். அவளை முனியன் கபடமாய் அழைத்துச்சென்று கிருஷ்ணன் வீட்டிற்கு கொண்டுபோய், சிறைவைக்கிறான். அவள் சிவன் என்னும் வேலைக்காரன் உதவியால் தப்பி வெளிவருகிறாள். அவளை மீண்டும் முனியன் தெருவில் சந்தித்து இழுத்துப்போகப் பார்க்கிறான். அப்பொழுது சீனிவாசனின் நண்பன் இரத்தினம் தற்செயலாய் அங்குவந்து அவளைக் காப்பாற்றுகிறான். வீட்டைவிட்டு ஓடிய சீனிவாசன் ஒரு காட்டுப் பாதையில் களைப்பாய் படுத்துக் கிடக்கிறான். அவனை ஓர் இடைச்சி கண்டு, அவனது களைப்பைத் தீர்த்து அவனைத் தனது வீட்டிற்கு அழைத்துச் செல்லுகிறாள். சீனிவாசனின் சிறிய தந்தையும் துப்பறிபவருமான திரு. சண்முகம் இரத்தினத்தினிடமிருந்து சீனிவாசனையும் கோகிலாவையும் பற்றி அவனுக்குத் தெரிந்தவற்றை கேட்டுவிட்டு கிருஷ்ணின் செய்கைகளையும் அவனது கூட்டாளிகளின் செய்கைகளையும் மாறுவேடத்துடன் அவர்கள் பின்சென்று கவனிக்கிறார்.]

## காட்சி 10.

இடம்:—சாம்பன் வீடு.

காலம்:—மாலை.

மதிவதனம்:—என் காதலர் வீட்டைவிட்டுச் சென்று நான்கு நாட்கள் ஆகிறது. ஐயோ! குடி, குடி, பாழும் குடி, சொத்தையெல்லாம் அழித்தும், இன்னும் புத்திவரவில்லையே. தெய்வமே! அந்தப்பாவி கிருஷ்ணனால் குடியுடனும், சூதாட்டத்துடனும் நில்லாமல், தாசிவீடே கெதி என்று இருக்கிறார். ஆ......பரமசிவமே, என்னை ஆதரிப்பது உன் கடமை. என் தாய் தந்தையர் இறந்தபிறகு எனக்கு என் நாதனே தாய் தந்தை என்று நினைத்திருந்தேன். அவரும் என்னைக் கைவிட்டு விட்டாரே. மூன்று நாட்களாக வரவில்லையே, எங்கிருக்கிறாரோ? நான் என் இன்னும் உயிருடன் இருக்க வேண்டும்?

(சாம்பன் பிரவேசிக்கிறான்)

மதி:—நாதா! இரண்டு நாட்களாக எங்குச் சென்றிருந்தீர்கள்? ஐயோ! தங்கள் தேகம் ஏன் மெலிந்து காணப்படுகிறதே? வாருங்கள், குளித்துவிட்டுச் சாப்பிடுங்கள்.

சாம்:—கண்ணே! நீ ஏன் வருந்துகிறாய்? இனிமேல் வீட்டை விட்டு வெளியே போவதில்லை. உனக்குச் சந்தோஷந்தானே?

மதி:—வாருங்கள். சிறிது ஆகாரம் அருந்துங்கள்.

சாம்:—(குளித்துவிட்டு, சாப்பிடுகிறான்) அன்பே என் சட்டைப் பையில் ரூபாய் 100 இருக்கிறது. வீட்டுச் செலவுக்கு எடுத்துக்கொள்.

மதி:—நாதா! ஏது ரூபாய்கள். எங்கேயாவது வேலையில் சேர்ந்திருக்கிறீர்களா?

சாம்:—இல்லை, இல்லை; என் நண்பன் கிருஷ்ணன்தான் இதுவரையில் கொடுத்துவந்தான். நான் வெளியேபோய் வருகிறேன். சாக்கிரதையாக இரு.

(நன்றாக குடித்துவிட்டு வருகிறான்)

மதி:—நாதா! வர, வர, அதிகமாக இத் துர்ப்பழக்கத்தை மேற்கொள்ள வேண்டாம். நம் சொத்தை அழித்தது இப்பொழும் குடிதானே. வேண்டாம்! இதை விட்டு விடுங்கள்.

சாம்:—ஏது, கணவன் என்கிற மரியாதைகூட இல்லையே? நீயா, எனக்குக் குடிக்கப் பணம் கொடுக்கிறாய்? தடி முண்டை, என்னை யார் என்று நினைத்தாய்? மரியாதையாய் இருந்தால் இரு, இல்லாவிட்டால் ஓடி விடு.



மதி:—நாதா! நான் தாங்களை ஒன்றும் கேவலமாகப் பேசவில்லையே. இத்துர்பழக்கத்தை விட்டு விடும்படி வணக்கத்துடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

(காலில்விழுந்து வணங்குகிறாள்)

சாம்:—சீ, தூரப்போ, கழுதை; குடியை விட்டுவிட வேண்டுமா? உன் இஷ்டம்போல் நடக்க முடியாது. போ வெளியே.

(உதைத்துத் தள்ளிவிட்டு, வெளியே போகிறான்.)

மதி:—(கதவை தாளிட்டுக்கொண்டு) ஜெகதீசா! உலகத்தில் இனி ஜீவிப்பதில் பயனென்ன? இதுவரையில் கணவனிடம் துஷணைகளை மட்டுங் கேட்டுக்கொண்டு என் துக்கத்தை ஒருவாறு சகித்துக்கொண்டிருந்தேன். இப்பொழுது உதையும், அடியும் படும்படி நேரிட்டிருக்கிறது. இனியும் நான் எனது உயிரை வைத்துக்கொண்டிருப்பதா? சீ, சீ, ஒருக்காலும் வைத்துக்கொண்டிருக்க முடியாது. என் கணவருக்கு இதுவரையில் துரோகம் செய்தவளல்ல. இன்று என் மனசாட்சிக்கு விரோதமான பெரிய அறிவிலாக் காரியத்தைச் செய்யப்போகிறேன். சீ......வீணைத் துக்கப்படுவதில் பலன் என்ன? செய்யவேண்டிய காரியத்தை யல்லவோ கவனிக்கவேண்டும்.

(எழுந்து கடிதம் ஒன்றை எழுதுகிறாள்)

கடிதம்.

எனதன்பார்ந்த நாயகருக்கு, அடியாள் மதிவதனம் தெண்டனிட்டு எழுதியது,

நான் தங்களை எவ்வளவோ அன்பாக நேசித்து வந்தும், தாங்கள் என்னை இஞ்சிற்றும் கவனியாமலிருந்தீர்கள். இருந்தபோதிலும் அடிக்கொருமுறை என் மனதில் எழும் விசனத்தை மறந்து, தங்களை நாயகராக அடைந்த மதியீனத்தை ஒருவாறு அடக்கிக்கொண்டு இதுவரை காலம் தள்ளிவந்தேன். நான் எவ்வளவு நியாயத்தை எடுத்துக்கூறியும், தாங்கள் என்மேல் கோபம் கொண்டீர்கள். நாதா! உங்களுடைய துன்பத்தை சகிக்க முடியாமலேதான் உயிர் விடுகிறேன். இனியாகிலும் நல்வழிப் படுவீர்கள் என்று நினைக்கிறேன். இனிமேல் அந்த கிருஷ்ணனுடன் சேராதீர்கள்.

தங்களால் என்றும் துன்பத்தை அடைந்துவந்த,

மதிவதனம்.

சரியாகவே எழுதியிருக்கிறேன். (கடிதத்தை மேஜைமேல் வைத்து விட்டு, பிரோவை திறந்து ஒரு கத்தியை எடுக்கிருள்.)

ஜெகதீசா! இனிமேலாகிலும் இத்தகைய குடியர்களை பூமியில் பிறப்பிக்காதே. ஓ! தெய்வமே! என் கணவனுக்கு துரோகம் செய்யாமலும், கற்புக்குப் பங்கம் வராமலும் இருந்தது உண்மையாளுல், இப்பொழுதே என்னை உனது பாதார விந்தத்துக்கு அழைத்துக்கொள். (கத்தியை மேலே தூக்குகிருள்) கத்தி மேலே படும்முன், அவள் உயிர் நீங்கி கீழே விழுகிருள்.)

(சில நிமிஷங்களுக்கெல்லாம் சாம்பன் பிரவேசிக்கிருன்.)

சாம்பன்:—இது என்ன கத்தியுடன் விழுந்துகிடக்கிருள்! தற்கொலை செய்துகொண்டாளா? சீ......காயம் ஒன்றும் காணுமே. (புரட்டி பார்க்கிருன்) மூர்ச்சை யடைந்திருப்பாள். (முகத்தில் ஜலம் தெளித்து வீசுகிருன்) பிறகு உடம்பைத் தொட்டுப் பார்த்து) ஐயையோ! தேகம் சில்லிட்டுப் போய் இருக்கிறதே. ஆ! என் கண்ணே! உன்னை எவ்வளவு பாடெல்லாம் படுத்தினேன். இப்பொழுது திடீரென்று இறந்ததற்கு நான் அல்லவோ காரணம். இது என்ன மேஜைமீது கடிதம்! (எடுத்து வாசித்ததும் கீழே விழுகிருன்) வருந்துவதில் என்ன பயன். கிருஷ்ணனைக் கொண்டு மதிவதனத்திற்கு செய்யவேண்டிய காரியத்தை செய்யவேண்டும். (போகிருன்)

(காரியங்கள் முடிந்ததும், மனைவி இறந்ததையும் மறந்து சந்தோஷமாகச் செல்கிருன்.)

## காட்சி 11.

இடம்:—ஒரு தெருவு.
காலம்:—காலை.

(குடுகுடுப்பைக்காரன் தெருக்களில் சுற்றிக்கொண்டு வருகிருன்.)

குடுகுடுப்பைக்காரன்:—குடு, குடு, குடு, அம்பாபலுக்கவே, அம்பாபலுககவே, குடு, குடு, குடு, குடு (கோகிலா வீட்டின் முன்நின்று) இந்த வீட்டில் மூதேவி பிடித்திருக்கிருள், மூதேவி பிடித்திருக்கிருள். குடு, குடு, குடு, குடு, ஒரு கன்னியாலே விசனம், ஒரு கன்னியாலே விசனம். குடு, குடு, பிரிஞ்சுபோய்விட்ட விசனம், பிரிஞ்சுபோய்விட்ட விசனம். குடு, குடு, அம்மா சௌக்கியமாகத்தான் இருக்கருங்கோ.

(இதை கேட்டுக்கொண்டிருந்த ஒரு வேலைக்காரி ஓடி, சரஸ்வதியை அழைத்துவந்து காட்டுகிருள்)

சரஸ்வதி:—அப்பா! என் மகள் எங்குச் சென்ருள்? தயவுசெய்து சொல்.

குடு-காரன்:—மாயக்கா, பொம்மக்கா, குடு, குடு. மலையாளபகவதி குடு, குடு. எல்லாம் வந்து சொல்லுங்க அம்மா.

கால்படி பச்சரிசி, மஞ்சத்தூள், 25 வாழைப்பழம், வெற்றிலை, பாக்கு எல்லாம் வாங்கிக் கொடுங்கள். அந்த அம்மாளை இங்கேயே வரவழைச்சுடுறேன். (கேட்டதை எல்லாம் கொடுக்கிருர்கள்.)

அம்மா, பூசை நடக்கும்பொழுது யாரும் வரக்கூடாது. நான் பூசை ஆரம்பிக்கிறேன். (எல்லாவற்றையும் எடுத்து முன் வைத்துக்கொடுண் எல்லோரும் கேட்கும்படி) மதுரைவீரா, சங்கிலிக் கறுப்பா, காட்டேறி எல்லோரும் வாங்கோ, அம்மா மவபோன இடத்தைச் சொல்லுங்க, தக்கம்மா, பொம்மக்கா,

(பூசையை முடித்துவிட்டு சரஸ்வதியை கூப்பிடுகிறான்.)

அம்மா! கல்லுக்கத்தா நகரத்திலே, முக்கொட்டை புள்ளையார் வீதியிலே, அரச மரம் ஒண்ணு இருக்குது. அதுக்கு எதிர் வீட்டிலே தான் அம்மா இருக்கராங்கோ. போயி இப்பவே அழச்சிகிட்டு வந்துடுங்கோ?




(பழம் முதலியவைகளை எடுத்துவைத்துக்கொண்டு) குடு, குடு, குடு, மகராசி எனக்கு ஏதாவது தாங்கோ, பழய சொக்கா......குடு, குடு, பழைய துணி, குடு, குடு, அம்மா தருமதாயி.

(ஒரு நல்ல சொக்காயும், ஒரு ரூபாயும் கொடுக்க வாங்கிக்கொண்டு போகிறான்.)

(சரஸ்வதி அவன் கூறிய அடையாளங்களை கொண்டு தேடிப் பார்த்தும் பிரையோஜனப் படவில்லை.)

சரஸ்வதி:—என் கண்ணே! என்னரசே! மாணிக்கமே! நீ எங்குச் சென்று தவிக்கிறாயோ? ஐயோ! ஒரு நாளும் என்னைவிட்டுப் பிரிந்திருக்க மாட்டாயே. என் தவமணியே! உன்னை இழக்கவோ, நாங்கள் உன்னை அருமையாய் வளர்த்து வந்தோம். தெய்வமே! என் கண்மணியே! யாராவது அபகரித்துச் சென்றார்களோ? அம்மா கண்ணே! எங்குச்சென்று கலங்குகிறாயோ? நீயில்லாவிடில் இச்செல்வமெல்லாம் எங்களுக்கு எதற்கு? என் செல்வமே, நீ தனித்துச் சென்றாயோ? அன்ன ஆகாரமின்றி வாடுகிறாயோ? ஐயோ! நான் என்ன செய்வேன்? பாவி என்னாலல்லவோ, நீ எங்களை விட்டுச் சென்றாய். ஆ! தங்கமே! நாங்கள் இனி உன்னைச் துன்புறுத்தோம்.

(கீழேவிழுந்து மூர்ச்சிக்கிறாள்.)

நடேசபிள்ளை:—கோகிலா! கோகிலா!! இனி நான் எவ்விதம் உயிர் வாழ்வேன். அருமைக் குழந்தாய். ஐயோ! நானே உனக்கு எமனாகத் தோன்றினேன். கோகிலா, நீ எங்கு நின்று தவிக்கிறாயோ? பரந்தாமா! என் குழந்தையை நான் எப்பொழுது பார்ப்பேன்? (மூர்ச்சித்து விழுகிறார்.)

(ஷண்முகம் பிரவேசிக்கிறார். இருவரும் மூர்ச்சித்திருப்பதைக் கண்டு மூர்ச்சை தெளிவிக்கிறார்.)

ஷண்முகம்:—ஐயா! என் பெயர் ஷண்முகம். நான் ராமசாமிப் பிள்ளையின் தம்பி. நான் துப்பறியுந் தொழிலில் இருக்கிறேன். தங்களிடம் சில கேள்விகள் கேட்க விரும்புகிறேன். தயவுசெய்து கூறவேண்டும்.

நடேச:—ஐயா! தாங்கள் ஒரு தெய்வம்போல் என் முன்வந்தீர்கள். தங்களிடம் ஒன்றையும் மறைத்துக் கூறேன்.

ஷண்:—தங்களுக்கு ஒரு குமாரி உண்டென்று கேள்விப்பட்டேன். அவள் எங்கே?

நடேச:—அவள் வீட்டைவிட்டு எங்குச் சென்றாளோ தெரியவில்லை.

ஷண்:—அவள் வீட்டைவிட்டுச் செல்லக் காரணம் என்ன?

நடேச:—ஐயோ, பாவி, என்னால்தான்; நான் பழிக்குப் பாத்திரமானேன். நான் அவளைக் கிருஷ்ணன் என்பவருக்கு மணம் செய்துவைக்க எண்ணினேன். அது அவளுக்குச் சம்மதம் இல்லை. நான் அவளைக் கோபித்துக் கொண்டேன்.

ஷண்:—கிருஷ்ணன் யார்? அவர் குணத்தைப்பற்றி ஏதாகிலும் தெரியுமா?

நடேச:—அவர் பெரிய பணக்காரர். அவர் குணத்தைப்பற்றி ஒன்றும் தெரியாது. ஏதோ கொஞ்சம் குடிக்கும் வழக்கமுண்டு.

ஷண்:—சீனிவாசனைத் தங்களுக்குத் தெரியுமா?

நடேச:—யார்? சீனிவாசனா.........எங்கேயோ அப்பெயரை கேட்டிருக்கிறேன்......ஏன், கோகிலாதான் ஒரு தடவை, சீனிவாசன் என்னும் வாலிபர் தன்னுடன் பள்ளியில் படிப்பதாகவும், கல்வி கேள்விகளிலும், புத்தி சாதுரியத்திலும், அவருக்கு நிகர் ஒருவருமில்லை என்றும் கூறி இருக்கிறாள். ஏன் அவரைப்பற்றி கேட்கிறீர்கள்?

ஷண்:—அந்த ஸ்ரீனிவாசன்தான் என் தமயன் புதல்வன். அவனுக்கும் கோகிலாவுக்கும் சிறுவயது முதல் சிநேகம் உண்டு. அவர்கள் ஒருவரை ஒருவர் மணந்துகொள்ள எண்ணி யிருந்தார்கள். இப்பொழுது அவன் வீட்டைவிட்டுச் சென்று நான்கு நாட்கள் ஆகிறது. தாங்கள் கோகிலாவின் அறையைச் சற்றுக் காட்டுங்கள்.

(நடேச பிள்ளை அவள் அறையைக் காட்ட, அதை ஷண்முகம் சோதிக்கிறார்.)

ஷண்:—ஐயா! வருந்தவேண்டாம். நான் கோகிலாவைக் கண்டு பிடிக்கிறேன். (உத்தரவு பெற்று போகிறார்)

## காட்சி 12.

இடம்:—ஸ்ரீனிவாசனின் வீடு.

காலம்:—மாலை.

ராமசாமிப் பிள்ளை:—அப்பா! அப்பா!! ஸ்ரீனிவாசா பிரிந்து போனாயே! எங்கு நின்று தவிக்கிறாயோ. குமாரா, உன்னை அருந்தவமிருந்து பெற்றோமே. எங்களிடமிருந்து பிரிவதற்கோ உன்னை அன்புடன் வளர்த்தோம். நாங்கள்

வருந்துவது உனக்குத் தெரியவில்லையா? (பைத்தியக்காரனைப் போல் பறந்து செல்லும் பறவைகளைப் பார்த்து) ஓ! பக்ஷிகாள், பஞ்சவர்ணக்கிளிகாள், என் குமாரன் ஸ்ரீனிவாசனையா தேடிப்போகிறீர்கள்? அவனைக் கண்டால் நாங்கள் துக்கப்படுவதாகச் சொல்லி அழைத்து வாருங்கள். என்ன? நீங்கள் என்னை எளனம் செய்து பறந்து செல்லுகிறீர்கள்? ஐயோ! மகனே, உன்னுடைய குணமும் புத்தியும் எங்களை வாட்டுகிறதே. (மயங்கி விழுகிறார்)

ரங்கநாயகி:—அப்பா! குழந்தாய்!! என்னை மறந்து எங்குச் சென்றாய்? நான்பெற்ற செல்வமே, என் கண்மணியே, இனி நாங்கள் எவ்விதம் உயிர் வாழ்வோம்? அப்பா! மகனே நீ எங்குச் சென்றாயோ? 'பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்' என்பது போல் நாங்கள் வருந்துவது உனக்குத் தெரியவில்லையா? (ஷண்முகம் உள்ளே வருகிறார்)

ஷண்:—அண்ணி! நீ வருந்துவதில் என்ன பிரயோஜனம்? எப்படியும் குழந்தை அகப்படுவான்! வருந்தாதே. யாரோ துஷ்டர்கள்செய்த சூழ்ச்சியால்தான் எங்கேயோ சென்று இருக்கிறான்.

(ஷண்முகம் கிழவன் வேடத்தோடு வெளிவந்து சாம்பனையும், முனியனையும் பார்த்துப் பின் தொடர்கிறார்)

சாம்பன்:—முனியா! இன்னும் ஏண்டா தாமதம்? நம்ப கிருஷ்ணன் அதே ஏக்கமா இருக்காண்டா.

முனியன்:—என்னுங்க, இதுக்குள்ள இப்படி அவசரப்படுறீங்களே. ஆக்கப்பொறுத்தவங்க ஆறப் பொறுக்கக் கூடாதா? அப்படியே சுட, சுட, அபக்கென்று போட்டுக்கொண்டால் வாயி, வயிறு எல்லாம் வெந்துபோவும். அதுபோல அவசரப்பட்டால் சிகப்பு தலைப்பாகிட்ட (போலீஸ் அதிகாரிகள்) அம்புட்டுக்கினு நீல அறைக்கு (ஜெயில்) போகவேண்டியதுதானுங்க. அந்த எடையனுங்க ரொம்ப பணக்காரனுங்க. அதுவுமில்லாம புருஷன் பெண் ஜாதியிலே யாராவது ஒருவர் அவனுக்கு (ஸ்ரீனிவாசனுக்கு) காவல் இருக்கிறுங்க. பாத்துதானே முடிக்கனும். இன்னும் ரண்டு நாளுலே மூடிச்சுடறேன்.

சாம்பன்:—நீதாண்டா உதவி செய்யனும். எங்களுக்கு என்னடா தெரியும்? உனக்கு நல்ல வெகுமதி கொடுப்பார்.

முனியன்:—அது எனக்குத் தெரியுங்க, நீங்க பயப்படாதிங்கோ, நானு இருக்கிறேன் முனியன். கொஞ்சம் போடறீங்களா, ரொம்ப பசிக்குது.

சாம்பன்:—(ஒரு ரூபாயைக் கையில் கொடுக்கிறான்) இந்தா, இதை கொண்டுபோய் குடி. அதிகம் சாப்பிடாதே. மயக்கம் வந்துடும். அப்புறம் வேலைசெய்ய முடியாது.

முனியன்:—என்னுங்க, அப்படி சொல்லீட்டிங்க. எவ்வளவு குடிச்சாலும் நிதானம் தவறமாட்டேனுங்க. இந்த குடிதானே நம்மை செய்யாத வேலை செய்யச் சொல்லுது. படாத பாடெல்லாம் படுத்துது.

(பணத்துடன் போகிறான். ஷண்முகம் சாம்பனைப் பின்தொடர்கிறார். இரத்தினம் ஸ்ரீனிவாசன் வீட்டிற்கு வருகிறான்)

ராமசாமிப் பிள்ளை:—(துக்கத்துடன்) ஏதாவது சங்கதி கிடைத்ததா?

இரத்தினம்:—இல்லையே, எனக்கு ஒரு யோசனை தோன்றியது. நம் மூரில் ஜெயராம் ஜோசியர் என்று ஒருவர் இருக்கிறார். அவரைக் கேட்டுப் பார்க்கலாமா ?

ராம:—நீ சென்று இப்பொழுதே அழைத்து வா.

(இரத்தினம் சென்று அழைத்து வருகிறான்)

ஜெ-ஜோ:—ஐயா! பழம், தேங்காய், வெற்றிலை பாக்கு, பூ, கற்பூரம், முதலியவை வாங்கி வாருங்கள்.

(உட்கார்ந்து வெற்றிலையில் மைதடவி அங்கிருந்த ஒரு பையன் கையில் கொடுக்கிறார்)

ஜெ-ஜோ:—அப்பா ! இதில் என்ன பார்க்கிறாய் ?

பையன்:—ஒன்றும் தெரியவில்லை ஐயா!

ஜெ-ஜோ:—நன்றாகப் பார்.

பையன்:—ஐயையோ ! ஐயா !! நான்மாட்டேன். எனக்குப் பயமாக இருக்கிறது.

ஜெ-ஜோ:—பயப்படாதே, நாங்கள் இருக்கிறோம்.

பையன்:—பயமாய் இருக்கிறதே, நான்மாட்டேன், ஆ............ இது என்ன, ஒரு மிருக , முகத்தை என்ன இப்படி கோரமாகக்காட்டுகிறதே. முகம் அசிங்கமாக யிருக்கிறது. பார்க்கப் பயமாக யிருக்கிறது. அடடே, இது ஒரு குரங்குடா. மரத்தின்மேல் உட்கார்ந்திருக்கிறது. என்னைப் பயமுறுத்துகிறது. குரங்கு. குரங்கு.

ஜெ-ஜோ:—அடே! குரங்கு என்று சொல்லாதே. ஆஞ்சநேயபகவான்டா, புத்தி போட்டுக்கோ.

பையன்:—சரி, புத்தி போட்டுக்கிறேன். (தாடையில் தட்டிக்கொள் கிறான்) அவர் என்னமோ சொல்கிறார். என் காதில் ஒன்றும் விழவில்லை. அடடா! இது என்ன? ஒரு வீட்டிலிருந்து வெளி வருகிறார். இந்த வீடு மாதிரியே இருக்கிறது. என் அவர் முகம் வாடி யிருக்கிறது? வீட்டைப் பார்க்கிறார். என்னமோ சொல்கிறார். மரத்தைப் பார்த்து என்னமோ பேசிக்கொண்டே கிழக்கு முகமாகப்போகிறார். அடடா! கீழே விழுந்து விட்டாரே! கண்ணை மூடிக்கொண் டிருக்கிறார். யாரோ பெண், இடைச்சி மாதிரி இருக்கிறது. வெள்ளையா ஏதோ பகவான் வாயில் ஊத்துகிறாள். மயக்கம் தெளிந்து ஏதோ சொல்லுகிறார். இருவரும் ஏதோ பேசுகிறார்கள். எழுந்து இடைச்சி கூடவே போகிறார். நல்லவள், பகவானுக்கு சாப்பாடு போடுகிறாள். சாப்பிட்டுவிட்டுப் படுக்கிறார். யாரோ வருகிறார். அவன் என்ன இவ்வளவு பருமனாக இருக்கிறான் ! அவன்தான் இடையன்போல் தோன்றுகிறது. ஆமாம், ஆமாம், இடையன்தான். சந்தோஷமாக இருவரும் பேசுகிறார்கள். பகவான் தலை அசைக்கிறார். ஆ ! என்ன ஒன்றையும் காணோமே! எல்லாம் மாயமாய் போயுடுத்தே !

ஜெ-ஜோ:—நன்றாக பார் அப்பா !

பையன்:—ஒன்றும் தெரியவில்லை.

(பையனுக்குப் பழம் கொடுத்து அனுப்பிவிட்டு)

ஜெ-ஜோ:—ஐயா! உங்கள் குமாரன் சௌக்கியமாக ஒரு இடையன்வீட்டில் இருப்பதாகச் சொல்லுகிறார். (என்று கூறி தனக்கு வேண்டியதை வாங்கிக் கொண்டு போகிறார்)

## காட்சி 13.

இடம்:—சித்தூர் ஜமீன்தாரின் வீடு.

காலம்:—காலை

(சித்தூர் ஜமீன்தார் வேலுசாமிப் பிள்ளை வேட்டையாட காட்டிற்குப் புறப்படுகிறார்)

வேலு:—அடே ராமா! சீக்கிரம் என் குதிரைக்கு சேணம் போட்டுக் கொண்டு வா. ரங்கா! நீ சீக்கிரம் துப்பாக்கி, கத்தியெல்லாம் தயார் செய்.

(ராமனும் ரங்கனும் வெளியே சென்று தயார் செய்கிறார்கள். ஜமீன்தார் காட்டுக்குப் புறப்படுகிறார். காட்டில் மனிதர் குரல்கேட்டு உற்றுக்கவனிக்கிறார்)




கோகிலா:—ஏ! அம்பிகா! இவ்வேழையைக் கைவிடுவது சரியா? ஜெகதீசா, காசிவிஸ்வேஸ்வரா, என்காதலர் எங்கிருக்கிறாரோ? கல்விக்களஞ்சியமே, கருணைக்கடலே, நாதா! தங்களைப் பிரிந்து எப்படி உயிர் வாழ்வேன்? வாழேன், வாழேன்.

(பெருமூச்சு விடுகிறாள்)

வேலு:—ஆம். யாரோ பாவம், துக்கத்தால் பெருமூச்சு விடுகிறார்.

(கிட்டேவந்து கோகிலாவைப் பார்க்கிறார்)

அம்மா! குழந்தாய், நீ யார்? உன் வரலாறு என்ன?

கோகிலா:—ஐயா! என் பெயர் கோகிலா. என் தாய் தந்தையர் சிறு வயதிலேயே விண்ணுலகடைந்தார்கள். நான் என் மாமன் வீட்டில் இருந்தேன், அவர்களும் என்னை வெறுத்து வெளியே துரத்திவிட்டார்கள். நான் யாரும் அற்ற பாவி.

வேலு:—குழந்தாய்! நான் இவ்வூர் ஜமீன்தார். எனக்கு ஏராளமான செல்வம் இருந்தும் எனக்கு மகப்பேறு கிடையாது. என்னுடன் வீட்டிற்கு வந்துவிடு. (அழைத்துக்கொண்டு போகிறார்)

வேலு:—(தன் மனைவியைப் பார்த்து) அடியே லீலா, குழந்தை இல்லை குழந்தை இல்லை என்று ஏண்டி வருந்துகிறாய்? இதோ பார் நமக்குக் கல்வியிலும் அறிவிலும் சிறந்த குழந்தை.

லீலா:—(அன்புடன் கோகிலாவை அணைத்துமுத்தமிட்டு) என்கண்ணே! உன் பெயர் என்ன ?

கோகிலா:—அம்மா! என் பெயர் கோகிலா.

லீலா:—உன் சாயலுக்கும் உன் அழகுக்கும் ஏற்ற பெயர்தான், கோகிலா. வா அம்மா குழந்தாய், சாப்பிடலாம்.

(சாப்பிட்டுவிட்டு சந்தோஷமாய் உட்கார்ந்திருக்கிறார்கள். லீலா தம்பி சங்கரன் வருகிறான்)

சக்கரன்:—அக்கா, யார் இந்தம்மா ?

லீலா:—என் குழந்தைதாண்டா! (கோகிலாவைப் பார்த்து) குழந்தாய், இவன்தான் என் தம்பி.

(வேலுப்பிள்ளை உள்ளேவர கோகிலா தோட்டத்திற்குச் செல்கிறாள்.)

லீலா:—நாதா! சங்கரனுக்குக் கோகிலாவை மணம் செய்துவிடலாமா ?

வேலு:—உனக்கு ஏண்டி புத்தி கலங்கிவிட்டதா என்ன? அவள் சங்கரனை மணங்க ஒருக்காலும் சம்மதியாள்.

சங்கரன்:—ஏன், நான் நன்னா படிக்கவில்லையா? மடமடன்னு வாசிச்சுடுவேன். அவளுக்குக்கூடத் தெரியாததெல்லாம் படிப்பேன். நல்ல நல்ல பாட்டுப் பாடுவேனே.

வேலு:—ஆமாம். உன் ஊத்தைவாயைத் திறந்தாலேபோதுமே, வெகு அழகாக இருக்குமே.

லீலா:—நீங்கள் எப்போதும் இப்படித்தான். சங்கரனைக் கண்டால் பிடிப்பதே யில்லை.

வேலு:—போதும், போதும், வீணாகப் பேசாதே. நான் இந்த மூடனுக்கு அவளை மணம் செய்துவைக்கச் சம்மதியேன்.

(கோபமாக வெளியே செல்கிறார். கோகிலா வருகிறாள்)

[தொடரும்]



# கனகவல்லி

[வி. ஜி. ராஜக்கண்ணு]



'ஆ! நான் என்ன காரியம் செய்தேன்? நான் இப்பொழுது எழுதிய கடிதம் கனகத்தின் கையில் கிடைத்தால் எப்படி வருந்துவாளோ. நான் பீ. ஏ. படித்து இத்தகைய காரியம் செய்தது சரியா? ஆ! தெய்வமே! அக்கடிதம் அவள் கண்ணில்படாமல் இருக்கத் திருவருள் புரியாயோ? எப்படியும் அக்கடிதம் அவள் கண்ணில் தென்பட்டுவிடும். அதைக் கண்டால் அவள் மனம் என்ன பாடுபடும்? ஈசா, அதை நினைக்கும்போதே என் மனம் பதறுகிறதே. ஐயோ! ஒருக்கால் அவள் நான் இப்பொழுது நினைத்தபடி செய்துகொண்டால் நான் பெண் பழிக்கு ஆளாவேனே; தெய்வமே! இப்பொழுது நீயே காப்பாற்ற வேண்டும். பணத்தாசை பிடித்த என் தகப்பனால் தானே நான் இவ்விதம் கடிதம் எழுதினேன். தகப்பனை திருப்தி செய்ய எண்ணியன்றோ இப்பொழுது என்னை உயிரினும் அதிகமாக நேசித்து வந்த கனகவல்லிக்குத் துன்பம் உண்டுபண்ணும் விதமாகக் கடிதம் எழுதினேன்' என்று பலவாறாக யோசித்துக்கொண்டு 'சதானந்தம்' என்ற சிறுவன் தன் வீட்டு மாடியில் ஒரு சோபாவின் மீது வீற்றிருந்தான்.

அவனுக்குச் சற்றேறக்குறைய வயது இருபது இருக்கலாம். அவன் முகம் வருத்தத்தால் மிகவும் வாடி யிருந்தது. அவன் மறுபடியும் தனக்குள் 'நான் ஏன் இவ்விதம் வருந்த வேண்டும். என் அன்பார்ந்த நண்பனான கணேசனிடம் சென்று தெரிவித்தால், இதற்கு ஏற்ற தந்திரம் கூறுவான்' என்று சோபாவிலிருந்து எழுந்தான்.

அப்பொழுது மணி $10\frac{1}{2}$ யிருக்கும். அவன் வீட்டில் எல்லோரும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார்கள். அந்த இருட்டில் தெருவிலிருந்த மரங்கள் பார்ப்பதற்கு அதிகப்பயங்கரமாக இருந்தன. அப்படிப்பட்ட இருட்டில் அந்த வாலிபன் தனக்கிருந்த துயரத்தால் ஒருவித அச்சமுமில்லாமல், தன் நண்பன் வீட்டை அடைந்தான். அந்த நடு

இரவில் இதுவரையிலும் வாராத தன் நண்பன் வந்ததைக் கண்ட கணேசன் அவனை அன்புடன் உள்ளே அழைத்துச் சென்றான்.

கணேசன்:—'நண்பா! ஏது இன்று எப்போதும் இல்லாத விதமாக உன் முகம் மாறுபட்டிருக்கிறது? உனக்கு என்ன துன்பம் சம்பவித்தது' என்று கேட்டான்.

சதானந்தம்:—'ஐயோ! என் நண்பா! நான் என்ன செய்வேன்? நான் என் அத்தியந்த காலமுதல் காதலித்துவந்த என் கண்மணியாகிய கனகவல்லியைப்பற்றி உன்னிடம் கூறி இருக்கிறேன். அப்படிப்பட்டவளை மணந்தும் இப்பொழுது துறக்கும் ஸ்திதிக்கு வந்துவிட்டேன். ஐயோ! என் தகப்பனாரை திருப்தி செய்ய நான் அவளுடைய தமயனுக்கு எழுதின கடிதத்தின் நகல் என் கையில் இருக்கிறது. இதோ, இதைப் படித்துப் பார்' என்று கடிதத்தை அவன் கையில் கொடுத்தான்.




கடிதம்.

பெங்களூர்,

8—4—1933.

அருமை மைத்துனருக்கு,

தாங்கள் புதன்கிழமை எழுதிய கடிதம் கிடைத்து எல்லாம் தெரியலானேன். தாங்கள் எழுதியபடி கனகவல்லியின் சாந்தி முகூர்த்தம் கூடிய சீக்கிரம் நடக்கவேண்டும் என்பதுதான் என் எண்ணம். ஆனால் ரூபாய் 1500 கொடுத்தாலன்றி சாந்தி முகூர்த்தம் நிறைவேறாது. தாங்கள் கூடிய சீக்கிரம் முயற்சி செய்து முடிக்கவும். அப்படி இல்லாவிட்டால் 5000 ரூபாய் வரதக்ஷிணை கொடுப்பதாகப் பலர் கூறுகின்றனர். தாங்கள் சீக்கிரம் முயற்சி செய்யாவிட்டால் நான் வேறு மணம் செய்து கொள்வேன் என்பது திண்ணம்.

இப்படிக்கு,

'சதானந்தம்'

இதைப்படித்த கணேசன் 'நண்பா! என்ன உன் மனம் இப்படிக் கடிதம் எழுத உடன்பட்டது. பலநாள் உன் காதலியைப் பற்றியும் அவள் கல்வித் திறமையைப்பற்றியும், வீணை வாசிக்கும்

திறமையைப்பற்றியும் கூறிச் சந்தோஷித்த உன் மனம் எப்படி இக் கடிதம் எழுத உடன்பட்டது?' என்று வருத்தத்துடன் கேட்டான்.

'நண்பா! இதற்கு என்ன செய்யலாம்' என்று சதானந்தம் கேட்டான்.

கணேசன்:—'நண்பா! என் மனதில் ஓர் எண்ணம் உதிக்கிறது. அது இருக்கட்டும். நீ எத்தனை மணிக்கு தபால் பெட்டியில் கடிதம் போட்டாய்?'

சதானந்தம்:—'ஏழு மணிக்கு'

'அப்படியானல் அக்கடிதத்தை இன்னும் எடுத்திருக்கமாட்டார்கள். ஆகையால் நாம் காலையில் தபால் ஆபீசுக்குப் போவோம். அங்கு என் சிறிய தகப்பனர் இருக்கிறார். அவரைக்கொண்டு அக் கடிதத்தை நிறுத்தி விடுவோம். நீ இங்கேயே படுத்துறங்கு' என்று கூறி சதானந்தத்திற்கு ஒரு படுக்கை தயார் செய்தான்.

நமது கதாநாயகனன சதானந்தத்திற்கு தூக்கமும் வருமோ? அவன் அடிக்கடி பெருமூச்சு விட்டான். கணேசன் எவ்வளவோ தேறுதலான வார்த்தைகளால் தேற்றமுயன்றான். இதற்குள் 'கதிரவன்' வெளிப்பட்டான். இருவரும் காலைக்கடன்களை முடித்துக் கொண்டனர். எவ்வளவு கூறியும் சதானந்தம் ஆகாரம் சிறிதும் எடுத்துக் கொள்ளவில்லை. பிறகு இருவரும் தபால் ஆபீஸ் சென்றனர். அங்குச் சென்று விசாரித்ததில், கடிதம் அனுப்பப்பட்டு விட்டதாகத் தெரிந்தது. சதானந்தம் இடிவிழுந்தவன் போல் ஆனான். 'ஐயோ! நண்பா! இனி நான் உயிருடன் இருப்பதில் யாது பயன்' என்று கூறி மூர்ச்சித்தான். கணேசன் அவனைத் தேற்றி வீட்டிற்கு அழைத்துச்சென்று கொஞ்சம் காப்பி பருகச்செய்து 'நண்பா பயப்படாதே உடனே புறப்படு, நாம் அங்குச் சென்று அவர்களுக்கு தகுந்த சமாதானம் கூறுவோம்' என்று காவேரிக்கு அருகில் உள்ள சிவ சமுத்திரத்திற்கு புறப்பட்டார்கள்.

* * *

வாசகர்களே! என்னே! உலகவியல்பு? பணத்தாசையால் செய்யும் ஒவ்வொரு காரியங்களும் பின்னால் தங்களுக்கு நன்மையைத் தருமா அல்லது கெடுதியைத் தருமா வென்பதைப்பற்றி யோசிப்பதுண்டா? இல்லை. அவ்விதமாக நம் கதாநாயகனும் கடிதம் எழுதிய பிறகு வருந்துகிறான். யாது பயன்?

* * *

இது நிற்க, சிவசமுத்திரம் என்ற ஒரு சிறிய கிராமத்தில் ஒரு அழகிய வீடிருந்தது. அவ்வீட்டின் முற்றத்தில் அழகிய சோபாக்

களும், மேஜைகளும் இருந்தன. அவற்றின் ஒன்றில் சுமார் 30 வயதுக்கு மேற்படாத ஒரு வாலிபன் உட்கார்ந்திருந்தான். அவனுக்கு எதிரில் 20 வயதுடைய ஒரு யுவதி அமர்ந்திருந்தாள்.



அவள் தன் கணவனை நோக்கி 'என்ன நீங்கள் கொஞ்சமும் கவலை இல்லாமல் இருக்கிறீர்கள். அவளுக்கு எப்பொழுது சாந்தி முடித்து அவா வீட்டிற்கு அனுப்பப் போகிறீர்கள். அவளை வைத்துக்கொண்டு யார் சாப்பாடு போடுவது? வீட்டில் ஒரு வேலையும் செய்வதில்லை' என்றாள்.

'என்னடி சாரதா, எப்பொழுதும் இதே வேலைதானா உனக்கு? அவள் மாமனாருக்கு எழுதின கடிதங்கள் ஒன்றுக்கும் இதுவரையிலும் பதில் கிடைக்கவில்லை. அவா, என்னதான் நினைத்திருக்கிறார்களோ, தெரியவில்லையே. இன்றையதினம் அவள் ஆம்படையானுக்கு ஒரு கடிதம் எழுதுகிறேன். நீ சும்மா இரடீ' என்றான் அவள் கணவன் சுப்பிரமணியன்.

இதற்குள் வெளியில் இருந்து ஸார், ஸார் என்று அழைத்த சத்தம் கேட்டு வெளியே செல்ல தபால்காரன் ஒரு கடிதத்தை அவனிடம் கொடுத்துச்சென்றான். சுப்பிரமணியம் கடிதத்துடன் உட்சென்று கடிதத்தைப் பிரித்து வாசித்தான். தன்னை அறியாமலே அவன் கண்களில் நீர் வடிந்தது. அவன் 'ஆ, ஈசா இக்கடிதத்தை வாசித்தால் அவள் எவ்வளவு வருந்துவாள்' என்று கதறிக்கொண்டே கீழே சாய்ந்தான்.

நண்பர்களே! இச்சுப்பிரமணியம்தான் கனகவல்லியின் தமையன். சாரதா அவன் மனைவி. சாரதா அக்கடிதத்தை எடுத்து வாசித்து விட்டு அதிகக் கோபத்துடன் எழுந்து உள்ளே சென்றுள்.

இவர்கள் பேசிக் கொண்டிருந்ததை எல்லாம் அடுத்த அறையில் இருந்து கேட்டுக் கொண்டிருந்த நம் கதாநாயகியான கனகவல்லி, 'ஆ என் தாய் தகப்பன் இறந்த பிறகு நான் படும்பாடுதான் என்னே? நான் எவ்வளவு வேலைகள் செய்தாலும் மன்னி என்னை கோபித்து 'வாழாவட்டி வீட்டோடு வசிக்கிருள்' என்று தூஷிக்கிருள். என் காதலர் எப்பொழுது என்னை இச்சிறையில் இருந்து விடுவிப்பாரோ' என்று கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தாள். அப்பொழுது தமையன் கதறினதையும், தன் மன்னி கோபித்துத் திட்டியதையும் கேட்டு வெளியே வந்தவள், தமையன் அருகில் இருந்த கடிதத்தைக் கண்ணுற்றுள். அவ்வெழுத்துக்களைக் கண்டதும் அவை தன் காதலன் கையெழுத்து என்று அறிந்தாள். உடனே அருகில் சென்று அதை எடுத்து வாசித்தாள். அவள் கண்களில் நீர்வடிந்தது. கடிதத்தை அங்கேயே போட்டுவிட்டு, வருத்தத்துடன் தன் அறைக்குச் சென்றுள். வழியிலேயே மூர்ச்சித்து விழுந்தாள். கனகவல்லி கீழே விழுந்த சத்தத்தைக் கேட்ட சுப்பிரமணியம் விரைவாக எழுந்து, 'ஐயோ! இவள் கடிதத்தை பார்த்து விட்டாளே' என்று அவளைத் தூக்கி வைத்தான். அவனும் சாரதாவுமாக அவளைத் தேற்றினுர்கள்.

சுப்பிரமணியம். 'அம்மா குழந்தாய், நீ ஒன்றுக்கும் வருந்தாதே. நான் எப்படியும் இதை முடிவு செய்கிறேன்' என்று கூறி வெளியே சென்றுன். வெளியே சென்றவன் திரும்பி வந்ததும், 'சாரதா! நாம் இதற்கு என்ன செய்வது? நான் எங்குச் சென்று விசாரித்தாலும் ரூபாய் கிடைக்கவில்லை. இதை அவள் அறிந்தால் மிக வருந்துவாளே' என்று கண்ணீர் பெருக உரைத்தான். இவர்கள் பேசிக்கொண்டிருந்ததை கேட்ட கனகவல்லி 'ஐயோ! இனி நான் உயிருடன் இருப்பதில் பிரயோஜனம் இல்லை. எப்பொழுது என் அன்பரால் கைவிடப் பட்டேனே அப்பொழுதே இறக்க வேண்டும்' என்று பலவாறு கூறி வருந்தினுள்.

'கனகவல்லியின் வருத்தத்தை காணச் சகியாதவன்போல் 'வெய்யோன்' மேலைக் கடலுள் புகத்தலைப்பட்டான். மணி பத்தாயிற்று. எங்கும் நிசப்தம் குடிகொண்டு இருந்தது. கனகவல்லி, ஜன்னல் அருகில் உட்கார்ந்திருந்தாள். சந்திரன் பிரகாசத்துடன் தன் கலைகளை பூமி மீது பரப்பினன். அச்சந்திரனும் இவள் துன்பத்தை காணச் சகியாமல் அடிக்கடி மேகங்களின் இடையே மறைந்து, மறைந்து பிரகாசித்தான். அச்சந்திரனைக் கண்டு கனகவல்லி,

'தண்ணமுதுடன் பிறந்தாய் வெண்ணிலாவே—யந்தத்
தண்ணளியை யேன்மறந்தாய் வெண்ணிலாவே
பெண்ணுடன் பிறந்ததுண்டோ வெண்ணிலாவே—என்றன்
பெண்மை கண்டுங் காயலாமோ வெண்ணிலாவே
விண்ணிலே பிறந்ததற்கோ வெண்ணிலாவே—எரு
விட்டு நானெறிந்ததற்கோ வெண்ணிலாவே
கண்ணில் விழியாதவர்போல் வெண்ணிலாவே—மெத்தக்
காந்தியாட்ட மாடுகிறாய் வெண்ணிலாவே.

என்று சந்திரனைத் தூஷித்தாள். 'உன்னைத் தலையிற் சுமந்தவரிடம் போய் காய்' என்றாள் 'என் காதலரிடம் சென்று உன் கலைகளால் அவரை சந்தோஷப்படுத்தி என் துன்பத்தை அவருக்கு உரை' என்றாள். இப்படிப் பலவிதமாக வருந்தினாள். திடீர் என்று எழுந்து, தன் அறையில் மாட்டப்பட்டிருந்த தன் அன்பர் படத்தைக் கையில் எடுத்து உற்று நோக்கினாள். பின் ஒரு கடிதத்தை எடுத்து 'என் அருமை அண்ணா! தாங்கள் என்னைக் காணாது வருந்தவும் வேண்டாம், தேடவும் வேண்டாம். இக்கடிதம் தங்கள் கண்ணில் படுமுன் நான் உயிர்விட்டிருப்பேன் என்பது திண்ணம். கனகவல்லி' என்று எழுதி மேஜைமேல் வைத்தாள்.

பின், சப்தம் இன்றி அறையைத் திறந்துகொண்டு படத்துடன் வெளிப்பட்டாள். நேராக காவேரிக் கரையை அடைந்தாள். தண்ணீர் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. கனகவல்லி கரையில் வந்து நின்றதும் அப்படத்தை மறுபடியும் உற்று நோக்கினாள். 'தெய்வமே நான் இவ்விதம் அனுபவிக்க வேண்டும் என்பது உன் இஷ்டம் போலும். முன் ஜென்மத்தில் எந்தக் காதலர்களை பிரித்தேனோ; எந்தப் பறவைகளை கூட்டில் அடைத்தேனோ. அதை எல்லாம் இப்பொழுது அனுபவிக்கிறேன். ஈசா! என் காதலர் மனதை துன்பப்படுத்தாதே; அவரைச் சந்தோஷப்படுத்து. நான் இறந்த செய்தியை அவருக்கு கூறு. இதோ! 'என்னுயிரை உன்னிடம் அர்பணம் செய்கிறேன்' என்று கூறி தண்ணீரில் விழுந்தாள்.

* * *

இதுநிற்க, சதானந்தமும், கணேசனும் ஈரோடில் இறங்கினார்கள். இரவு ஆய்விட்டதால் வண்டிகள் கிடைக்கவில்லை. கால் நடையாகவே நடந்து ஊர் அருகில் வந்து சேர்ந்தார்கள். மலஜலம் கழிக்க காவேரிக்குச் சென்றார்கள். சதானந்தம் அத்தண்ணீரில் ஏதோ மிதப்பதைக் கண்டான். உடனே தன்

நண்பனை அழைத்துக்கொண்டு அருகில் சென்று பார்க்க, அது ஒரு பெண்ணாக இருக்கக் கண்டு அதை கரைக்குக் கொண்டு வந்து சேர்த்தனர். நாடி கொஞ்சம் அடித்துக் கொண்டிருந்ததால் அவள் இறக்கவில்லை என்று அறிந்து அவளுக்குப் பலவித உபசாரங்கள் செய்தனர். அவள் சிறிது தெளிந்து 'சகோதரர்களே! இனி நான் இப்பிரபஞ்சத்தில் வாழ முடியாது' என்றாள்.



அவள் குரலைக் கேட்டதும் அது சதானந்தத்துக்கு, தான் அநேக நாட்களுக்கு முன் கேட்ட தன் காதலியின் குரலாக இருந்தது. உற்றுப்பார்க்க அது தன் காதலி என்றறிந்தான். அப்பொழுது அவள் கையில் ஒரு படம் இருப்பதைக் கண்டு அதை எடுத்துப் பார்த்தான். அது தன்னுடைய படம் என்றறிந்தான். அப்பொழுது அவன் மனம் பட்டபாட்டை விவரிக்க நம்மாலாகாது. உடனே மெதுவாக அவளைத் தூக்கி உட்கார வைத்தான். சில நிமிடங்களில் அவள் மயக்கம் நன்றாகத் தெளிந்து, ஒரு ஆடவன் தன்னைப் பரிசிக்க நேர்ந்ததை அறிந்து மிக்க கோபத்துடன் அவனிடம் இருந்து விலகி மறுபடியும் தன் உயிரை காவிரியில் சமர்ப்பிக்கச் சென்றாள்.

உடனே சதானந்தம் 'கண்மணி! பதறாதே. கற்பிற் சிறந்த உத்தமியாகிய நீ என்னைத் துறக்க எண்ணம் கொண்டதேன்? நீ என்னை விலக்கும்பட்சத்தில் நான் உயிர் விடுவேன்' என்றான்.

அவன் தொனியைக் கேட்டதும், கனகவல்லி அவன் பாதங்களில் விழுந்து, 'நாதா! அடியாளை மன்னியுங்கள். தாங்கள் இன்னார் என்றறியாமல் தங்களைத் தூஷித்தேன். என்னை மன்னியுங்கள்' என்று கண்ணீர் விட்டாள். சதானந்தம் அவளைத் தூக்கித் தேற்றி தன் சரிதத்தைத் தன் காதலிக்குரைத்தான். அவளும் தன் கதை முழுவதையும் அவனுக்கு உரைத்தாள். பின்பு மூவரும் வீட்டை நோக்கி நடந்தார்கள்.

கனகவல்லியின் தமையன் ஏதோ எண்ணத்துடன் எழுந்து கனகவல்லியின் அறைக்குச் சென்று பார்க்க அங்கு அவள் காணாத

தால் அவளைத் தேடிக்கொண்டு வெளியே வந்தான். அப்பொழுது சதானந்தம் தன் மனைவியுடனும், நண்பனுடனும் அவன் முன் எதிர்ப்பட்டான். சதானந்தம் தன்வரலாற்றை அவனுக்குரைத் தான். அவனும் அவன் நண்பனும் அங்கே சிலநாள் தங்கினர்கள். சுப்பிரமணியம் தன்னால் அவ்வளவு வரதக்ஷிணை கொடுக்க முடியா தென்று சதானந்தத்திடம் கூறி, அவன் தகப்பனருக்கு 1000 ரூபாய் தான் கொடுக்க முடியும் என்று கடிதம் எழுதிவிட்டான். சதானந் தமும் அவன் நண்பனும் ஊருக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

சுப்பிரமணியம் எழுதிய கடிதம் கிடைத்ததும் சதானந்தம் தகப்பனர் வருத்தம் அடைந்து, தன் பிள்ளையை வேறு மணம் செய்துகொள்ளும்படி வற்புறுத்தினர். ஆனல் சதானந்தம் மறுத்து விட்டான். இதனல் அவன் தகப்பனர் மிகவும் வருத்தப்பட்டு நோய்க்கு ஆளானர். சதானந்தம் எல்லாவற்றையும் தன்தாயாரிடம் சொல்லி தன் தகப்பனரைத் தேற்றினன். ஒரு சுப முகூர்த்தத்தில் கனகவல்லிக்கும், சதானந்தத்திற்கும் சாந்தி முகூர்த்தம் வெகு விம ரிசையாக நடந்தேறியது.

ஒருநாள் கனகவல்லி தன் கணவனை நோக்கி, 'நாதா! நாம் எவ் வளவு துன்பம் அனுபவிக்க நேர்ந்தது. அன்று தாங்கள் வந்து என்னைக் காப்பாற்ருவிட்டால் நாம் இப்படி சந்தோஷமாக இருக்க முடியுமா?' என்ருள்.

'கண்ணே! அவற்றை எல்லாம் இப்பொழுது நினைக்கவேண்டாம். இறந்த காலவிஷயம் இறந்தே போகட்டும். எல்லாம் கடவுள் செயல். இனி நாம் சந்தோஷத்துடன் கடவுளைத் துதித்து நம் காலத் தைக் கழிப்போம். 'வா! கோயிலுக்குச் சென்று வருவோம்' என் ருன் சதானந்தம். அப்படியே இருவரும் கோயிலுக்குச் சென்று திரும்பினர்.

சில ஆண்டுகளுக்குப் பிறகு கனகவல்லி ஓர் ஆண்மகவை ஈன்று சந்தோஷமாகக் காலத்தைக் கழிக்கிருள்.

# '........மையிலிற்பட்டார் தமக்கு ..........மதியுண்டாமோ?'

[ஏ. கோவிந்தராஜன்]



**ரா**மேஸ்வரம் சுப்பிரமணிய பிள்ளை ஓர் நல்ல மனிதர். இவர் தனது மனைவியின் வழியாக வந்த சிறிது ஐவேஜியை உடையவர். இவருக்கு வாய்த்த மனைவி கல்யாணி அம்மாள் குணத்திற்கே ஓர் இருப்பிடமாக விளங்கினாள். சிறிது காலத்திற்குள் தனது கணவனுக்கு காதற்பரிசாக, 5 வயதே உடைய ராதாமணி என்னும் சிறுமியை கல்யாணியம்மாள் ஒப்படைத்துவிட்டு விண்ணுலகடைந்தாள். நமது சுப்பிரமணிய பிள்ளையும் தனது ஆருயிர்ச் செல்வியாகிய ராதாமணி என்னும் கண்மணியை, இமைகள் கண்களைக் கார்ப்பதுபோல் காத்து வளர்த்துவந்தார்.

இவருக்கு மதுரையில் ஓர் தங்கை இருந்தாள். அவளுக்குப் பன்னிரண்டு வயதே நிரம்பிய ஓர் பாலனும் இருந்தான். ஒரு நாள் ஒரு கடிதம் அவளுக்கு வந்து சேர்ந்தது. அதில் அவளுடைய குமாரனை அவளது சகோதரராகிய சுப்பிரமணிய பிள்ளை ராமேஸ்வரத்திற்கு அனுப்பிவைக்கும்படி எழுதியிருந்தார். அப்போது அவளுடைய குமாரனாகிய ராமுவிற்கும் பள்ளிக்கூடம் விடுமுறையாய் இருந்ததினால், அவனை ராமேஸ்வரத்திற்கு அனுப்பிவைத்தாள். இவ்விரு பால்யர்களும் சிறிது காலத்திற்குள் மிக நெருங்கிய சினேகிதர்கள்போலாய் விட்டனர். ஒருவரைவிட்டு ஒருவர் பிரிய மனமற்றவராய் வாழ்ந்துவந்தனர். இவ்விரு பால்யர்களும் இவ்வாறு ஒருவரை ஒருவர்விட்டுப் பிரிய மனமற்றவர்களாய் இருப்பதைப் பார்த்து, சுப்பிரமணியபிள்ளை தனது தங்கைக்கு ராமு தன்னிடத்திலேயே இருக்கட்டும் என்று கடிதமெழுதிவிட்டார். நமது சுப்பிரமணிய பிள்ளையும் தனக்குக் கிடைத்த தேடற்கரிய செல்வங்களாகிய ராதாவையும், ராமுவையும் காப்பதிலேயே கண்ணுங் கருத்துமாய் இருந்துவந்தார். அவர்கள் இருவர்களையும் தனது இருநேத்திரங்கள் என்று எண்ணி இருந்தார்.

அவர் இவ்விதமிருக்க, நமது யௌவனப் பால்யர்கள் இருவரும் அன்பென்னும் கயிற்றால் கட்டுண்டு சிறிது நேரமும் பிரிய மனமற்ற

வர்களாய் வாழ்ந்து வந்தனர். சுப்பிரமணியபிள்ளை மறுமாதமே அவ்விரு பால்யர்களையும் கலாசாலையில் சேர்த்தார். அவர்கள் 'ஈருடலும் ஒருயிரும்போலும்,' 'நகமும் சதையும் போலும்' இணை பிரியாது பள்ளிக்குச் செல்வதும், பள்ளியிலிருந்து திரும்பி வருவதும், 'பூவும் மணமும் போல' இருவரும் மாலையில் உலாவுவதும் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தன. சுப்பிரமணிய பிள்ளையும் மழையைக் கண்ட பயிர்கள் போல அவர்கள் சந்தோஷம் கொள்வதை கண்டு, தானும் சந்தோஷப்பட்டு வந்தார். நமது யௌவன வாலிபனாகிய ராமுவோ, தனது படிப்பை மிகவும் அக்கரையுடன் படித்துக்கொண்டும், ஓய்வு நேரங்களில் தனது ஆருயிர் நேசியாகிய ராதாமணிக்குக் கதைகள் சொல்லி சந்தோஷப்பட்டுக் கொண்டும், அங்கு இருந்துவந்தான். ராதாமணி பள்ளிக்குச் செல்வதுடன் தனது அத்தான் ராமு சொல்லிக்கொடுப்பதை அக்கரையாகக் கற்றுக்கொண்டும் வந்தாள். ஆனால் அவளுக்கு ஓர் சிறிது வருத்தம் இருந்துகொண்டே வந்தது. அது எது? சொல்லுங்கள் பார்ப்போம்! அதுயாதெனில், தனது ஆருயிர் நேச அத்தான் ராமு தன்னை விட்டுப் பிரியாமல் இருக்கவேண்டும்' என்பதே.

இவ்விதமாகப் பத்துவருடங்கள் ஓடிச் சென்று மறைந்தன. 'நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும்' என்றவாறு மறுவிவாகம் வேண்டாமென்று வெறுத்த சுப்பிரமணியபிள்ளை பலரின் தூண்டுதலாலும், பணம் என்னும் பிசாசின் வயப்பட்டு அதற்கு அடிமையானதினாலும் கும்பகோணம் கோடீஸ்வரப்பிரபு அம்பலவாண பிள்ளையின் சகோதரியை மணந்துகொண்டார். தனது ஆருயிர்ச் செல்வியான ராதாமணியையும் அவருக்குப் பாணிக் கிரஹணம் செய்து கொடுப்பதாய் ரகசியமாக வாக்களித்தார். இவ்வுலகில் உள்ள ஒவ்வொரு மனிதனும் தான் கஷ்டமடையும் காலத்து 'முற்றும் துறந்த முனிவர்களைப்போன்று யாவற்றையும் வெறுக்கிறான். ஆனால் மறுநிமிடம் சந்தோஷமடையுங் காலத்து தான் முன்னால் கஷ்டமடைந்த காலத்து இருந்த வெறுப்பு யாவற்றையும் புறக்கணித்து மறந்து, தான் ஒரு அரச பதவியில் இருப்பதாக நினைக்கிறான். அதேபோல் நமது சுப்பிரமணிய பிள்ளையும் மறுவிவாகத்தால் அடையப்பட்ட பத்மாவதி என்னும் ஆரணங்கின் காதலில் ஈடுபட்டு அவளது பாதமே சொர்க்கலோகம் என்றும், அவளது வாக்கே தெய்வவாக்கு என்றும் நினைத்து, அவளிடம் ஒழுகிவந்தார். காதலில் ஈடுபட்டிருக்கும் ஒருவன் மற்றவைகளை எங்ஙனம் நினைக்கக் கூடும்? 'தையலார் மையலிற்பட்டார் தமக்கொரு மதியுண்டாமோ' என்று ஆன்றோர் கூறியது பொய்க்குமோ?' பிள்ளையவர்கள் இரு கண்மணிகளாகிய ராமுவையும், ராதாவையும் இப்போது புண்களாக வெறுத்தார். புதுக்காதல் தெய்வத்தை நாடினார். என்னே! இப்

புதுப்பெண்ணின் மேல்கொண்ட மோகம்! உயிரினும் மேன்மையாகக் கருதின இரு கண்களை புண்களாக நினைக்கும்படி செய்தது அந்த மோகம். இதுபற்றியே நம்முன்னோர்கள் இவ்வித உபயோகமற்ற காதலை பஞ்சமா பாதகத்துள் முதன்மையாகக் கருதினர் போலும். நல்ல மனிதனையும் நிலைமாறும்படி செய்கிறது புதுப்பெண்ணிடத்துக் கொண்ட மோகம்!

இஃது இவ்விதம் இருக்க, ஓர் சுபதினத்தன்று ராதாமணி புஷ்பவதியானாள். இச்சமயம் ராதாவிற்கு 15 வயதும் காருண்யக் குன்றாகிய ராமுவிற்கு 22 வயதும் நடந்துகொண்டிருந்தது. முன்னால் சிறு பால்யர்களாக இருந்த கண்மணிகள் இருவரும் இப்போது மணத்திற்குரிய வயதை அடைந்துவிட்டனர். ஆனால் இப்போது அவர்கள் மனதில் இருந்த அன்பெல்லாம் மாறி, பரிசுத்த, தெய்வீக, உண்மையான, உயர்வான காதல் செடியாகமாறி வளர்ந்து விருக்ஷமாகி அவரவர் மனதில் 'நீங்கா நிழல்போல்' இருந்தது. ராதாமணி மணத்திற்குரிய மங்கையாகிவிட்டதால் கலாசாலைக்குச் செல்வதை நிறுத்திவிட்டாள். ராமுமட்டும் கல்விச்சாலைக்குச் சென்று வருகிறான். இப்போது பி. ஏ. பரிக்ஷைக்கு படித்துக்கொண்டு வருகிறான். இக்காதலர்கள் இவ்வாறு இருக்கும்போது பத்மாவதி தனது கணவனை தனக்கு அடங்கி நடக்கும்படி செய்துவந்தாள். இக்காதலர்கள் மீது பொறாமைகொண்ட அவள், அவரிடம் இவர்களைப்பற்றிப் பழி சுமத்திக்கொண்டு வந்தாள். சுப்பிரமணிய பிள்ளையும் தனது காதல் தெய்வத்தின் கூற்றையே நம்பி, தீரவிசாரியாமல் இக் காதலர்களை வெறுத்தார், அடிப்பார்.

'ஒரு நாள் மாலை சுமார் $5\frac{3}{4}$ மணி இருக்கலாம். மந்தமாருதம் சில் என்று குளிர்ச்சியான காற்றை தந்துகொண் டிருக்கிறது. தோட்டத்தில் அநேகவிதமான மலர்கள் மலர்ந்து சுகந்த நறுமணத்தை அள்ளி அள்ளி வீசுகின்றன. பறவைகள் தங்கள் தங்கள் கூட்டிற்கு இரை சேகரித்துக்கொண்டு திரும்புகின்றன. குயில்கள் இனிமையாகப் பாடிக்கொண்டு இருக்கின்றன. அச்சமயம் அத்தோட்டத்தில் ஒரு சாய்வான நாற்காலியில் சுமார் 15 வயதுடைய ஓர் பருவகால தருணீ தன் கையிலிருக்கும் பங்குனிமீ 'தமிழரசு' பத்திரிகையின் இதழ் ஒன்றிலுள்ள, 'மனைவியால் வந்த மனமயக்கம்' என்னும் தலையங்கத்தின் கீழுள்ள கதையைப் படித்துக்கொண்டு இருந்தாள். இவ்விதம் உட்கார்ந்திருந்த ஆரணங்காகிய ராதாமணியை, தந்தத்தால் கடைந்தெடுக்கப்பட்ட சித்திரப்பாவையோ என்று சந்தேகிக்கும்படியாக இருந்தது. அவளது நீண்ட கரியநிறம்கொண்ட; கார்மேகம்போன்ற கூந்தலும், பிறைநுதல்போன்ற நெற்றியும், மன்மதபானத்தை ஒத்த புருவங்களும், கயல்போன்ற விழிகளும், தந்தத்தால் செய்ததுபோன்ற அழகிய பல்வரிசைகளும், மூங்கில்போன்ற

தோள்களும், அன்னநடையும், மின்னலிடையும், பின்னல் சடையும், அவளைக் காண்போர் எல்லோரையும் பிரமிக்கச் செய்யக் கூடியதாய் இருந்தன. வேளை சாயங்கால மானதால் மஞ்சள் வெயில் அவள் மீதுபட்டு, சுவர்ண விக்கிரகமோ என்று ஐயுறும் படியாக, அவளது அழகை மேலும் விளங்கச் செய்தது. அச்சமயம் அழகே உருக் கொண்ட ஓர்வாலிபன் அடிமேல் அடிவைத்துவந்து அவளுக்குத்தெரி யாமல் அவளது கண்களைத் தனது கரங்களினால் நோவுண்டாகாத வாறு பொத்தினான். யாரோ ஒருவர் தனது கண்களை மூடினதைக் கண்டு பதைபதைத்தவாறு திடுக்கிட்டு தனது கண்களை மூடின கரங் களைப் பிடுங்கினாள். பின்பு பிடுங்கவாராததைக் கண்டு தன்னை மூடின கரங்களின் விரல்களில் ஏதோ ஒன்றைத் தேடினாள். தான் தேடி யதை அடைந்த ஆனந்த சாந்தமாக 'அத்தான்! தாங்களா! நான் கண்டு பிடித்துவிட்டேன்! எடுங்கள் கையை! இதில் தாங்கள் தோல்வியுற்றீர்கள்' என்று குழறிப்பேசும் குழந்தைகளின் மதலை மொழிகள்போல் மொழிந்தாள். தான் பொத்தினதை தனது காதலி, தனது விரல்களில் அவளால் தனக்கு அணியப்பட்ட மோதி ரத்தின் மூலம் கண்டுபிடித்து விட்டதை உணர்ந்து, ராமுவும் கைகளை எடுத்துவிட்டு, 'கண்ணே! ராதா! இம்முறை நான் தோல்வியடைந் தேன். நான் தோல்வி யடைவதற்கு உடைந்தையாயிருந்தது எனது விரல்களில் உள்ள உனது மோதிரமே. ஆனாலும் இவ்வித சூட்சும புத்தி ஒருவருக்கும் வராது. நீ மகா யூகசாலி; நீ ஆண்பிள்ளையா யிருந்தால் துப்பறியும் சிங்கம் எனக் கொண்டாடப்படுவாய்' என்று சிரித்துக்கொண்டே மொழிந்தான். இவ்விதம் தன்னைத் தனது காத லன் உயர்வாகப் பேசும்போது புன்னகைகொண்ட ராதாமணி தனது காதலனை நோக்கினாள். காதலனும் காதலியை நோக்கினான். இரு வர்கண்களும் ஒன்றையொன்று சந்தித்தன.'கண்ணொடு கண்ணினைநோக் கொக்கின் வாய்ச்சொற்கள் என்ன பயனும் இல,' என்றபடி இரு வரும் ஒருவரை ஒருவர் காதல் தீச்சுடர் நிறம்பிய கண்களால் பார்த் துக்கொண்டு மௌனமாக நின்றுகொண்டிருந்தனர். இவ்விதமாகவே சிறிதுநேரம் கழிந்தபின்னர் பக்கத்தில் இருந்த திண்ணையின்மீது ஆருயிர்க் காதலியாகிய ராதாமணியை இழுத்துப் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டு 'கண்மணி! ராதாமணி! நான் மாமாவிற்கும், அத் தைக்கும் அடங்கிஒடுங்கி நடந்தாலும் என்மீது அபவாதமாக அத்தை மாமாவிடம் கோள்சொல்லுகிறாள். அவரும் திரவிசாரியாது என்னைத் தினமும் கடிந்து கொள்ளுகிறார். நான் உன்பொருட்டே இங்கு இருக் கிறேன். இல்லாவிடில் நான் போய்விடுவேன்' என்று வருத்தத்து டன் மொழிந்தான் ராமு. நமது காதல்மணியாகிய ராதாமணி ஏதோ சொல்ல வாயெடுத்தவள், 'அத்தான்! இப்பொழுதே போய்விடு வேன், போய்விடுவேன் என்று சொல்கிறீர்கள். தாங்கள் அடுத்த

வருடம் இங்கிலாந்திற்குப் படிக்க செல்வதாகச் சொன்னீர்கள் அல்லவா? அங்குப்போய் படித்து ஜெயத்துடன் திரும்புவீர்கள். பின்பு எனது அத்தானுகிய தங்களுக்கு கலெக்டர் உத்தியோகம் கிடைக்கும். அப்போது இவ்வேழையை திரும்பிக்கூடப் பார்க்க மாட்டீர்கள். இப்போதே போய்விடுகிறேன் என்கிறவர்கள் அப் போது கவனிக்க மாட்டீர்கள் அல்லவா?' என்று திக்கித் திக்கிப் பேசும் கிளிபோன்று, இனிய குரலில் வேடிக்கையாக மொழிந்தான்.

எதிர்பாராத இம்மொழிகளைக்கேட்ட ராமு, அன்பின் முதிர்ச்சி யால் 'ராதா! ஏது! என்னைக் கேலிபண்ண ஆரம்பித்துவிட்டாய். கண்ணே! இவ்வுலகத்தை மறப்பினும் உன்னை மறக்க முடியுமா! கண்ணே! ராதா இவ்வுலகத்தில் உள்ள சகலசம்பத்தையும் எனக்குக்



கொடுப்பதாயினும் உன்னைக் கைவிடேன். உண்மைக் காதல்மணியே! இது சத்தியமான வார்த்தை. இதற்கு அறிகுறி இதுதான்' என்று அவளது ரோஜாப்பூ போன்ற அதரங்களில் முத்தமிட்டான். அவளும் யாரிடத்திலும் கடன் வாங்காத காரிகையாதலால் தனது காதலன் தனக்கு கடனுக அளித்த காதல் முத்தத்தை முதலும் வட்டியுமாக அவனுக்குத் (காதலனுக்கு) திருப்பிக் கொடுத்தாள்.

அதே சமயம் ராமுவின் தலையில் ஒரு அடி விழுந்தது. மூர்ச்சையாகி கீழே விழுந்தான். அடுத்த நிமிடம் ராதா தனது காதலனுக்கு துன்பம் இழைத்தது யார் என்று நோக்கினாள். தனது தகப்பனும் சிறியதாயும் மூங்கில் கழியுடன் இருப்பதைக் கண்டு மூர்ச்சையானாள். ராதாமணி மூர்ச்சையான பின்பு ஓர் அறைக்குக்கொண்டு போகப் பட்டாள். ராமு அடுத்த தெருவில் காலியாய்க் கிடந்த ஓர் திண்ணை யில் விடப்பட்டான். ஐயோ! பரிதாபம். ஒருவர் கொடுத்த கடனுக்கு கடன் வாங்கினவர் வட்டியும் முதலுமாக சேர்த்துக் கொடுக்கையில் சாக்ஷியாக இருந்த இவர்களுக்கு ஏன் இவ்வளவு கோபம் வர வேண்டும்?

ராமு வீட்டை விட்டுச் சென்ற ஒரு மாதத்திற்குப் பின் சுப்பிர மணிய பிள்ளை வீட்டின் முன் கொட்டகை இட்டு வாழை, கமுகு முதலியவைகள் கட்டப்பட்டு குளோப் லாந்தர்கள் மாட்டப்பட்டு மிகவும் ஜெகஜோதியாய் விளங்கின. மறுநாள் விடிந்தால் கும்ப கோணம் அம்பலவாணருக்கும், ராதாவிற்கும் திருமணம் நடக்கப் போகிறது. முதல் நாள் இரவு சுமார் 12 மணி இருக்கலாம். சந்திரன் பால்போல் பிரகாசிக்கிறது. அப்போது அவ்வீட்டின் பின்புறமிருந்த தோட்டத்தில் ஓர் உருவம் நின்றுகொண்டு சுற்றுமுற்றும் பார்த்தது. ஒருவரும் இல்லை. தனது கையில் வைத்துக்கொண்டிருந்த புகைப் படத்தை அநேகந் தடவைகள் முத்தமிட்டது. அவ்வுருவம் யார்? அவள்தான் காதற் கண்மணியான ராதாமணி. புகைப்படத்தைக் கீழே வைத்தாள். மும்முறை வலம் வந்தாள். மண்டியிட்டு அடி வணங்கினாள். 'அத்தான், ஆசை நேச அத்தான். இச்சென்மத்தில் தங்களுக்கு நாயகியாகி தங்களது பாதசேவை பெற நான் கொடுத்து வைக்காத பாவியானேன். ஆனால் அடுத்த ஜென்மத்திலாவது தங்களுக்கு இன்னுயிர் மனைவியாக வாய்த்து தங்களுக்குத் தொண்டு புரிவேன். இப்போது தாங்கள் எங்கு அலைகிறீர்களோ! பாவியாகிய என்னை நினைத்து என்ன எண்ணுகிறீர்களோ! நாதா விடிந்தால் திருமணம். இன்று அதற்குள் மரணம். நான் எனது தகப்பனாரிடம் அநேக முறை மன்றாடியும் சிறிதும் செவி சாய்க்காது அம்பலவாண ருக்கே கொடுக்க நிச்சயித்து விட்டார். ஒரு பெண் ஒரு காதலனை மனதில் வரித்துவிட்ட பிறகு, பின் ஒருவனை மணந்தால் அவள் கற்புடைய மங்கை ஆவாளா? இல்லை ஆகமாட்டாள். தவிர இல்லறம் என்னும் நிலத்தை காதல் என்னும் கயிற்றால் பிணைக்கப்பட்ட புருஷன் மனைவி என்னும் இரு எருதுகள் மன ஒருமையுடன் இருந்து உழைத்தால் அல்லவா உழமுடியும்? முரண்பட்டு இருந்தால் எங்ஙனம் முடியும்? நாதா! இது எனது தகப்பனாருக்கு ஒரு சிறிதேனும் தெரிய வில்லையே! இதுவும் எனது காலவித்தியாசந்தான். ஹா! அத்தான் இப்பாவியாகிய என்னால் அன்றோ தங்களை இங்கிருந்து துரத்தினர்

கள். என்னை எனது தகப்பனார் விலைக்கு விற்கும் மாடுகள்போல விற்கத் துணிந்துவிட்டார். அத்தான் ராதா! காதலா......என்னை மன்னிக்கக் கோருகிறேன்' என்று உரைத்தாள். அடுத்த நிமிடம் கீழே வைத்திருந்த படத்தை பன்முறை கொஞ்சினாள். நெஞ்சுடன் நெஞ்சாய் அணைத்தாள். ஐயோ! எழுதவும் கூசுகிறது. தான் தயாராய் கொண்டு வந்திருந்த பீச்சாங்கத்தியை எடுத்தாள். ஐயோ பரிதாபம்......காதல் நிரம்பிய ஈரநெஞ்சில் புகுத்தினாள். அடுத்த நிமிடம் உயிரற்றுச் சவமாகக் கீழே கிடந்தாள்.

சுமார் கால்மணி நேரம் கழிந்த பின்னர் ஓர் முகமூடி அணிந்த உருவம் சுவர் ஏறிக் குதித்து வந்தது. சந்திரன் நன்றாய் பிரகாசிப்பதால் கீழே ஏதோ ஓர் உருவம் கிடப்பதைப்போல் கண்டது. கீழே விழுந்து கிடந்த காதல் நவமணியைக் கரிய உருவம் கண்டது. கோவென கதறி அழுதது. இவ்வுருவம் யார்? ஒருமாத காலமாக இங்குமங்கும் அலைந்து திரிந்துவிட்டு ராதாமணியை ஒருமுறையாவது பார்த்துவிட்டுச் செல்வோம் என்றுவந்த ராமுவே. 'ஆ! என் அன்புக்குரிய அணங்கே! ராதா! இப்பாவியாகிய என்னால் அன்றோ உனக்கு




இவ்விதக் கஷ்டம் வந்தது. சண்டாளனாகிய நான் உன்னை நேசித்திராவிடில்—அம்பலவாணனை மணந்து சுகமாய் வாழ்வாயன்றோ. உன் மரணத்திற்கு நானே காரணம் ஆனேன். கண்மணி ராதா! நான் உன்னை அடையாவிடினும் நீ வாழ்வதைக் கண்டாவது சந்தோஷமாக இருந்திருப்பேனே! கண்ணே ஆருயிர் மணியே! ராதாமணியே! உண்மைக் காதலை உலகத்தார்க்கு நன்கு விளக்கிய உயரிய நன்மணியே! என் காதல் மணியே! பணத்தை வெறுத்த பாக்கியமணியே! வீர சொர்க்கம்கொண்ட வீரகண்டாமணியே! உயரிய, உண்மையான பரிசுத்தக் காதலை என் உள்ளத்தில் புகட்டிய நவரத்னமணியே! நவமணியே! நாரீமணியே! ராதாமணியே! நீ என்னை உண்மையுடன் காதலித்திருப்பாயாகில் இப்பாவியாகிய என்னையும் உன்னுடன் அழைத்துக்கொள். கண்ணே! காதலி! ராதா. நாம் இருவரும் ஈருடலும் ஒருயிருமாக இருந்தோம். காதலி, உயிராகிய நீ சென்றுவிட்டாய். உடலாகிய நான் இங்கு இருக்கிறேன். ஒளி இழந்த கண் இருந்தென்ன போயென்ன! ராதா! என்னையும் அழைத்துக்கொள். உயரிய நன்மணியே காதலை வெளி

யாக்கிய கனகமணியே! நீ மட்டும் இவ்வுலகை நீக்க நான் மட்டும் இங்கு வாழ்வேனா? வாழேன் வாழேன்! இதோ நானும் உன்னுடன் வந்து விடுகிறேன்' என்றான். 'என்னே இவ்வுலக வாழ்வு' என்று கூறி, இறந்து கிடந்த, காதலை நிலைநிறுத்திய ராதா மணிக்கு அநேகந்தரம் முத்தமளித்தான். தன் காதலியின் இருதயத்தில் இருந்த கத்தியைப் பிடுங்கினான். புன்சிரிப்புக் கொண்டான். அதே கத்தியை காருண்ணியம் நிறைந்த தனது நெஞ்சில் புகுத்தினான். ஐயோ! அடுத்த நிமிடம் ராமு மடிந்து சவமாய் கிடந்த காதலியின் மீது விழுந்தான்.


டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களால்
தயார் செய்யப்பட்ட மருந்துகள் யாவும்
கீழ்க்கண்ட விலாசங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

செ. சு. குமாரசாமி முதலியார்,
80, பெரிய மணியக்கார தெருவு, செங்கல்பட்டு.

லெக்ஷ்மணாஞ்சனம் டிப்போ,
புதுவயல், (இராமநாதபுரம் ஜில்லா).

லங்கா குரோஸரி ஸ்டோர்,
செட்டித் தெரு, கோளும்பு.

தி. ஞானப்பிரகாசம்,
122, மோகல்வீதி, ரங்கோன்.

வி. சா. காசி செட்டியார்,
47, மார்க்கட் வீதி, சிங்கப்பூர்.

எம். வி. ராமச்சந்திரன்,
162, அம்மாபேட்டை மெயின் ரோட், சேலம்.

A. V. R. A. ADYCAPPA CHETTYAR
Lalji Mansing Building, 1st Floor,
Lohar Chawl,
Near Crawford Market, Bombay. 2.

# இந்தியா கிராமத்தில் சாக்ரடீஸ்



மொழிபெயர்ப்பாளர்

கே. எஸ். நாதன்

சென்னை.

## 4. பெண்களும்—நகையும்

சாக்ரடீஸ் கிராமப் பெரியார்களுடன் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார். அப்பொழுது அவ்வழியே இருபெண்கள் (ஒருத்தி தலையில் ஜலக்குடத்தையும், மற்றொருத்தி தலையில் பசுமாடுகளுக்கான தழைகளையும் சுமந்து) சென்றனர். அப்பெண்கள் இருவரும் ஏராளமான நகைகளை அணிந்திருந்தனர். அவற்றில் சில பொன் நகைகளாகவும் பெரும்பான்மை வெள்ளி நகைகளாகவு மிருந்தன.




சாக்ரடீஸ்:—நண்பர்களே! நான் இன்று 'நகைகள்' என்னும் விஷயத்தைக் குறித்து உங்களுடன் கலந்து பேச ஆசைப்படுகின்றேன். எனது மனம் இவ்விஷயத்தில் ஏதோ குழப்பமடைந்தாற்போல் தோன்றுகின்றது.

கி-வாசி:—ஓ! அறிஞரே! தங்களது மனக்குழப்பமென்ன?

சாக்ரடீஸ்:—உங்களது பெண்கள் ஏன் நகை அணிகின்றனர்?

கி-வாசி:—என்ன விபரீதமான கேள்வி? நாங்கள் சிறிது அணிகிறோம். எங்கள் பெண்களும், குழந்தைகளும் அதை அதிகமாக அணிகின்றனர்.

சாக்ரடீஸ்:—சரி; அது ஏன்?

கி-வாசி:—கணக்கற்ற காரணங்களுக்காக அவர்கள் அதை அணிகின்றனர். அது எங்களது பழக்கம்; தவிரவும் அது பார்வைக்கு அழகாக இருப்பதால் அதை நாங்கள் விரும்புகிறோம்.

சாக்ரடீஸ்:—நீங்கள் பழக்கம் என்பதற்காக அதை அணிகின்றீர்கள் போலும். அப்பழக்கத்தை மீறி நடப்பது தவறென நீங்கள் கருதுகின்றீர்கள் போலும். ஆனால் வெறும் பழக்கம் என்னும் காரணத்திற்காக அவ்விதம் செய்வது, அறிவுடைமையாகும் என நான் கருதவில்லை.

கி-வாசி:—ஏன்?

சாக்ரடீஸ்:—சில கிராமவாசிகள் திருடுவதைத் தங்களது பழக்கமாகக் கொண்டார்களென்றால் அதைத் தாங்கள் சரியெனக் கூறுவீர்களா?

கி-வாசி:—மாட்டோம். ஒருக்காலும் கூறமாட்டோம்.

சாக்ரடீஸ்:—எனவே பழக்கம் என்பதற்காக அவைகளை சரி என நாம் ஒப்புகொள்ள முடியாதல்லவா?

கி-வாசி:—முடியாது.

சாக்ரடீஸ்:—சரி; ஆனால் பழக்கம் என்ற காரணத்தை நீங்கள் விட்டுவிட்டு நகை அணிவதின் பயனை வேறு காரணங்களால் நிரூபித்துக்காட்ட முடியுமா?

கி-வாசி:—அது பார்வைக்கு மிகவும் அழகாக இருப்பதால் அதை நாங்கள் அணிகிறோம்.

சாக்ரடீஸ்:—ஆனால் அப்பெண்கள் குளிக்காமல் மிகவும் அசுசியாயிருக்கின்றனர், அவர்கள் அழுக்கடைந்த கந்தலை உடுத்தியிருக்கின்றனர். அவர்களுக்குப் பக்கத்தில் விளையாடும் குழந்தைகளை கவனித்தால் அவர்கள் இதுவரையில் தண்ணீரைக் கண்டது கூட இல்லைபோ லிருக்கிறது! அவர்கள் அணிந்திருப்பது கோணி போல் தோன்றுகின்றது.

கி-வாசி:—சரி; எப்படியும் அவர்களை அவை அழகு படுத்துகின்றன.

சாக்ரடீஸ்:—என்ன அறிவற்றதன்மை! நீங்கள் மலிவாக ஆடைகள் விற்கப்படுகையில் அவைகளைப் புறக்கணித்து உங்களுடைய குழந்தை குட்டிகளை அழுக்கிற்கு அடிமைப் படுத்துவதுடன், விலையுயர்ந்த ஆபரணங்களுக்கும் அடிமை யாகுகின்றீர்களே!

கி-வாசி:—இல்லை; நகைகள் அவர்களை அழகுபடுத்துகின்றன.

சாக்ரடீஸ்:—(உரத்த குரலுடனும்-கோபாவேசத்துடனும்) கடவுள் அவர்களை அழகாகப் படைத்தார். ஆனால் நீங்கள் அவ்வழகை அழுக்கும், கோணியும்போன்ற பொருள்களைக் கொண்டு கெடுத்து மறுபடியும் நகையின் பயனாக அவ்வழகைத் திரும்பிப் பெறக் கருதுகின்றீர்கள்.

கி-வாசி:—தாங்கள் எங்களை அவமானப் படுத்துகின்றீர்கள்.

சாக்ரடீஸ்:—கடவுள் உங்களுடைய காதுகளில் யாராவது பேசினால் கேட்குமாறும், அறிவைப் பெறுமாறும், ஒரு துளை செய்திருக்கிறார். ஆனால் நீங்கள் காதுகளில் நகையை அணிவதற்கு வேறு ஒரு துளை செய்து, இயல்பான துளையினால் கற்றுக்கொள்ளும் அறிவுணர்ச்சியை இத்துளையின் வாயிலாக வீணாக்குகின்றீர்கள்.

கி-வாசி—எங்களைப் பார்த்து ஏளனஞ் செய்யாதீர்கள். நாங்கள் விஷயங்களைக் கற்றுணர்ந்து அதன்படி நடக்கிறோம்.

சாக்ரடீஸ்:—ஆனால் நீங்கள் எவ்வளவு அதிமாக நகைகளை அணிகின்றீர்களோ அவ்வளவுக்கு அவ்விவேகமும் கரைந்து விடுகின்றன.

கி-வாசி:—ஆமாம்.

சாக்ரடீஸ்:—பெண்கள் அதிகமாக நகைகள் அணிய அணிய இன்னும் மற்றப் பெண்கள் அணிந்திருக்கும் நகைகளைப் பார்த்துப் பொறாமைப்படுவதுடன், இன்னும் அதிகமாக வேண்டுமென ஆண்களை வற்புறுத்துவார்க ளல்லவா ?

கி-வாசி:—ஆமாம்.

சாக்ரடீஸ்:—சரி. ஆதலால் எவ்வளவு குறைவாக அதை அணிகிறோமோ அவ்வளவுக்கு நலமல்லவா ?

கி-வாசி:—ஆமாம், கட்டாயமாக.

சாக்ரடீஸ்:—சரி. ஆனால் எல்லா அறிவீனச் செயல்களையும் விட—வயல்களில் வேலை நேரங்களில் அணிந்துள்ள அழுக்கடைந்த ஆடைகளுடன் குளிக்காமல் அழுக்குப் படிந்திருக்கும் உடம்பில் அழகிய ஆபரணங்களை அணிவது அறிவீனமல்லவா? உங்களுடைய விலையுயர்ந்த அணிகலன்களை விடுமுறை நாட்களிலும், பெரிய பண்டிகைகளிலும், தேகத்தை சுத்தமாக வைத்துக்கொள்ளும் சமயங்களிலும் அணிந்து கொள்ளுவதுதான் இதைவிட அறிவுள்ள செய்கையாகும்.

கி-வாசி:—ஆமாம் தாங்கள் கூறுவது அறிவுடைமையே.

சாக்ரடீஸ்:—சரிதான். அப்பொழுதுதான் அவ்விலையுயர்ந்த பொருள்களின் கௌரவம் பிரகாசிக்கும்.

கி-வாசி:—ஐயா! ஆமாம். ஆனால் எங்களது பெண்கள் அவைகளை அடிக்கடி கேட்கின்றனர்.

சாக்ரடீஸ்:—அவர்கள் விஷத்தைக் கேட்டால் நீங்கள் கொடுப்பீர்களா?

கி-வாசி:–ஒருக்காலும் மாட்டோம். என்ன விபரீதமான கேள்வி!

சாக்ரடீஸ்:—சரி. ஆனால் நீங்கள் நகையைக் குறித்து நினைத்துக் கொண்டிருப்பது அக்கூற்றிற் கொப்பாகும்(?)

கி-வாசி:—அந்நிலைமையை நகைகள் அடையாது என நினைக்கிறோம்.

சாக்ரடீஸ்:—சரி, அப்படியானால் பெண்களை இப்படிப்பட்ட குற்றங்களுக்கு ஆளாக்காதீர்கள். அவர்கள் செய்யும்படியான பொருளற்ற செலவுகளுக்கு நீங்கள் இசையக்கூடாது.

கி-வாசி:—அவைகள் ஒருவகையிலும் பயனற்ற செலவாகாது. பிற்காலத்திலும் அது அதன் பயனை அளித்துத் தீரும்.

சாக்ரடீஸ்:—நீங்கள் ஒரு நகைக்காக நூறு ரூபாய் செலவு செய்கிறீர்களென வைத்துக் கொள்ளுவோம். நீங்கள் அத் தொகையினின்றும் எதிர் நோக்கும் பயன் யாது?

கி-வாசி:—பொன்வேலை செய்யும் தட்டான் யோக்கியமாயிருப்பானேயாகில் எண்பது ரூபாய், இல்லையேல் எழுபது அல்லது அறுபது ரூபாய்தான்.

சாக்ரடீஸ்:—சரி, பிறகு பத்து வருடங்களில் அது தேய்ந்து போனால் குறைந்தது இருபது ரூபாய் குறையுமல்லவா?

கி-வாசி:—ஆமாம்.

சாக்ரடீஸ்:—ஒரு திருடன் இதன்பேரில் ஆசைகொண்டு திருடுவானேயாகில் அது ஒரே நாளில் போய்விடுமல்லவா?

கி-வாசி:—ஆமாம். அதுமெய்தான்.

சாக்ரடீஸ்:—உங்களுக்கு ஏராளமாக நகையிருக்குமானால் திருடனுக்குப் பயந்து இரவில் நன்கு படுத்துறங்க சௌகரியமற்றவர்களாவதுடன், உங்களுடைய வீடுகளுக்குச் சரியான சௌகரியமுள்ள ஜன்னல்களை அமைக்காமலும் தேக சௌக்கியத்தை கெடுத்துக் கொள்கின்றீர்களல்லவா? ஆ! என்ன விலையுயர்ந்த பொருள்! நகையின்பேரில் தற்போது ஒரு நூறு ரூபாய் செலவு செய்வதைவிட்டு, அதை ஒரு கூட்டுறவுப் பாங்கியில் போட்டுப் பாருங்கள். அது பத்து வருடங்களில் என்ன ஆகிறது?

கி-வாசி:—இரண்டு வருடங்களில் அது குறைந்தது இருநூறு ரூபாய்களாய் விடும்.

சாக்ரடீஸ்:—சரி, இப்பொழுது உங்களுடைய நகைகளை ரூபாய்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது அதன் கௌரவம் எங்கே?

கி-வாசி:—ஐயா! நாங்கள் 'வழக்கத்தின்' அடிமைகள்.

சாக்ரடீஸ்:—உங்களிடத்தில் பணமில்லை யென்று வைத்துக் கொள்வோம். அப்பொழுது உங்களுடைய மனைவிமார்கள் நகை வேண்டுமெனச் சொல்வார்களேயானால் என்ன செய்வீர்கள்?

கி-வாசி:—நாங்கள் கடன் வாங்குகிறோம்.

சாக்ரடீஸ்:—நகைகள் அழிவதும், பணக்காரரிடத்தில் கடன் தொகை அதிகரிப்பதும் கண்கூடான காட்சியல்லவா?

கி-வாசி:—ஆமாம். அதுமெய்தான்.

சாக்ரடீஸ்:—ஆ! என்ன அறிவற்றசெயல். ஓ! அறிவற்ற கிராமவாசிகளே! நீங்கள் எப்பொழுது அறிவைப் பெறப்போகிறீர்கள்!

கி-வாசி:—ஐயா! எங்களது மனைவி மக்கள் அவைகள் இல்லாவிடில் களிப்புறமாட்டார்கள்.

சாக்ரடீஸ்:—கிராமவாசிகளே! கண்ணுக்கு அழகானதும், பயனளிக்கக்கூடியதும், ஜீவராசியை உற்பத்தி செய்யக்கூடியதுமான இயற்கை அழகை நாம் மெச்சுகின்றோம்.

கி-வாசி:—அறிஞரே! நாங்கள் நினைக்க முடியாத எண்ணங்களை தாங்கள் எங்களுக்கு உற்பத்தி செய்கின்றீர்கள்.

சாக்ரடீஸ்:—ஆனால் 'நகை தங்களது எண்ணங்களை நிவர்த்திக்குமென நினைக்கின்றீர்களா?



கி-வாசி:—ஐயா! நாங்கள் இந்தக் கிராமத்தில் என்ன செய்வது?

(அச் சமயத்தில் அவ்வழியே அழகிய பெண் குதிரை ஒன்று அதன் இளம் குட்டியோடு அவ்வழியே சென்றது.)

சாக்ரடீஸ்:—ஆ! மனிதன் மிருகத்தைவிட உயர்ந்தவனாக கருதப்படுகின்றான். அவ்விரு குதிரைகளும் பார்வைக்கு எவ்வளவு அழ

காக விருக்கின்றன. அவைகள் எவ்வித ஆபாணத்தையும் அணிந்த தாகக் காணேமே.

கி-வாசி:—ஆமாம் அறிஞரே! ஆனல் தாங்கள் தங்களுடைய கேள்விகள் மூலம் எங்களை மிகவும் கேவலப்படுத்துகின்றீர்கள்.

சாக்ரடீஸ்:—உங்களுடைய குழந்தைகளெல்லாம் உல்லாசமாக வாழ்வதில்லையென நினைக்கிறேன்?

கி-வாசி:—அவர்கள் அதிக நேரம் விளையாடுகின்றார்கள். ஆனல் அசாத்தியமாக அழுகிறார்கள்.

சாக்ரடீஸ்:—அழுக்கும், துர்நாற்றமும், அசுத்தமும் நிறைந்த ஓர் வீட்டில் எங்ஙனம் சுகமாக இருக்க முடியும்? பிறகு எவ்வகையில் நீங்கள், உங்களுடைய பெண்களும் குழந்தைகளும் மிருகத்தைவிட சுகமாக இருக்கின்றனரெனக் கூறுகிறீர்கள் ?

கி-வாசி:—அதெப்படி? ஓ! அறிஞரே!

சாக்ரடீஸ்:—நான் பதில் கூறட்டுமா ?

கி-வாசி:—தயவுசெய்து சொல்லுங்கள்.

சாக்ரடீஸ்:—சரி. முதலாவதாக மிருகங்கள் சுத்தமாக இருக்கின்றன. சுத்தமாக இருந்தால் உடல் நோயற்று வாழலாம். நோயற்று வாழ்ந்தால் இன்புற்றிருக்கலாம். அவைகள் விசாலான சுத்த வாயு நிறைந்த இடங்களில் தங்களது குழந்தை குட்டிகளுடன் வாழ்கின்றன. நீங்களெல்லோரும் தூசும் மண்ணும் நிறைந்த கூறைவீடுகளில் சுத்தக் காற்று கிடைக்கப் பெருதபடி வசிக்கின்றீர்கள். அத்தூசும் மண்ணும் காற்றடிக்கும்போது நீங்கள் உட்கொள்ளும் உணவிலும், ஜலத்திலும் கலந்து உட்செல்லுகின்றன: தவிரவும் நீங்கள் அதை சுவாசிக்கின்றீர்கள். அவைகளில் மொய்த்த ஈக்கள் உண்டிப் பொருள் களிலும் உட்காருகின்றன. உங்களுடைய குழந்தைகளை உங்களது மனைவிமார்கள் குளிப்பாட்டுவதோ அல்லது அவர்கள் குளிப்பதோ இல்லை. இவைகளைச் செய்யாததால் நீங்கள் பலஹீனப்பட்டு நோய்க் கடிமைப் படுகின்றீர்கள். சுத்தமா யிருங்கள். உங்களுடைய குழந்தை களைக் குளிப்பாட்டுங்கள். ஆடைகளைத் தினந்தோறும் துவைத்துக் கட்டுங்கள் உங்களுடைய கிராமத்தைத் தினந்தோறும் சுத்தம் செய்யுங்கள். இப்படிச் செய்வீர்களேயானல் நீங்கள் இன்புற்று வாழ்வீர்கள்.

கி-வாசி:—ஐயா! தாங்கள் கூறினவைகள் மிகக் கடினமான வைகளாக இருக்கின்றன. அவைகளையெல்லாம் எங்களால் செய்ய இயலாது.

சாக்ரடீஸ்:—உங்களுக்குப் பணச் செலவான எந்தக் காரியத்தை யாவது நான் கூறினேனு ?

கி-வாசி:—இல்லை, தாங்கள் கூறவில்லை.

சாக்ரடீஸ்:—ஆகவே தங்களுடைய உணர்ச்சியும், ஒத்துழைப்புந்தான் குன்றியிருக்கின்றது.

கி-வாசி:—தாங்கள் கூறுவது உண்மைதான்.

சாக்ரடீஸ்:—உண்மையில் நான் கூறினபடி நீங்கள் நடப்பீர்களேயானல் செலவு சுருங்குவதுடன், ஏராளமான நகைகளையும் கேட்கமாட்டீர்கள்.

கி-வாசி:—ஆமாம். அது உண்மைதான்.

சாக்ரடீஸ்:—ஆமாம். அழகும், திடகாத்திரமும்பெற்ற நகைகளை அணியாத பெண்ணும், அனேக நகைகளை அணிந்த நோயுள்ள பெண்ணைவிட பார்வைக்கு நன்ருக இருப்பாளல்லவோ?

கி-வாசி:—ஆமாம். அது மெய்தான்.

சாக்ரடீஸ்:—சரி. ஆனல் ஏன் உங்களுக்கு அமைந்துள்ள பணத்தில் ஒரு பாகத்தை அவர்களைப் படிக்க வைக்கவும், மருந்துச் செலவிற்குப் உபயோகப்படுத்தக் கூடாது?

கி-வாசி:—ஓ! சாக்ரடீஸே! அவைகள் அறிவுள்ள தன்மைகளாகும். ஆனல் எங்களுடைய பெண்களுக்கு எப்பொழுதும் நகை தேவையாக இருக்கின்றது.

சாக்ரடீஸ்:—வாஸ்தவம்தான். எவ்வகையிலும் அறிவைக் கொண்டு ஆராய்ந்து அவர்களுக்குக் கொடுங்கள். நான் அதை அறவே வேண்டாம் என்று மறுக்கவில்லை.

கி-வாசி:—அவைகள் அவர்களை திருப்தி அடையச் செய்யாது.

சாக்ரடீஸ்:—ஏன்?

கி-வாசி:—அவர்கள் வீட்டில் இன்புற்று வாழ்வதில்லை. ஏனெனில், அவர்களுக்கு வீடுகளில் சுதந்திரமில்லை. இதற்காக அதிக ஆபரணங்களை அணிந்து கொண்டால் தம் புருஷர்கள் அவர்களை கௌரவிப்பார்களென அவர்கள் நினைக்கின்ருர்கள். தவிரவும் கடவுள் கட்டளைப்படி அவர்கள் விதவைகளாலுல் இந்நகைகள் அவர்களுக்குப் பேருதவியாக இருக்கு மல்லவா?

சாக்ரடீஸ்:—அவளுடைய நகைகள் தான் அவளின் ஆஸ்தியா?

கி-வாசி:—ஆமாம்.

சாக்ரடீஸ்:—ஆகையால்தான் அவர்கள் உங்களை அடிக்கடி நகைக்காக வற்புறுத்துகின்றனர்.

கி-வாசி:—ஆமாம். அது வாஸ்தவந்தான.

சாக்ரடீஸ்:—நீங்கள் உங்களுடைய மனைவிமார்களைக் கௌரவிப்பதில்லையா ?

கி-வாசி:—இல்லை, அவர்கள் எங்களைக் கௌரவிக்கின்றனர்.

சாக்ரடீஸ்:—பெண்களுக்கு அதிக அந்தஸ்து இல்லைபோலும் !

கி-வாசி:—இல்லை.

சாக்ரடீஸ்:—உங்களையும் உங்களுடைய குழந்தை குட்டிகளையும் பெற்றவர்கள் பெண்களே. அப்படியானால் இக் குழந்தைகளுக்கெல்லாம் என்ன கௌரவ மிருக்கின்றது ?

கி-வாசி:—ஆமாம். அவர்களுக்கும் கௌரவமில்லை.

சாக்ரடீஸ்:—நீங்கள் உங்களுடைய குழந்தைகளை நேசிக்கின்றீர்களா ?

கி-வாசி:—உண்மையாக நேசிக்கிறோம்.

சாக்ரடீஸ்:—உங்களுடைய குழந்தைகள் உற்பத்திக்கும் அவர்களுடைய வளர்ச்சிக்கும் பாதுகாப்பிற்கும் கர்த்தாவாகவுள்ள உங்களுடைய பெண்களை நீங்கள் கேவலமாக மதிக்கின்றீர்கள்! என்ன முட்டாள்தனமான செய்கை! உண்மையாக உங்களுக்கு அளிக்கும்படியான அதிகப்பட்ட கௌரவமும் ஆதாவும் உங்களுடைய பெண்களுக்குரியது. ஏனெனில் அவர்களே உங்களது குலத்தின் மணிச்சுடர்கள்.

கி-வாசி:—அது மெய்தான்.

சாக்ரடீஸ்:—அவர்கள் உங்களுடைய வாழ்க்கைத் துணைவிகள் அல்லவா?

கி-வாசி:—ஆமாம்.

சாக்ரடீஸ்:—ஆகையால் உண்மையில் நீங்கள் அவர்களுக்குச் சுதந்திரத்தையும், சம அந்தஸ்தையும், கல்வியையும் அளிப்பீர்களேயானால் அவர்கள் உங்களுடைய குழந்தைகளை நோயின்றி காப்பாற்றுவார்கள். அதன்பயனாக அவர்கள் இப்பொழுது கோருவதைப் போல் நகைக்கு ஆசைப்பட மாட்டார்கள். இன்புற்ற இல்லத்தையும், நோயற்ற குழந்தைகளையும் பார்த்துக் கொண்டிருப்பது ஆனந்தமல்லவா ?

கி-வாசி:—அறிஞரே! நாங்கள் இதற்கு எதிரிடையாக ஒன்றையும் கூறமுடியாது.

சாக்ரடீஸ்:—குழந்தைகளையும் மிருகங்களையும்தான் கடவுள் அழகாகப் படைத்தாரா ?

கி-வாசி:—இல்லை. கடவுள் புஷ்பங்களைக்கூட அழகாகப் படைத்துள்ளார்.

சாக்ரடீஸ்:—நீங்கள் இயற்கையை விரும்புவதால் உங்களுடைய இல்லங்களில் நிறைய மரங்களிருக்குமென நினைக்கின்றேன்.

கி-வாசி:—(சிரிப்புடன்) புஷ்பங்களால் எங்களுக்குப் பயனில்லை.

சாக்ரடீஸ்:—ஆனால் நீங்கள் உண்மையாக அழகியபொருள்களை நேசிப்பதில்லைபோலும்!

சாக்ரடீஸ்:—உங்களுடைய வாழ்க்கைத் துணைவிமார்கள் ஏன் புஷ்பங்களைப் பயிரிடக் கற்றுக்கொள்ளக் கூடாது? உங்களுடைய வீட்டை அழகுபெற வைப்பதற்குப் போதிய செடிகளை உற்பத்தி செய்ய அவர்களுக்கு சமயமிருக்குமென நினைக்கின்றேன். இன்னும் அவர்கள் நகைப்பித்துக் கொள்ளுவார்களேயானால் அழகிய தையல் வேலைகளைக் கற்றுக்கொள்ளுவதற்கும், அவைகளை உங்களுடைய பெண் குழந்தைகளுக்கு கற்றுக் கொடுப்பதற்கும் அவர்கள் ஆசைப்படவில்லையா? நகையின்பேரில் பணத்தை செலவு செய்வது வீணாகாதா? ஒரு வீட்டுத் தலைவன் பொன் வேலை செய்யும் தட்டானுக்கு எவ்வளவு அதிகமாகப் பணம் கொடுக்கின்றானோ அவ்வளவுக்கும் அவன் வீட்டுப் பெண் அறிவுடையவளாவாளா? இவற்றைத் தீரயோசித்துப் பாருங்கள்.

கி-வாசி:—சாக்ரடீஸே! தாங்கள் கூறினவற்றை நாங்கள் கவனிக்கிறோம்.

சாக்ரடீஸ்:—ஆகையால் இன்றைய விவாதத்தின் முடிவு என்னவென்றால், நீங்கள் உங்களுடைய பெண்களுக்கு கல்வி அளிக்க வேண்டும். உங்களுடைய கிராமத்தைச் சுத்தி செய்து மனிதர்கள் வசிக்க உகந்ததாய் செய்யவேண்டும். இவற்றைச் செய்வீர்களேயானால் நகைக்கு அவசியமிராது. அதனால் பணம் மிச்சமாகும். நகை உபயோகிப்பதினால் நகை தேய்வதும் கடன் அதிகரிப்பதுந்தான் பயன். இவைகளை அனுசரிப்பீர்களேயானால் நீங்கள் இன்புறுவீர்கள்.

கி-வாசி:—அறிஞரே! தங்கள் தர்க்கமும் எங்களுக்கு உபதேசித்த நற்புத்தியும் போற்றத்தகுந்தது. நாங்கள் அவைகளை நடைமுறையில் அனுசரிக்கிறோம்.

(அடுத்த இதழில் ஜலம், விறகு, எருவு, என்பதுபற்றி வெளிவரும்)

# பாரிஜாதம்—கைகாரி ?

[விகடகேசரி எழுதியது]

(Rights Reserved by the Author)

(சித்திரை மாத வெளியீட்டின் தொடர்ச்சி)

இனி இப்போதைய—அவளுடைய சங்கதிகளைக் கவனிக்கலாமா? இப்பொழுதுதான் சுமார் இரண்டு மாதத்திற்கு முன் பாரிஜாதம் ஒருபாட்டுக் கச்சேரிக்குப்போய் இருந்தாள். அங்கு இலட்சாதிபதியின் பிள்ளையாகிய முத்தும் வந்திருந்தான். முத்துக்கு வயதென்னவோ இருபத்தேழு அல்லது இருபத்தெட்டு தான் இருக்கும். ஆனாலும் அவனைக் கண்டவுடன் பாரிஜாதத்தின் உடம்பில் அவளை யறியாமலே ஒருவித உணர்ச்சி ஏற்பட்டது. அப்படி ஒன்றும் முத்து பேரழகு உள்ளவனாகவும் காணப்படவில்லை. அழகில்லாத பணக்காரன்மீதுதான் அவள் ஆசைப்படுவது கிடையாதே. அல்ல! முகத்தின் தோற்றம் அவள் மனத்தில் எப்பொழுதும் குடிகொண்டிருந்த மலையாளத்தானுடைய தோற்றத்தைப்போ லிருந்தது. இதுதான் அவள் மனம் அவன்மீது சென்றதற்குக் காரணம். உடனே எப்படியாவது அவனை அடையவேண்டும் என்று அவள் தீர்மானித்துவிட்டாள்.

பாட்டுக்கச்சேரி முடிவதற்கு முன்னரே முத்து பாடகனுக்குச் சன்மானம் செய்துவிட்டு வெளியில் சென்று தன் மோட்டார் வண்டியிலேறி திருவல்லிக்கேணி கடற்கரைக்கு காற்றுவாங்கச் சென்றான். அவனைத் தொடர்ந்து பாரிஜாதமும் தன் மோட்டார் வண்டியிலேறிக்கொண்டு திருவல்லிக்கேணி கடற்கரைக்குச் சென்றாள். அங்கு இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தவண்ணம் உலவினார்கள். மிகச் சாதாரணமாக எவரையும் எளிதில் மயக்கக்கூடிய பாரிஜாதம் அன்று கொஞ்சம் கஷ்டப்பட்டுத்தான் அவனைத் தன்வசப் படுத்தினாள்.

அவர்கள் பேசிக்கொண்ட இன்பமான வார்த்தைகளுக்குக் கணக்கே இல்லை.

அதுமுதற்கொண்டு அதாவது கடந்த இரண்டுமாதகாலமாக அவர்கள் இரண்டுபேரும் ஆனந்த வாழ்க்கையை நடந்திவருகிறார்கள். முத்துவைச் சந்தித்தபிறகு பாரிஜாதம் பிறர் முகம்பாராத பதிவிரதையாய் உண்மையாக அவனைத் தன் உயிர்போலவே எண்ணி அவன் இஷ்டப்படி யெல்லாம் நடந்து வருகிறாள்.

இனி முன்னேவிட்ட இடத்தைத் தொட்டுக்கொள்ளுவோம்.

பாரிஜாதம் 'நீங்கள் என்னை என்றைக்கும் விட்டுப்பிரியக்கூடாது. நான் உங்கள் இஷ்டப்படி யெல்லாம் நடந்துகொள்ளுகிறேன்,' என்று சொன்ன

வுடன் முத்து அவளைப்பார்த்து, 'கண்ணே! நான் உன்னை ஒருபோதும் விட்டுப்பிரிய மாட்டேன்—கவலைப் படாதே—உன்னால் எனக்கு ஒரு கஷ்டமும் இல்லையே,' என்று சொன்னான்.

'அந்த வரம்தான் எனக்கு வேண்டும்,' என்று சொல்லிக்கொண்டே தலை குனிந்து முத்தமிட்டு 'என் ஆசைத்துரையே' என்று சொன்னாள்.

பிறகு இருவரும் ஒருவர் கையை ஒருவர் கோர்த்துக்கொண்டே உலாவ ஆரம்பித்தார்கள்.

அப்போது முத்து அவளைப்பார்த்து, 'பாரிஜாதம்! நீ உன் வரலாறுகளையெல்லாம் ஒளிக்காமல் என்னிடத்தில் சொல்லியதைப்பற்றி நான் சந்தோஷப் படுகிறேன். ஆனால் ஒரு விஷயம் உன்னிடமிருந்து கேட்க நான் ஆசைப் படுகிறேன்,' என்று சொன்னான்.

'உங்கள் ஆசையைப் பூர்த்திசெய்ய நான் காத்துக்கொண்டிருக்கிறேன். காதலரே!' என்று ஆசையினால் அவனைச் சேர்த்துப் பிடித்து அவன் முகத்தைப் பார்த்துச் சொன்னாள்.

உடனே முத்து பிரகாசம் பொருந்திய அவளுடைய முகத்தை கூர்மையாகப் பார்த்து, 'கண்ணே, இதுவரையில் என்னைத் தவிர உன்னைக் காதலித்தவர்களில் யார் உன்னை நன்றாகக் காதலித்தவர்? அவர் வரலாற்றை எனக்குச் சொல்வாயா?' என்று கொஞ்சிக்கொண்டே கேட்டான்.

பாரிஜாதம் சிறிது வெட்கமடைந்து அவன் மார்பின்மீது தன் தலையைச் சாய்த்துக்கொண்டு அவன் கைகளைத் தன் கைகளால் பிடித்துக்கொண்டு




'உங்களுக்கு இஷ்டமான சங்கதி எதுவோ அதைச்செய்ய நான் தங்கள் வேலைக்காரியாகக் காத்துக்கொண்டிருக்கிறேன்,' என்று சொல்ல மறுபடியும் 'உங்களுக்கு முன் நான் விரும்பியவர்களில் ஒரே ஒருவர், மற்ற எல்லோரைப் பார்க்கிலும் என்னிடத்தில் அதிக அன்புள்ளவராய் நடந்துகொண்டார். அவர் கதையை நான் அறிந்தவரையில் சுருக்கமாகச் சொல்லுகிறேன், கேளுங்கள்' என்று சொல்லிக்கொண்டே அவன் மார்பில் முத்தமிட்டுப் பிறகு அவன் கையைப் பிடித்துக்கொண்டு உலவியவண்ணம் தன் பழைய காதலன் ஒருவனுடைய கதையைச் சொல்லத் தொடங்கினாள்.

'நண்பரே, நான் சொல்வதைக் கவனமாய்க் கேளுங்கள். பல பெயர்கள் என்னை விரும்பினார்கள். அவர்களில் இங்கிலீஷ் வைத்தியம் கற்ற ஒரு வாலிபன்—ஒரு டாக்டர் என்னை மிகவும் அதிகமாக விரும்பினான்.

அவன் அழகானவன்; பெரிய ஷோக் பேர்வழி; அவன் பெருமைக்காக வைத்தியத் தொழிலில் தேர்ந்திருந்தானே யன்றி உண்மையில் அவன் வைத்தியம் செய்யவேண்டுமென்னும் அவசியமே இல்லை. அவன் தகப்பனார் சிறந்த பணக்காரர். அவர்களுக்குச் சென்னையில் சிறந்த பல பங்களாக்களும், பெங்களூரில் சுமார் நூறு வீடுகளும் சொந்தத்தில் இருக்கின்றன.

'இப்படிப்பட்ட பிரபுவின் மகனோடு நான் மிகப் பிரியமாய் இருந்துவந்தேன். அவனுடைய பெயர் ஆனந்த வடிவேல் என்பது. அவன் உண்மையில் எப்போதும் தன் பெயருக்கேற்றபடி ஆனந்த வடிவேலனாகவே காணப்பட்டான். அவன் தன் தாய்தந்தையர்களுக்குத் தெரிந்தே என்னை நேசித்து வந்தான். அவன்மீது அவன் தாய்தந்தையர்களுக்கு அளவு கடந்த பிரியம். அவன் பிறந்த பிறகுதான் அவர்களுக்கு அவ்வளவு செல்வமும் வந்து குவிந்ததாம். அதனால் அவர்கள் அவன் இஷ்டப்படியெல்லாம் இருக்க அவனை விட்டு வந்தார்கள். அதனால் நான்கூட சில நல்லநாட்களில் அவர்கள் வீட்டிற்குத் தைரியமாகப் போய்வரத் தலைப்பட்டேன். என்னை அவர்கள் தங்கள் உண்மையான மருமகளைப்போலவே கருதி வந்தார்கள். அதனால்தான் நான் ஆனந்தவடிவேலனோடு, மற்றவர்களைப் பார்க்கிலும், கொஞ்சம் நீடித்த காலம் உறவாடிக்கொண்டிருந்தேன்.

உண்மையில் ஆனந்தவடிவேலன் என்னை ஊரார் அறிய கலியாணம் செய்துக்கொள்ள இஷ்டப்படவில்லை. அதனால் நாங்கள் இருவரும் உண்மைக் காதலன் காதலியாகமட்டும் இருந்து எங்கள் எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டிருந்தோம். அவன், ஒவ்வொருதினமும்—என் ஒவ்வொரு நிமிடமும்—என்னைக் கண்ணே! பொன்னே, என் இன்பக் களஞ்சியமே!' என்று பலவிதமாகப் புகழ்ந்துபேசி என் விருப்பத்தை நிறைவேற்றுவதில் கண்ணுங் கருத்துமாய் இருந்து வந்தான்.

அவனுடைய தாயாரும் தகப்பனாரும் அடிக்கடி பெங்களூருக்குப் போவது வழக்கம். அப்போது சில சமயங்களில் ஆனந்தவடிவேலனும் அவர்களோடு போவான்.

ஒரு முறை அவன் பெங்களூருக்குப் போய் இருக்கையில் திடீரென்று அவனுக்கு நோய் உண்டாயிற்று. அதைப்பற்றி அவன் எனக்கு அடிக்கடி—என் தினந்தோறும்—கடிதம் எழுதிவந்தான். கடைசியாக அவன் எனக்கு எழுதிய கடிதத்தில், 'கண்மணீ! நான் கொஞ்சம் குணமடைந்திருக்கிறேன். சீக்கிரத்தில் வந்து உன்னைப்பார்க்க விரும்புகிறேன்,' என்று எழுதி இருந்தான். இதற்கிடையில் நான் அவனைச் சென்று பார்த்திருக்கலாம். ஆனால் பார்க்கவில்லை.

மறுநாள்—ஆம்; அந்த நாளை நான் மறக்கவே முடியாது'—என்னை நன்றாய்ச் சிங்காரித்துக்கொண்டு சாயந்திரம் 'ராக்ஸி பயாஸ்கோப்'புக்குப் போகப் புறப்பட்டேன். அப்போது ஒரு தந்தி என்கையில் வந்துசேர்ந்தது. அதில்,

'பாரிஜாதம்—என் மகன் இறந்துபோகும் தருணத்தில் இருக்கின்றான். இறக்குமுன் உன்னைப் பார்க்காவிட்டால் தன் மனம் திருப்தி அடையாது என்று அவன் சொல்கின்றான். தயைசெய்து-கடவுளுக்குப் பயந்து-உடனே

புறப்பட்டுவா.' சபாபதி; என்று எழுதப்பட்டிருந்தது. இந்தத் தந்தியை எனக்குக் கொடுத்தவர் ஆனந்த வடிவேலனுடைய தகப்பனார்.

நான் எப்படிப் போகாமல் இருப்பேன்? அன்றிரவே நான் புறப்பட்டு மறுநாள் காலையில் ஆனந்தவடிவேலனைச் சென்று கண்டேன்.

'அவனுக்கு எப்பொழுதாவது ஒரு முறை வயிற்றுவலி வருவது வழக்கம் என்பதையும், அதை என்னிடம் சொல்லி அனுவசியமாக எனக்குத் துன்பத்தை உண்டாக்க அவன் இஷ்டப்படவில்லை என்பதையும் அப்பொழுது தான் நான் உணர்ந்தேன். இதனால் அவன் என்னை எவ்வளவு அருமையாக நேசித்துவந்தானென்பது தெரிகிறதா! இந்த முறை அவனுக்கு வயிற்று நோய் அதிகப்பட்டுவிட்டது. இப்போதுதான் டாக்டர் 'இன்ஜக்ஷன்' செய்துவிட்டுப் போனார் என்று ஆனந்தவடிவேலனுடைய தகப்பனார் என்னிடம் சொன்னார்.

உண்மையில் ஆனந்தவடிவேலன் அப்போது மிகவும் இளைத்துப்போய் இருந்தான்............

அன்று பகலில் நான் மட்டுமே அவன் பக்கத்தில் பல சமயங்களில் தனித்திருந்தேன். அப்பொழுதெல்லாம் அவன் எனக்குக்கொடுத்த முத்தங்களுக்கும், பேசியகாதல் வார்த்தைகளுக்கும் கணக்கே இல்லை.

'ஒரு வேளை நான் இறந்துவிட்டால் நீங்கள் இவளுக்கு மாதம் ஒரு நூறு ரூபாய் கொடுத்துவரவேண்டும்.' என்று ஆனந்தவடிவேல் தன் தகப்பனாரிடம் சொன்னான். அவன் கேட்டுக்கொண்டபடியே அவன் தகப்பனார் அன்றுமுதல் இன்றுவரையில் எனக்கு மாதம் ஒருநூறு ரூபாய் கொடுத்துக் கொண்டு வருகிறார்.

அன்று இரவு எட்டுமணிக்கு ஆனந்தவடிவேல் கொஞ்சம் குணமடைகிறவனைப்போலக் காணப்பட்டான். நான் கண்விழித்துக்கொண்டு அவன் பக்கத்தில் இருப்பதாகச் சொன்னேன். டாக்டரும் அப்பொழுதுதான் வந்துபார்த்துவிட்டுத் தைரியம் சொல்லிவிட்டுப் போனார். இத்தனை நாள்பட்ட கஷ்டத்தினால் அலுத்துப்போன அவனுடைய தாயும் தந்தையும், அன்று கொஞ்சம் நான் இருக்கிறேனென்ற தைரியத்தினால் தூங்கலானார்கள். பிறகு ஆனந்த வடிவேலனுக்கு நான் முத்தங்கொடுத்து தூங்கவைத்தேன். நீயும் தூங்கு என்று சொன்னான்.

.........அதுவரையில் எனக்கு ஏற்பட்ட சிரமத்தினால் நான் சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடியே சிறிது தூங்கிவிட்டேன்.

............திடீரென்று கண்விழித்துப் பார்த்தேன். நான் இருந்த அறை இருள் நிரம்பி இருந்தது. இருட்டில் மெதுவாக ஆனந்தவடிவேலன் படுத்துக்கொண்டிருந்த படுக்கையைத் தடவிப் பார்த்தேன். அதில் அவனைக் காணோம்!

உடனே எனக்கு ஆச்சரியமும் பயமும் ஒரே சமயத்தில் உண்டாயிற்று. அதனால் நான் கூச்சலிட்டேன். நான் இட்ட கூச்சலைக் கேட்டு ஆனந்த வடிவேலனுடைய தகப்பனாரும் தாயாரும் நான் இருந்த அறைக்குள் ஓடி

வந்து மின்சார விளக்கின் பொத்தானை அழுத்தினார்கள். உடனே அந்த அறைமுழுவதும் வெளிச்சம் நிரம்பியது. கட்டிலின்மீது ஆனந்தவடிவேலனைக் காணோம்.

நாங்கள் அவனைப் பலவிடங்களிலும் தேடினோம். காணோம். கடைசியாக அவனுடைய சிங்காரிப்பு அறைக்குச் சென்றோம். அங்கு அவன் அலங்கோலமாகத் தரையில் விழுந்துகிடந்தான். அவன் உடலில் உயிர் இல்லை என்பதை நாங்கள் அறிந்தோம். அங்கிருந்த ஒரு மேஜையின்மீது ஒரு கடிதம் வைக்கப்பட்டிருந்தது. அக்கடிதத்தை எடுத்து நாங்கள் பிரித்துப் பார்த்தோம். அதில், 'என் அன்புமிகுந்த தாய்தந்தையர்களுக்கு என்னுடைய கடைசி வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். என் நோயைப் பொறுத்துக்கொள்ள என்னால் முடியவில்லை. ஆகவே நான் அடுத்த நிமிஷத்தில் விஷத்தை உண்டு மடியத் தீர்மானித்துவிட்டேன். அதற்காக என்னை மன்னிக்கவும். இப்பொழுது பாரிஜாதம் நன்றாகத் தூங்கிக்கொண் டிருக்கின்றாள். பாவம்! அவள் மிகவும் களைத்துப்போய் இருக்கின்றாள். ஆகவே, அவளை எழுப்ப நான் இஷ்டப்படவில்லை. அவள் தன் களைதீர நன்றாய்த் தூங்கி விழிக்கட்டும். நான் அவளிடம் விடைபெற்றுக்கொண்டதாக நீங்கள் அவளிடம் கூறுங்கள். அவள் என்மீது உண்மையில் மிகவும் அன்புள்ளவள். அதனால் தான் நீங்கள் அவளுக்கு மாதாமாதம் ஒரு நூறு ரூபாயாவது அல்லது மொத்தமாக ஐம்பதினாயிரம் ரூபாயாவது கொடுக்கவேண்டும். இதை அவசியம் செய்யுங்கள். இப்படிக்கு தங்கள் அன்புள்ள குமாரன்—ஆனந்தவடிவேலன்.

இந்த விஷயம் நடந்து பலமாதங்களாகின்றன. ஆனந்தவடிவேலன் இஷ்டப்படியே இப்போதும் அவன் தகப்பனார் எனக்கு மாதாமாதம் தவறாமல் ரூபா நூறு கொடுத்துக்கொண்டு வருகின்றார்' என்று கூறிப் பாரிஜாதம் மறுபடியும் முத்துவைப்பார்த்து, 'அன்பரே, ஆனந்தவடிவேலன்தான் உங்களுக்கு முன் என்னை மிக நன்றாக நேசித்துவந்தவன்—' என்று சொல்லித் தன் வார்த்தையை நிறுத்தினாள். அவ்வளவுதான்!

தன் கையைப் பிடித்துக்கொண்டிருந்த அவளுடைய கையைத் திடீரென்று உதறித் தள்ளிவிட்டு முத்து வேகமாகச் சென்று தன்னுடைய மோட்டார் வண்டியிலேறித் தன் வீடுபோய்ச் சேர்ந்தான்............

அடுத்தநாள் பாரிஜாதத்திற்குத் தபால்மூலம் ஒரு கடிதம் வந்தது. அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

'பாரிஜாதம்! உன்னைப்போல் கேவலமான வேறு ஒருத்தியை இந்த உலகத்தில் யாரும் காணமுடியாது. ஆனந்தவடிவேலன் உன்னிடத்தில் மாசில்லாத அன்புகொண்டிருந்தானென்று தெரிகிறது. அவனோடு நீ இறந்திருக்கவேண்டும். இல்லாவிடில் வேறு ஒருவனையும் கனவிலும் நினையாமல் சாகும் வரையில் அவனையே நினைத்துக்கொண்டிருக்கவேண்டும். இந்த இரண்டில் எதையும் நீசெய்யவில்லை. நீயோ காமங்கொண்ட கழுதையாக அலைகின்றாய் என்று தெரிகிறது. ஆனந்தவடிவேலனுடைய அன்பையே மறந்த நீ என்னிடம் எப்படி அன்புடையவளாய் இருக்க முடியும்? சீ! இனி நீ என்னை நினையாதே!' உன்னோடு சம்பந்தப்பட்ட என் தேகத்தைச் சுட்டாலும் பாவம் தீராதே! இப்படிக்கு உன்னை மனமாற வெறுக்கும் ஆனந்தவடிவேலன்.

இதைப்படித்தவுடன் பாரிஜாதம், 'என்வாயினுல் நான் கெட்டு விட்டேன். நான் புத்தி இல்லாதவள். எவ்வளவோ சாமர்த்தியமாகப் பிழைத்த நான் சிறிது தவறிவிட்டேன்.........ஆ! முத்து! நீ எழுதியது தவறு. ஆனல் ஆனந்தவடிவேலன் என்னை உண்மையாக நேசித்தான் என்பதும் நான் அவனை உண்மையாக நேசிக்கவில்லை என்பதும் உண்மைதான், ஏன்—? உன்னைத் தவிர வேறு ஒருவரையும் நான் உண்மையாக நேசிக்கவில்லை என் பதை நானே என் மனமாற ஒப்புக்கொள்ளுகின்றேன். ஆனல், என் கண்ணே! நான் உன்னை உண்மையாகவே நேசிக்கிறேனடா!' என்று சொல்லிக்கொண்டே எதிரே மேஜையின்மீது இருந்த முத்துவின் படத்தை எடுத்து முத்தமிட்டாள்.

............இப்படிப் பாரிஜாதம் தான் முத்துவை உண்மையாக நேசிப்பதாகக் கூறுகின்ருளே! அது உண்மையாய் இருக்குமா? அப்படியானல் அதற்குக் காரணம் என்ன? தெரியாவிட்டால் அவளையே கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். ஓடுங்கள் திருவல்லிக்கேணி கடற்கரைக்கு இன்று ஆறுமணிக்கு. கதை முடிகிறது !

கதை நன்ருய் இருக்கிறதா? இல்லையா? நன்ருய் இருக்கிறதென்று சொல்லுங்கள். இல்லாவிட்டால் உங்கள் இஷ்டம் !

குரு:—சீடா! தமிழ்நாட்டிலுள்ள அரசம்பூ உன்னுடைய பிற்கால வாழ்க்கைக்கு எதற்கு பயன் படும் ?

சீடன்:—படிப்பதற்கு சார்!

குரு:—என்னடா மடையா, உளறுகிருய் ?

சீடன்:—பின் என்ன ? 'தமிழரசு' படிபபதற்குதான் சார் ஆகும்.

—ராஜன்

கணவன்:—(மனைவியைப் பார்த்து) கட்டிக்கரும்பே! தேனே ! கனியே! மடமயிலே! குயிலே! இங்கு வா.

மனைவி:—நான் மானிட வர்க்கத்தைச் சேர்ந்தவள். தாங்கள் சொல்லும் புள்ளினங்களும், தேன், கனி, கரும்புகளும் மார்க்கட்டிலிருக்கின்றன.

—கே. மெய்யப்ப செட்டியார்

ராமன்:—என்ன பாகவதரே ! ராகம் சரியாய் வரவில்லையே. தடுமாறித் தடுமாறி பாடுகின்றீரே.

பாகவதர்:—என்னுடைய ராகத்தை எல்லாம் தமிழ்ப் பேசும் பாடும் படக்காக்ஷிக்கு கொடுத்து விட்டேன். என்ன செய்யலாம் ?

—வீ. சேதுராமசாமி

ஆசிரியர்:—மழை பெய்யும்போது பெரியவர்களெல்லாம் என்ன செய்வார்கள் ?

மாணவன்:—மொச்சைக்கொட்டை சுண்டல் பண்ணிச் சாப்பிடுவார்கள் சார்!

—திருவை கே. வைத்தியநாதன்

முந்துங்கள்! முந்துங்கள்!!

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் எழுதிய

## அனுபவ வைத்திய நூல்

(இரண்டாம் பதிப்பு)

இப் புத்தகம் ஒவ்வொரு வீட்டிலும் தவறாது இருக்க வேண்டியது இன்றியமையாததாகும். இந் நூல் வீட்டில் இருப்பது குடும்ப வைத்தியர் ஒருவர் உங்கள் இல்லத்தில் கூடவே யிருப்பதுபோலாகும். நோய் உண்டான காலத்தில் நீங்களே இந் நூலின் உதவியைக்கொண்டு சிகிச்சை செய்து கொள்ளலாம். இந் நூலில் எல்லா நோய்களின் விவரமும், அவைகள் உண்டாவதற்கு முன் தோன்றும் குறிகளும், அவைகளைப் போக்கும் சுலபமான வழிகளும், அதற்குரிய எளிய மருந்து வகைகளும் காணக் கிடைக்கும்.

அனுபவ வைத்திய நூலை வைத்துக்கொண்டே எவரும் ஒரு சிறந்த வைத்தியராகலா மென்பது திண்ணம்.

முன் பதிப்பைவிட இப்பதிப்பில் அநேக விஷயங்கள் சேர்க்கப்பட்டு உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் அச்சிட்டுள்ளது. சொற்ப பிரதிகளே கைவசமிருக்கின்றன. முந்துங்கள்.

இதன் விலை ரூபா 2.

பழய 2-ஆம் பாகம் விலை அணா 8. தபால் சார்ஜ் வேறு

---

உங்கள் கைரேகைப் பலன்களை நீங்களே பார்த்துக் கொள்ளலாம்.

## திரிகால ரேகை சாஸ்திரம்

(இரண்டாம் பதிப்பு)

இப்புத்தகம் தூய்மையான தமிழில் எளிய நடையில் படங்களுடன் விளக்கமாய் அனுபவ ஹஸ்த ரேகை சாஸ்திர ஆசிரியரான சக்தி தாஸரால் எழுதப்பட்டிருக்கிறது. இதைப் படித்தும், இதில் படங்கள் மூலம் விளக்கப்பட்டிருக்கும் கை ரேகைகளின் குணகுணங்களைப் பார்த்தும், ஒவ்வொருவரும் அவரவர்களின் ஆயுள், விவாகம், சந்தானம், பக்தி, அதிர்ஷ்டம், கண்டம், காரியசித்தி, இல்லற சுகம் முதலியவைகளை எல்லாம் சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம். இப்புத்தகம் வேண்டுவோர் பன்னிரண்டு அணா ஸ்டாம்புகள் அனுப்பி அன்ரிஜிஸ்டர் பார்சலாகப் பெற்றுக் கொள்ளலாம். வி. பி. யில் அனுப்பப்பட மாட்டாது.

'தமிழரசு' புக்டிபோ,

31, வைத்தியநாத முதலி தெரு, ஜி. டி. சென்னை.

# காங்க்ரீன்

என்னும்

# இரண சஞ்சீவி

இம் மருந்தானது எல்லாவித இரணங்களையும், கட்டிகளையும் ஆற்றும். மதுமேக ரோயால் பீடிக்கப்பட்டவர்களுக்குக் காணும் இராஜக் கட்டியானது எவ்வளவு அபாய நிலையில் இருந்தாலும் குணமாய் விடும். ஆஸ்பத்திரிகளில் பார்த்து தீராதென அனுப்பி விட்ட கேசுகளை ஆச்சரியகரமாய் குணம் செய்யும். அநேக ஆங்கில வைத்தியர்கள் இதை உபயோகிக்கின்றனர்.

ஆஸ்பத்திரிகளில் பெரிய டாக்டர்களாக இருக்கும் என் சகோதர வைத்தியர்களுக்குத் தெரிவிப்பதாவது: உங்கள் ஆஸ்பத்திரிகளிலாவது அல்லது தனிப்பட்டாவது பார்க்கப்பட்ட ராஜ கட்டிகள் (சைனஸ்) வைத்து (டையபடிக் கோமா) வந்து இனி இக்கேசு பிழைக்காது என்று நினைக்கும் சமயம் நீங்கள் கைவிட்ட சமயம் உங்கள் (இன்சொலின்) குணம் தராத காலத்திலாவது இதை உபயோகித்து உயிரைக் காப்பாற்றுங்கள். ஆஸ்பத்திரிகளில் ஆப்பரேஷன் செய்யாமல் இரணங்களை ஆற்றி விடுங்கள். உங்களுக்கு இதன் குணம் தெரிந்துக் கொள்ளும் வரையில் உங்களால் முடியாது என்றபோது என்னிடமாவது அனுப்புங்கள். உங்கள் பார்வையும் வைத்துக் கொள்ளுங்கள். முக்கியமாய் ஜெனரல் ஆஸ்பத்திரி, ராயப்பேட்டை ஆஸ்பத்திரி, டிஸ்ட்ரிக்ட் ஆஸ்பத்திரிகளிலிருக்கும் டாக்டர்களுக்கும் டாக்டர் குருசாமி முதலியாருக்கும், கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்களுக்கும், பாண்டலே அவர்களுக்கும் ராம ஐயங்கார் அவர்களுக்கும் இந்தியன் மெடிகல் ஸ்கூல் பிரின்சிபால் அவர்களுக்கும் வற்புறுத்தி மறு முறையும் கேட்டுக் கொள்வதாவது உங்களால் முடியாது என்று எண்ணிய பிறகாவது எங்கள் இரண சஞ்சீவியை உபயோகித்துப் பாருங்கள்.

கண்டமாலை, அரையாப்புக் கட்டி இவைகளையும் எத்தகைய ராஜ கட்டிகளையும், புரைப் புண்களையும் ஆற்றிவிடும்.

இம்மருந்து சேத்துப்புண், சொறி சிரங்கு, முகத்தில் காணும் மோகப்பருவு இவைகளை நீக்கும்.

ஆராத மேகப்புண், மேகப்படை கட்டி இவைகளுக்குப் பூச இரணம் ஆறும். பவுத்திர வியாதிக்கு மேல் பூசினால் இரணம் ஆறிவிடும்.

## சில அபிப்பிராயங்கள்

சென்னை கந்தப்பமுதலித் தெருவு, நெ. 21, P. சோமசுந்திர செட்டியார் தெரிவிப்பது:—நான் என் தாயாருக்கு ஏற்பட்டிருந்த ராஜகட்டிக்காக டாக்டர் மல்லய்யாவிடமும், ரங்காசாரியாரிடமும் இராயப்பேட்டை ஆஸ்பத்திரியிலும் காட்டி குணமடையாமல் சாகும் நிலையில் இருந்தபோது துரைசாமி ஐயங்கார் சொல்லியபடி தங்களிடம் வந்து மருந்து கேட்டேன். தாங்கள் கொடுத்த இரண சஞ்சீவியால் முள்ளந்தண்டிலும் மார்பிலும் வயிற்றிலும் இருந்த கட்டிகள் சுகமாய் விட்டது. பிறகு இன்பசாரம் சாப்பிட்டதில் இரத்தம் விருத்தி யடைந்தது. நீரில் சர்க்கரை அதிகமாய் இருந்ததும் மறைந்து விட்டது. 12—12—33.

---

தே. வ. இ. சோமசுந்திரம் செட்டியார், கல்லல். தெரிவிப்பது :-

எனக்கு முதுகில் ஏற்பட்டிருந்த ராஜ கட்டிகளை ஒரு தரம் திருப்பத்தூர் ஆஸ்பத்திரியில் ஆப்பரேஷன் செய்து ஒரு வருடமாய் ஆராமல் நீர் வந்துக்கொண்டே இருந்ததும் தவிர மேல்கொண்டு பல கட்டிகளும் முதுகு பூராவும் சல்லடைக் கண்கள் போல் உண்டாய் விட்டது. பாதை பொறுக்க முடியாமல் கஷ்டப்பட்டிருக்கும் சமயத்தில் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள் கல்லல் ஆ. மு. ஆ. வீட்டுக்கு வந்தபோது காண்பித்தேன். அவர் பட்டணம் வந்தால் பூரணமாய் குணப்படுத்தலாம் என்று சொல்லி இரண சஞ்சீவியைப் போடக் கொடுத்தார் கொஞ்சம் வலி குறைவாயிருந்தது அதுசமயம் ஆ. மு. ஆ. முருகப்ப செட்டியார் அவர்கள் இந்த கேசை உங்களால் குணப்படுத்த முடியுமானல் பட்டணம் அனுப்பலாம் இல்லாவிடில் திருப்பத்தூரிலேயே பார்க்கலாம் என் மகன் இந்த வியாதியால் இறந்து போனன் என்று சொன்னதைக் கேட்ட பின் உறுதி சொன்னதின் மேல் நான் பட்டணம் வந்து ஒரு மாதம் மருந்தை போட்டதில் சகல கட்டிகளும் ஆச்சரியமான வகையில் இரண சஞ்சீவியால் குணமாய் விட்டது என்னிடம் ஒரு டஜன் இரண சஞ்சீவியை வைத்துக் கொண்டு ஏழைகளுக்கு கொடுத்து சுகப்படுத்தி வருகிறேன். இரண சஞ்சீவியை ஒவ்வொரு வீட்டிலும் கையிருப்பாக வைத்திருப்பது அவசியம். 10—9—33.

குறிப்பு:—இன்னும் கணக்கற்ற இரணங்களும் இராஜகட்டிகளும் குணமான நற்சாட்சி பத்திரங்கள் எங்களிடம் இருப்பினும் சில மாத்திரம் இங்கு குறிப்பிட்டோம்.

விலை புட்டி 1-க்கு ரூபா 1.

# இனி நீங்கள் கவலைப்பட வேண்டாம்

நீங்கள் பசியின்றி கஷ்டப்பட்டாலும், இருதய வியாதி, பித்த சோகை, வீக்கம், மதுமேகம், பாரிச வாய்வு, க்ஷய இருமல் சுரம் இவற்றில் எந்த நோயால் நீங்கள் பீடிக்கப்பட் டிருந்தாலும்,

# இன்பசாரம்

புருஷத் தன்மையைத் தரும்



புத்திர உற்பத்தியையளிக்கும்

என்ற எங்கள் ஒப்பற்ற உயரிய மருந்தை வரவழைத்து உபயோகியுங்கள். உங்கள் நோய் உடனே பரிதி முன் பனிபோல் நீங்கி விடும்.

இன்பசார மாத்திரையை இரவில் படுக்கைக்குப் போகும்போது துூள் செய்து வாயில் போட்டுக்கொண்டு பால் சாப்பிட்டுவரின் பசி அதிகரிக்கும்; நரம்புகளுக்கு உணர்ச்சி ஏற்படும்; இரத்த விருத்தியுண்டாக்கும். இம் மாத்திரையானது தங்கம் ஒன்றையே செந்தூரம் செய்து பவளம், முத்து, காரோபா முதலான சத்து வஸ்துக்களுடன் விதை திறுசுகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இன்பசாரம் ஆணுக்கு இழந்துபோன ஆண் தன்மையை அதிகரிக்கச் செய்வதோடு இரு பாலர்களின் இச்சையையயும் பூர்த்தி செய்து கொள்ள வேண்டிய வலிமையை அளிக்கும். நெடுநாள் குழந்தை பில்லாத தம்பதிகளுக்குப் புத்திர சந்தானத்தையும் உதவும்.

இன்பசார மாத்திரையானது க்ஷய இருமலையும் சுரத்தையும் 10 நாளில் குறைத்து விடுகின்றது. க்ஷயரோகத்தைப் போக்குவதில் இதற்கு நிகரான மருந்து இல்லை என்பது நிச்சயம்.

இன்பசார மாத்திரைகள் ஒடிந்த எலும்பைக் கூட்டுவதிலும் சொர்ப்பன ஸ்கலிதத்தை நீக்குவதிலும், சரீரத்திலுள்ள இரணத்தை ஆற்றுவதிலும் சிறந்தது. நூற்றுக் கணக்கான நல்லுரைகள் பெற்றுள்ளது. ஒரே வேளையில் குணம் தெரியும்.

விளம்பர மருந்துகளைப் போல் இம்மருந்தை நினைத்தலாகாது. இதன் அரிய குணத்தை டாக்டர்களும், நோயாளிகளும் ஏராளமாக அனுபவித்துப் புகழ்ந்திருக்கிறார்கள்.

## இன்பசார மாத்திரையைப்பற்றிய சில நற்சாக்ஷிப் பத்திரங்கள்

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

நான் இருபது வருஷமாக காசி, இராமேஸ்வரம் முதலான இடங்களுக்குச் சென்று பல தானங்களைச் செய்தும் எனக்குப் புத்திர சந்தான மில்லாத காரணத்தால் தங்கள் மருந்தால் புத்திர உற்பத்தி யுண்டானால் இருபது ஆயிரம் கொடுப்பதாய் வாக்களித்தேன். தங்களுடைய இன்பசார மாத்திரையின் பெருமையை என்னென்று புகழ்வேன்.

எனக்கு உள்ள சொத்து ஒன்பதாயிரம் தாளக்கூடிய வீடு ஒன்றுதான். என்னிடம் வேறு பணங் கிடையாது. வேண்டுமானால் கிருஷ்ணா அண்டு கம்பெனியாரையும் கங்கிபாட்டி சுப்பிரமணியம் செட்டியாரையும் கேட்டுக் கொள்ளுங்கள்.

தங்களுடைய மருந்தால் எனக்கு ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. இத்துடன் 4 சவரன் அனுப்பி யிருக்கிறேன். பெற்றுக் கொண்டு என்னை மன்னிக்கவும்.

தங்கள் அன்புள்ள,

தேவரப்பட்டு அப்பய்ய செட்டியார்.

ஹகீம் டாக்டர் அவர்கள் நேரில் சொன்னதாவது :

இன்பசார மாத்திரையை சென்னை ஐகோர்ட்டு ஜட்ஜி கனம் மாதவன் நாயர் அவர்களின் மனைவிக்குக் கொடுத்து குணம் கண்டாராம். அவ்வம்மையாருக்கு மூளை சம்பந்தமான வியாதி இருந்ததாயும் இருட்டறையிலேயே சதா இருக்கவேண்டும் இல்லாவிடில்

மயக்கம் வந்துகொண்டிருந்ததாம். இவ்வியாதிக்காக ஐரோப்பா நாடுகள் பூராவும் சுற்றி அவ்விடத்திய தேர்ந்த வைத்தியர்களைக் கொண்டு சிகிச்சை செய்தனர்களாம். இந்தியாவிலும் தேர்ந்த வைத்திய நிபுணர்களால் சிகிச்சை செய்தும் குணமாகாதிருந்ததாம். அத்தகைய வியாதியை தன்னிடம் காண்பித்ததாயும், அதற்கு என்ன செய்யலாம் என்று என்னைக்கேட்டபோது நான் இன்பசார மாத்திரையைக் கொடுத்தால் குணமாய்விடும் என்று சொன்னதின் பேரில் மேற்படி மாத்திரையைக் கொடுத்து நோய் பூராவும் குணப்பட்டு தனக்கு நல்ல பெயர் கிடைத்ததாய் சொன்னார். இதனை சூசகமாய் தமது பதிப்புத்தாளில் குறித்திருக்கின்றார்.

மே. மா.

ஒரு மாதம் சாப்பிடக்கூடிய 30 மாத்திரைகள் அடங்கிய

புட்டி 1-க்கு விலை ரூபா 5.

# தைலாமிர்தம்



இத் தைலம் பலவித உயர்ந்த பச்சிலைகளின் ரசமும் பசுவின் பால் கோரோசனை முதலான உயர்ந்த வஸ்துக்களும், மூளையைக் குளிரச் செய்யும் வித்துத் தினுசுகளும் மற்றும் பல கடைச் சரக்குகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இத் தைலத்தைத் தேய்த்து ஸ்நானம் செய்து வர, கண் எரிச்சல், கண் சிவப்பு, கண்ணில் நீர் வடிதல், கண் குத்தல், கண்ணில் பூ விழுதல், பார்வை மந்தம், கண் கூசல் முதலான சகல நேத்திர ரோகங்களையும், மூளைக் கொதிப்பு, தலை சுத்தல், மயக்கம், புத்தி மந்தம், சோம்பல் முதலானவைகளையும் நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியைத் தந்து, புத்தித் தீட்சண்யத்தை உண்டு பண்ணும். ஒத்தைத் தலைவலி, கழுத்து நரம்பு வலி, மண்டைக் குத்தல் இவைகள் போம். மூளையின் கொதிப்பால் உண்டாகும் பைத்தியம் நீங்கும்.

## சில அபிப்பிராயங்கள்.

---

லக்ஷிமி நரசிம்மராவ், பார்ப்பத்திதார் (திருப்பதி தேவஸ்தானம்) எழுதுவது:— எனது மனைவியின் நேத்திரம் சிவந்து பார்வை போய், நீர்வடிந்துகொண் டிருந்தது. என் தம்பியின் மனைவி நேத்

திரமும் பூ விழுந்து பார்வை நீங்கி யிருந்தது. இவ்விருவர்களின் கஷ்டத்தைப்பற்றிச் சென்னை காசிச்செட்டி தெருவிலிருக்கும் ஜி. ஆர். கிருஷ்ணசாமி செட்டியாரிடத்திலும், நேஷனல் பாங் தலைமை குமாஸ்தா சுந்தர ராமாஞ்சலு நாயுடுகாரு இடத்திலும். வி. பெருமாள் செட்டி கம்பெனி சொந்தக்காரர் ஆழ்வார் செட்டியாரிடத்திலும் சொல்லித் துயருற்றபோது அம் மூவரும் சென்னைக்கு அனுப்பும்படிக் கட்டளையிட்டனர். அதன்படியே திருவாளர் ராவ்சாகிப் தர்மலிங்க முதலியார் அவர்களின் சகாயத்தால் பட்டணம் சேர்ந்து டாக்டர் மே. மாசிலாமணி முதலியாரிடம் காட்டினேம். அவர் என் மனைவிக்குத் தான் சிகிச்சை செய்வதாயும் என் தம்பி மனைவியைக் கண்ணாஸ்பத்திரிக்கு அனுப்பும்படி கட்டளையிட்டார். அதுபோலவே நடந்துகொண்டதில், என் மனைவிக்கு தைலாமிர்தம் என்னும் தைலம் ஒரு புட்டி கொடுத்து, 4 நாளைக் கொருமுறை ஸ்நானஞ் செய்து வரச் சொன்னர். அதன்படி செய்ததில் 15 நாளில் கண் சிவப்பு மாறிப் பார்வையும் நன்ருய்த் தெரிந்தது. பிறகு 2 புட்டி தைலாமிர்தம் வாங்கிக்கொண்டு திருப்பதிக்கு என் மனைவி வந்துவிட்டாள்.

என் தம்பியின் மனைவி ஒரு வருடமாகக் கண்ணாஸ்பத்திரிக்குப் போய், சிகிச்சைபெற்றுக் கடைசியாய்க் கண் பார்வை உண்டாகாது என அனுப்பிவிட்டார்கள். பிறகு இச்செய்தியை டாக்டர் மே. மாசிலாமணி முதலியாரிடம் சொல்ல அதைத் தான் பார்ப்பதாக ஒப்புக்கொண்டு ஒரு புட்டி தைலாமிர்தம் கொடுத்து தலை முழுகச் சொல்லி, வேருெரு மருந்துப் பொட்டலம் கொடுத்துக் காட்டுக் களாப்பூவை முலைப்பாலில் ஊரவைத்து மருந்தையும் அதனுடன் கலந்து நாள்தோறும் கண்ணுக்குப் போட்டுவரச் சொன்னர். அதன்படியே செய்ததில் ஒரு மாதத்தில் கண்பார்வை பெற்று சுகமாக வாழ்கின்ருள். டாக்டர் அவர்களின் உதவிக்குத் திருப்பதி பெருமாள் அவருக்கு சகாயம் அளிப்பார்.

5 பலம் கொண்ட டின் ரூபா 1. தபால்சார்ஜ் பிரத்தியேகம்.

## தலைவலிச் சூரணம்

இந்தச் சூரணத்தில் ஒரு சிட்டிகை எடுத்து வாயில் போட்டுக் கொண்டு ஜலம் சாப்பிட்டால் 5 நிமிஷத்தில் தலைவலி நீங்கும்; தவிர உடம்புவலி, கைகால்வலி, இவைகள் போம். எத்தகைய சுரமானாலும் ஒரு சிட்டிகை மருந்து சாப்பிட்டவுடன் வியர்வை விட்டு சுரம் நீங்கும். மருந்து உபயோகிக்கும் முறை மருந்துடன் அனுப்பப்படும். இம்மருந்து வீட்டிலிருப்பின் எந்தப் பாமும் எவ்வித அஞ்சனமும் வேண்டியதில்லை. புட்டி 1-க்கு விலை அணு 8.

# காஸ்டோலின்

## (இது சர்வ படையையும் சம்மரிக்கும்)



சரீரத்தில் இடுப்பிலும், கழுத்துப் பட்டைகளிலும், தொடையின் இடுக்கிலும், சாமான் கூட்டின் மேலும் படரும் படையானது இரவுபகலாக மானபிமானம் விட்டு பலர் முன்னிலையில் சாமான் கூட்டில் கையைவைத்து நமை நீங்க சொறிந்துக் கொள்ளச் செய்கின்றது.

சிலர்க்கு முகத்திலும் கழுத்திலும் படர்ந்து விகாரத்தை உண்டு பண்ணுகின்றது. சிற்சிலருக்கு முழங்காலுக்குக் கீழ், கணுக்காலுக்குமேல் படர்ந்து எங்கோமும் நீர் கசிந்துகொண்டு இரணமாய் இருக்கின்றது.

இத்தகைய வியாதிக்கு இங்கிலீஷ் மருந்தில் ஆசிட்சாலிசிலிக் என்னும் பவுடரை மெதிலேடட் ஸ்பிரிட் என்னும் திராவத்துடன் கலந்து பலர் படை மருந்து என்று விற்கின்றார்கள். இம் மருந்தை வாங்கி பூசினவுடன் எரிச்சல் கொடுத்து உதிர்வதுபோல் காணப்பட்டு மீண்டும் திரும்பி விடுகின்றது. எரிச்சலும் பொறுப்பது கஷ்டமாகின்றது. சிலருக்குக் குணமே கிடைப்பதில்லை. ஆதலால் அத்தகைய மருந்தைக் காட்டிலும் தமிழ் மருந்தே வேருடன் களையக்கூடியது. ஆகையால் எங்களால் தயார் செய்யப்பட்டுள்ள காஸ்டோலின் என்னும் விளக்கெண்ணெயினால் தயார் செய்த படை மருந்தை உபயோகித்துப் பாருங்கள்.

வேண்டுவோர் 6 அணு தபால் தலை அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

Rangoon,
Dated 24th August 1933

Dear Doctor

I have the pleasure to inform you that your GASTOLINE has got a very good effect in curing all kinds of skin diseases sa the stock previously recieved by V. P. P. is nearly finished, and there is a good demand for it, I request you to send ½ dozen bottles by earliest V. P. P. & oblige.

Thanking you in anticipation, yours faithfully
E. K. Panchanatham,
c/o The Rangoon Electric Tramway & Supply Co. Ltd.
Merchant Street, Rangoon.

எமது விலாசம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,
31, வைத்தியநாத முதலிதெரு, சென்னை.

முறை சாப்பிட வேண்டும். பாரிச வாய்வுக்கு இது உயர்ந்த எண்ணெய். வாத சரீரம் இளைத்துவிடும்.

## சில அபிப்பிராயங்கள்

திரு. டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு எழுதியது: நான் ஒரு வருட காலமாய்ப் பல வைத்தியர்களிடம் எண்ணெய்களும், லேகியங்களும், ஆங்கில மருந்துகளும், இன்ஜெக்ஷன்களும் கொடுத்து என் மனைவிக்குச் சிகிச்சை செய்து ஒன்றும் பயன்படவில்லை. கடைசியில் சென்னைக் கோபாலாசாரியார் உங்களைப் பற்றிக் கூறினார். அவர் வார்த்தைக் கிணங்கி தங்களிடம் வந்து சகல மேக சித்தாதி எண்ணெயை வாங்கிக் கொண்டுபோய் 5-நாள் கொடுத்தேன். முதல் நாளிலேயே கணுக்களில் இருந்த மேக நீரினுண்டான வீக்கங்கள் நீங்கிவிட்டன. மூன்றும் நாள் சம்பூரண சுகத்தைத் தந்தது. நீங்கள் கூறியபடி 3-ஆம் நாள் எண்ணெய சாப்பிடும் வரையில் தயிரன்னத்தை இரவு பகலாகக் கொடுத்து வந்தோம். இப்போது என் மனைவி உலாவி வருகின்றாள். இனி என்ன மருந்து கொடுக்கலாம் என்பதைத் தெரிவிக்கவும்.

சென்னை
15—5—30.

இப்படிக்கு.
அண்ணுவையங்கார்.

---

எம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

தாங்கள் எனக்குக் கொடுத்த சகல மேக சித்தாதி எண்ணெயை இரண்டு நாள் சாப்பிட்டேன். என் முழங்கால் வீக்கமும் பிடிப்பும் நீங்கிவிட்டது. இடுப்பு வலியும் போய்விட்டது. வயிற்றில் சப்பித்துக்கொண்டிருந்த வாய்வும் நீங்கிவிட்டது. இன்னும் ஒரு வேளை எண்ணெயைக் கையிருப்பாக வைத்திருக்கிறேன். இந்த லெட்டர் கொண்டுவரும் பிராம்மண விதவை மிகவும் ஏழை. கால் குடச்சலினால் அனேக நாளாய்க் கஷ்டப்படுகிறாள். கிருபை கூர்ந்து ஒரு ரூபா வாங்கிக்கொண்டு இரண்டு வேளை எண்ணெய் கொடுத்தனுப்பவும். நான் தங்களை வந்து பார்க்கிறேன்.

இப்படிக்கு,

கீழ்வீதி சீனிவாச ஐயங்கார்,

சைவ முத்தையா முதலி வீதி, சென்னை.

இத்தகைய இன்னும் எண்ணிறந்த நற்சாட்சிகள் பெற்ற

சகல மேக சித்தாதி எண்ணெய்

புட்டி 1-க்கு விலை ரூபா 5.

# இணையற்ற

## அயத்தங்க

## திராவகம்



நண்பர்களே! இந்த மருந்தானது மலேரியா என்னும் விஷ சுரத்தினாலாவது அல்லது வேறு எந்த சுரத்தினாலாவது சரீரம் இளைத்து இரத்தம் குறைந்து சோகை போலும் வெளுத்துக் காணப்படும் இளைத்த தேகிகளுக்கு ஒரு ஆச்சரிய அபூர்வமெனவே காட்டும்.

இதைச் சாப்பிடுபவர்களுக்கு மயிர் கறுத்து வளரும்; பசியின்மை நீங்கும்; மலம் தாராளமாய்க் கழியும்; தாதுவிருத்தி உண்டாகும்; பரிசுத்த இரத்தம் பெருகும்; நல்ல பசியுண்டாகும்; முகம் வசீகரமாய்[illegible] காணும்; மேனி சிவக்கும்; நரம்புகள் தடிக்கும்; பசி ய[illegible]கரிக்கும். இம்மருந்தை சா[illegible]பிட்டவர்கள் வீரர்களாகவும், பலசாலிகளாகவும், இரத்தசுத்தியும், இரத்தப் பெருக்கும் பெற்று பித்த சோகை, பித்த பாண்டு, ஊதுகாமாலை, எனும் புருக்கி முதலிய நோய் நீங்கப் பெறுவார்கள்.

இம் மருந்தால் மலமும் தாராளமாய்க் கழியும். இம்மருந்தைச் சாப்பிட்டவர்கள் பயில்வான்களாவார்கள். திடகாத்திர புத்திரர்களைப் பெறுவார்கள்; இன்பத்தையும் அடைவார்கள்.

இம் மருந்தைப் பால்யர் முதல் வயோதியர் வரை ஆண் பெண் இருபாலர்களும் எந்தக் காலத்திலும் சஞ்சீவியைப்போல் உபயோகித்து வரலாம்.

மக்கள் சுகம்பெற வெண்ணியே குறைந்த விலைக்கு விற்கப் படுகிறது.

உபயோகிக்கும் விதம்:—ஒரு அவுன்சு ஜலத்தில் பெரியவர்களுக்கு 2 துளி முதல் 5 துளி வரையிலும், சிறுவர்களுக்கு 1 முதல் 3 துளி வரையிலும் காலை மாலை கொடுக்கலாம். யாதொரு பத்தியமும் இதற்கு வேண்டுவதில்லை.

## சில அபிப்பிராயங்கள்

அன்புள்ள மாசிலா திலக !

தாங்கள் முந்தி யனுப்பிய வி. பி. வந்து பெற்றுக்கொண்டேன். சாமான் திருப்தியாக யிருக்கிறது. நானும் ஒரு அனுபவ வைத்தியனாதலால் விலை குறைவு செய்து அனுப்பினால் தங்கள் மருந்தை அதிகம் செலவு செய்வேன். பின்பு தங்களுதவி கண்டு தங்களுக்கு ஸிலோன் ஏஜண்டுமாகுலு மாவேனாதலால் அதை யனுசரித்த அரை டஜன் அயத்தங்க திராவகம் (ஆறு போத்தல்) வி. பி. பார்சலில் அனுப்ப வேண்டுகிறேன்.

S. V. அக்னீஸ்வரன்.

ஐயா!

தாங்கள் எனக்கு ஒன்றரை மாதங்கட்கு முன் அனுப்பிய அயத்தங்க திராவகத்தை உபயோகித்ததில் மிகவும் குணமடைந்தேன். ஆதலின் நான் அதனைத் தொடர்ச்சியாகக் கையாட விரும்புகிறேன். எனவே தொடர்ச்சியாய்ச் சாப்பிடுவதினால் குணக்கேடு உண்டாகாதென்று தாங்கள் கருதுவீர்களாயின், உடனே வி. பி. மூலமாய் இன்னும் இரண்டு மருந்து புட்டிகளை அனுப்பக் கோருகிறேன். ஏனைய மருந்துகட்கும் அட்டவணை சாபிதா இருந்தால் அனுப்பவும்.

இங்ஙனம்

20—6—30, கண்ணபுரம். திரு. பி. எஸ். கணேஸ்வரன்.

**நான்கு மாதம் சாப்பிடக் கூடிய மருந்து விலை அணா 12.**

**வியாபாரிகள் விவரம் எழுதித் தெரிந்துக்கொள்ளலாம்.**

# கூழ்ப்பாண்ட லேகியம்



இந்த லேக்கியத்தில் ஒரு கெச்சக்காய் அளவு காலை மாலைகளில் சாப்பிட பலம் தரும், மலம் தள்ளும், சரீர உஷ்ணம் நீங்கும். மலச்சிக்கல் நீங்குவதும் கணச்சூடு விலகுவதும் இம்மருந்தின் முக்கியகுணம். எலும்புருக்கி

நோயால் இளைக்கும் தேகத்தைப் பலப்படுத்தும். குழந்தைகள் முதல் யாவரும் சாப்பிடலாம். யாதொரு பத்தியமும் இல்லை. எண்ணெய் ஸ்நானம் செய்யும் தினம் மருந்தை நிறுத்த வேண்டும். சுரம், தலைவலி யிருக்கும் காலத்தில் மருந்து சாப்பிடலாகாது. மருந்து குளிர்ச்சியைத் தாக்கூடியது.

## சில அபிப்பிராயங்கள்

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு, கூழ்ப் பாண்ட லேகியம், மீன் எண்ணெயைக் காட்டிலும் குணம் செய்கின் றது. கணச்சூட்டுக்கு மேன்மையாய்த் தெரிகின்றது. க்ஷயரோ கம் வாராதபடி தடுக்கவும் மேலானதாய்க் காணப்படுகின்றது. மலச் சிக்கல் நீங்குகின்றது. ஆனபடியால் எங்கள் எல்லா ஷாப்புக்கும் மாதா மாதம் 10 பவுன் அனுப்பவும். இந்த லெட்டர் கொண்டுவரும் ஆள்வசம் 3 வீசை கூழ்ப்பாண்ட லேகியம் கொடுத்தனுப்பவும்.

M. C. நஞ்சுண்டராவ். B. A., M. B. & C. M. மைலாப்பூர்.

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு, தங்களைப் பார்த்து வெகுநாளாய் விட்டது. நான் இளையாளை மணந்த பிறகு 'டனுக்கு' என்னும் ஊருக்கும் ஜில்லா முனிசிப்பாக இருக்கின்றேன். தங்கள் கூழ்ப்பாண்ட லேக்கியத்தினுல்தான் என் குழந்தை பெருத்து நன்றாக பலத்து இருந்தது. இப்போது எனக்குக் கூழ்ப்பாண்ட லேகி யம் 5 பவுன் வி. பி. யில் அனுப்பவேண்டியது.

இப்படிக்கு,

C. ராஜகோபாலாசாரியார் B. A., B. L.,
District Munsiff, Tanuku.

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு, 2 பவுன் கூழ்ப்பாண்ட லேகியம் வி. பி. யில் அனுப்பவும். இப்போது என் மனைவியின் தேக காந்தல் குறைந்திருக்கின்றது. அத்துடன் சிவப்பிர காச பற்பொடி 1 டசன் அனுப்பவும்.

வியாசராவ் M. A., B. L., District Munsiff, Bellary.

ஒரு பவுன் புட்டி விலை ரூபா 2.

# அயக்காந்த செந்தூரம்

இந்தச் செந்தூரத்தில் ஒரு அரிசி எடை காலை மாலைகளில் தேனில் சாப்பிட சுரம் நீங்கும். இரத்த விருத்திக்கு இது நல்ல மருந்து. பித்தப்பாண்டு, பித்தசோகை இவைகளுக்கு வெள்ளாட்டுப் பாலில் அரிசி எடை கலந்து சாப்பிட 3 நாளில் வீக்கம் நீங்கும். இரத்த விருத்திக்காகக் குளிர்ச்சியுள்ள கூழ்ப்பாண்ட லேகியத்திலாவது வேறு எந்த லேகியத்திலாவது வைத்துச் சாப்பிடலாம். மற்ற மருந்துகளைப்போல் இது மலம் கட்டாது என்பதே இதன் முக்கிய குணம். வெள்ளாட்டுப் பால் கிடைக்காவிட்டால் பசும் பாலில் சாப்பிடலாம். பாரிச வாயுவுக்கு இது நல்ல மருந்து.

இந்தச் செந்தூரம் அயம், காந்தம் இரண்டும் சேர்த்து 100 புடம் போட்டது. இதை இருமலுக்குத் தேனில் கொள்ள நீங்கி விடும். ஈளை, இருமல், காச இருமல் இவ்விரண்டையும் (பிரான்கைடிஸ் ஆஸ்தமா) மூன்று நாளில் நிறுத்தி விடும். புட்டி 1-க்கு ரூ. 3.

---

எனதன்புள்ள டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு, எனது மூத்த குமாரத்திக்குத் தாங்கள் கொடுத்த அயக்காந்த செந்தூரம் கொடுத்ததில் கைகால் வீக்கம், கண்ணில் இரத்தமில்லாமல் வெளுத்திருந்தது இப்பொழுது நீங்கி இருக்கின்றது. உப்பில்லாப் பத்தியம் மூன்று நாளும் வறுத்த உப்பு சுட்டபுளி சேர்த்து பத்தியம் மூன்று நாளும் தீர்ந்து விட்டது. இனிக் கூழ்ப்பாண்ட லேகியத்துடன் சேர்த்துப் பத்தியமில்லாமல் சாப்பிடலாம் என்றால் இக்கக் கடிதம் கண்டவுடன் 1 பவுன் கூழ்ப்பாண்ட லேகியம் வி. பி. மூலமாய் அனுப்பி வைக்கவும்.

கிருஷ்ணசாமி அய்யங்கார், சைதாப்பேட்டை.

# சிவப்பிரகாச ஜன்னித் தைலம்

நம் தேசத்தில் பாலியத்தினால் மோகத்தினாலும், தேகவலிமையினாலும், நாள் கிழமை பாராமல் ஸ்நானம் செய்து புணரும் ஸ்திரீ புருஷர்களுக்கு உண்டாகும் ஒரு தலைநோய், கழுத்து நரம்பு முதலிய வியாதிகளுக்கு இந்தத் தைலம் மிகவும் உபயோகமானது.

உபயோகிக்கும் விதம்:—இந்தத் தைலத்தைத் தலையில் தடவி இரண்டுநாளைக் கொருதரம் ஸ்நானம் செய்து வரவும். ஸ்நானம் செய்தவுடன் ரசம் சாதம் சாப்பிடவேண்டும். இப்படி 2, 3 ஸ்நானம் செய்வதற்குள் தலைவலி நின்றுவிடும். வேறு பத்தியம் கிடையாது.

5 பலம் கொண்ட எண்ணெய் விலை ரூபா 5.

கிடைக்குமிடம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,

31, வைத்தியநாத முதலித் தெரு, சென்னை.